பக்கங்கள்: பதினாறு+ VI=22

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 12 செவ்வாய்க்கிழமை (24.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:090

# யுத்த நிறுத்தத்துக்கு புலிகள் அழைப்பு

## சர்வதேச சமூகத்திற்கு நடேசன் விண்ணப்பம்



கொழும்பு, பெப்ரவரி 24

சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை ஏற்று யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்குத் தமது அமைப்புத் தயார் எனப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சர்வதேச சமூகத்திற்குத் தாம் நேற்று எழுதியுள்ள கடிதத்தில், தங்களது ஆயுதங்களைக் கீழே வைக்குப்படி கோருவது பிரச்சினைக்குத் தீர்வைத் தேடித் தராது என் றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் ஜொய் மனுவல் பரசோ, ஐ.நா.செயலாளர் நாயகம் பான் - கீ - மூன், ஐ.நா.பாதுகாப்புக் கவுன்ஸில், நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்ரோலண்ட்போர்க், ஜப்பான் பிரதமர் டரோ அஸோ ஆகிய தரப்பினருக்கு இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

'தமிழர்களின் நிலைப்பாடு குறித்து சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்துதல்' என்ற தலைப்பில் அமைந்த அக்கடிதத்தின் விவரம் வருமாறு:-

தினசரி பெரும் இனவழிப்பை எதிர் கொள்ளும் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் என்ற முறையில் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு சில தகவல்களை முன்வைக்க விரும்புகின்றோம். (2 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் அழைப்பை அரசு நிராகரித்தது

## முற்றாக அழிப்போம் என ரம்புக்வெல சூளுரை



கொழும்பு, பெப்ரவரி 24

புலிகள் விடுத்திருக்கும் யுத்த நிறுத்த அழைப்பை அரசு நேற்று உடனடியாகவே அடியோடு நிராகரித்தது.

மரணத்தின் இறுதிக்கட்டத்தில் இருக்கும் புலிகளுடன் எந்தவிதமான உடன்பாடும் செய்யப் போவதில்லை என்றும், யுத்தத்தின் மூலம் புலிகளை அடியோடு இல்லாதொழிப்பதே அரசின் ஒரே இலக்கு என்றும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல அறிவித்தார்.

அமைச்சரும், அரசின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல அரசின் சார்பில் இதை நேற்று ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியுவை வருமாறு:-

புலிகள் இராணுவ ரீதியில் பலமான நிலையில் உள்ளபோது யுத்தத்திற்குத் தயாராவதும் இராணுவ ரீதியாகத் தோல்வியுறும்போது யுத்த நிறுத்தத்திற்கு தயாராவதும் அவர்களின் பொதுவான நடவடிக்கை.

இருபது வருடங்களுக்கும் மேலாக நாம் இதைப் பல தடவைகள் கண்டுவிட்டோம். புலிகளின் இந்தத் தந்திரோபாய நடவடிக்கையில் இனியும் நாம் சிக்கமாட்டோம்.

இப்போது மரணத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் புலிகள் எஞ்சியுள்ள அவர்களின் உறுப்பினர்களைக் காப்பாற்றி மீண்டும் பலமடையும் நோக்கில் யுத்த நிறுத்தம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ.ஆர்.ரஹ்மானுக்கு 2 ஒஸ்கார் விருதுகள்

நியூயோர்க், பெப்.24



திரைப்படத் துறையினருக்கான உயரிய விருதாகக் கருதப்படும் ஒஸ்கார் விருது வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற போது தமிழகத்தைச் சேர்ந்த இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இரு விருதுகளைப் பெற்றார்.

முழுவதும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, (16 ஆம் பக்கம் பார்க்க)

# உடனடியாக யுத்த நிறுத்தம் செய்ய ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

## வன்முறையைக் கைவிடுவதாகப் பிரகடனப்படுத்த புலிகளுக்கு அழுத்தம்

கொழும்பு, பெப். 24

மோதலில் சிக்கியுள்ள மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இலங்கையில் உடனடி யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கீழே வைத்துப் பயங்கரவாதத்தையும், வன்முறையையும் நிரந்தரமாகக் கைவிடுவது குறித்துப் பிரகடனப்படுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரஸல்ஸில் நேற்று ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களுக்குத் தடை யற்ற முழுமையான மனிதாபிமான உதவிகளை (16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் கடும் மோதல்கள்

கொழும்பு, பெப்.24

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு நகரப்பகுதியை இராணுவத்தினர் முற்றுகையிட்டிருக்கின்றனர் என இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே படையினர் வசமாகியுள்ள பகுதிக்குள் ஊடுருவ முயற்சித்த விடுதலைப்புலிகள் குழுவொன்றுடன் வற்றாப்பளை பகுதியிலும், புதுக்குடியிருப்புக்கு கிழக்கிலும் கடும் மோதல்கள் இடம்பெற்றன என்றும் இராணுவத் தலை (16 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் நேற்றும் ஷெல் வீச்சு 42 பேர் பலி; 49 பேர் படுகாயம்





கொழும்பு, பெப்.24

வன்னியில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதி மீது நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் 12 சிறுவர்கள் உட்பட 32 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவற்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வலைஞர்மடம், பொக்கணை ஆகிய 'மக்கள் பாதுகாப்பு வலய' பகுதிகளில் நேற்று (16 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச் சுடர் இணைப்பிதழ் உள்ளே ▶

## வவுனியா அகதி முகாம்களுக்குச் செல்ல ஊடகவியலாளர்களுக்கு அனுமதி

கொழும்பு, பெப்.24

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை கொழும்பில் இருந்து சென்ற ஊடகவியலாளர்கள் நேற்றுப்பார்வையிட்டுள்ளனர்.

மோதல்கள் காரணமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து சுமார் 35,000 மக்கள் இதுவரை அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வந்திருக்கிறார்கள்.

இவர்கள் இப்போது வவுனியாவில் 13 முகாம்களிலும், மன்னாரில் 3 முகாம்களிலும் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் சுமார் 2,700 இற்கும் அதிக (16 ஆம் பக்கம் பார்க்க)

# கோம்பாவில் பகுதியில் புலிகளின் மண் அரண் படையினர் வசமாம்

முல்லைத்தீவு, பெப். 24

புதுக்குடியிருப்புக்கு வடமேற்கே கோம்பாவில் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் மண் அரணின் ஒரு தொகுதியை, இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவு கைப்பற்றியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

முன்னேறிச் செல்லும் இராணுவத்தினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொள்கின்றனர் எனவும் இரணைப்பாலை வரை மண் அரண் ஒன்றைப் புலிகள் (16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த நிறுத்தத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு தரப்புகளுக்கும் (இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும்) சர்வதேச சமூகம் தெரிவிக்க விரும்பிய செய்தியில் உள்ள பக்கச் சார்புத் தன்மை தொடர்பான எமது கருத்து நிலைப்பாட்டை வலியுறுத்தி வெளிப்படுத்த முன்னர், எமது விடுதலைப் போராட்டம் தொடர்பான சில அடிப்படை சரித்திரபூர்வ உண்மைகளைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

தமிழ் மக்கள் இலங்கைத் தீவினுள் ஒரு தேசமாக அமைந்துள்ளனர். இலங்கைத் தீவில் தொடர்ச்சியாக நீண்டிருக்கும் வடக்குக் கிழக்குப் பகுதி தமிழர்களின் பாரம்பரிய தாயகமாகும். ஒரு தேசமாக அமையும் உரிமையையும் சுயநிர்ணய உரிமையையும் கொண்டுள்ள ஓர் இன சமூகத்தை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அடக்கி, ஒடுக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசுகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. இந்த முயற்சியில் அச்சமூகத்தின் நிலங்கள் பறிக்கப்பட்டு அச்சமூகம் மீது இன அழிப்புத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதம்**

தன்னுடைய மக்கள் என்று உரிமை கோரும் இந்தத் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு புரிந்துவரும் அட்டூழியங்கள் வெளிப்படையாகவே அரச பயங்கரவாதம்தான்.

அரச பயங்கரவாதத்துக்கு எதிராகத் தமிழ் மக்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி வருகின்றார்கள்.

சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கான இந்தப் போராட்டம் ஆரம்பத்தில் - பெரும்பாலும் 25 வருடங்கள் - வன்முறைகளற்ற முறையிலேயே அமைந்தது.

போராட்டங்களை முன்னெடுப்பதற்கான சட்ட ரீதியான முறைமை என்று உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த வன்முறையற்ற போராட்டம், சிங்கள இன இளைஞர்களை மட்டும் கொண்டமைந்த தனது ஆயுதப் படைகள் மூலம் இலங்கை அரசுகளால் இரத்தக் களரிகளோடு அடக்கப்பட்டது.

அதேசமயம், இனக்கலவரங்கள் என்ற பெயரில் இலங்கை அரசுகளின் ஆதரவோடு கட்டவிழ்ந்த வன்செயல்கள் மூலம் பல்வேறு இன அழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழர்களுக் குச் சொந்தமான காணிகளில் அரசின் உதவியோடு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள். கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார அபிவிருத்தி போன்ற துறைகளில் தமிழர்கள் ஒதுக்கப்பட்டார்கள்.

இத்தகைய அடக்குமுறை நடவடிக்கைகளினால் சிங்கள - தமிழ் இன முரண்பாடு மிகவும் கூர்மையடைந்தது.

இலங்கை அரசின் வன்முறைப் போக்கின் முன்னால், தமிழர்களின் சாத்வீகப் போராட்டம் பயனற்று, செயலிழந்து போனமையால், தமிழரின் போராட்டம் ஆயுத மயப்படும் சூழலை புறநிலைமைகள் ஏற்படுத்தின. இது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோற்றத்துக்கு வழி செய்தது. அந்த அமைப்பு, தமிழரின் அந்த ஆயுதப் போராட்டத்துக்குத் தலைமைத்துவம் அளித்தது.

**தமிழ் மக்களின் அரசியல் இலக்கு 1977 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டது**

தமிழ் மக்களின் அரசியல் இலக்கைத் தீர்மானித்தது தமிழ் மக்களேயன்றி விடுதலைப் புலிகள் இயக்கம் அல்ல. 1977 இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு மூலம் தங்களுடைய அரசியல் இலக்கு எதுவென்பதைத் தமிழர்கள் உலகுக்குப் பிரகடனப்படுத்தினார்கள். தமிழர்களின் பாரம்பரிய தாயகமான, இணைந்த வடக்கு - கிழக்கில் சுதந்திர தேசம் ஒன்றை ஸ்தாபிப்பது என்ற தமிழ்க் கட்சிகளின் முடிவுக்கு ஆதரவாகத் தமிழ் மக்கள் வாக்களித்தனர்.

தமிழ் மக்களின் அந்த ஜனநாயகத் தீர்ப்பை நிறைவு செய்யும் தேசியக் கடமையை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பொறுப்பேற்றது.

தமிழர்களின் இந்த விடுதலைப் போராட்டம்,கடந்த முப்பது ஆண்டுகளாக அவர்கள் நிகழ்த்திய வீரம் செறிந்த இராணுவச் சாதனைகளினால் உலகின் கவனத்தை ஈர்த்தது. 'விடுதலைப் போராளிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அதி உயர்ந்த பற்றுதித் தியாகத்தின் மூலமே இது எட்டப்பட்டது.

எப்போதெல்லாம் இராணுவ ரீதியில் புலிகளின் கைகள் ஓங்கினவோ, அப்போதெல்லாம் அமைதிப் பேச்சு மூலம் அரசியல் தீர்வுகாண முயல்வது போல இலங்கையில் ஆளும் தரப்புகள் நடித்தன. ஆனால், தனது ஆயுதப் படைகளைப் பலப்படுத்தி, ஸ்திரப்படுத்துவதற்கான கால அவகாசத்தைப் பெற்றதும், இலங்கையின் ஆளும் தரப்பு பேச்சுக்களைக் குழப்பி, யுத்தத்துக்கான சூழலை மீள உருவாக்கிவிடும்.

ஆயுதப் போராட்டம் தொடங்கிய பின்னர் முதலில் இடம்பெற்ற 1985 இன் திம்புப் பேச்சில் இருந்து, நோர்வே அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட 2002 யுத்த நிறுத்தம் மற்றும் அதைத் தொடர்ந்த ஐந்து ஆண்டு கால சமாதானப் பேச்சு வரை - சகல பேச்சுகளின் போதும் இலங்கை அரசு கள் உலகையும், தமிழ் மக்களையும் ஏமாற்றும் இந்த நாடகத்தையே முன்னெடுத்தன.

நோர்வே அனுசரணையுடனும் இணைத் தலைமை நாடுகளின் ஆதரவுடனும் இலங்கை அரசும் புலிகள் அமைப்பும் மூன்று முக்கிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டன.

**அரசினாலேயே அமைதிக்கு இறுதி அடி விழுந்தது**

2002 இன் யுத்த நிறுத்த ஒப்பந்தம், ஆழிப் பேரலை அனர்த்த நிவாரண நடவடிக்கைக் கான நிர்வாகக் கட்டமைப்பு, வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்கான 'வடக்கு - கிழக்கு உடனடி மனிதநேய மீள்கட்டமைப் புக்கான செயலகம் (சிரான்)' ஆகியவை தொடர்பான மூன்று உடன்பாடுகளையும் நிராகரித்து ஒதுக்கிய இலங்கை அரசின் செயலால் அமைதிக்கு இறுதி அடி வீழ்ந்தது.

யுத்தம் மூலம் தீர்வு காண முயலவேண்டாம், பதிலாக பேச்சு மூலம் அரசியல் தீர்வு காண முயலுங்கள் என்று சர்வதேச சமூகம் மீண்டும் மீண்டும் விடுத்த அழைப்பை இலங்கை அரசு எவ்வாறு உதாசீனம் செய்தது என்பதை உலகு நன்கு அறியும்.

சிங்கள - தமிழ் இன முரண்பாடு தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாட்டைப் புலிகளைத் தவிர வேறு எவரும் சரியாக அடையாளம் காணவில்லை. இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணவே தொடர்ந்து முயற்சிக்கின்றது, அவர்கள் அதற்கு அரசியல் தீர்வு எப்போதும் காணவே மாட்டார்கள் என்பதைப் புலிகள் அமைப்புத்தான் நீண்ட காலமாகவே கூறி வருகின்றது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று பிரசாரப்படுத்துவதன் மூலம், அரசியல் தீர்வுக்கு மாறாகத் தான் முன்னெடுத்து வரும் இராணுவத் தீர்வு முறையை சர்வதேசத்துக்கு நியாயப்படுத்தி வருகின்றது இலங்கை அரசு.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று அடையாளப்படுத்துவது போன்றே 'பாதுகாப்புக் காரணம்' என்ற பெயரில் சில மனித நேயத் தொண்டர் அமைப்புகளையும் பத்திரிகையாளர்களையும் அது வெளியேற்றியும் வருகின்றது. தமிழ்ப் பொதுமக்களின் உரிமைகளை சிங்கள ஆயுதப் படைகள் மீறுகின்றன என்பதை மேற்குலக இராஜதந்திரிகள் அல்லது ஊடகவியலாளர்கள யாரேனும் துணிச்சலுடன் கூற முன்வருவார்களாயின் அவர்கள் உடனடியாக 'வெள்ளைப் புலிகள்' அல்லது பயங்கரவாதிகளாக வகைப்படுத்தப்பட்டு விடுகிறார்கள்.

இலங்கை அரசு புரிந்து வரும் அட்டூழியங்களை, அது 'தேசம்' என்ற கட்டமைப்பைக் கொண்ட காரணத்தால் சகித்தும் -

விடுதலைப் புலிகள் நடத்தும் நீதியான போராட்டத்தை 'தேசம்' என்ற கட்டமைப்பை அவர்கள் கொண்டிராத காரணத்தால் நிராகரித்தும் -

பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் உலக மக்கள்.

**1956 இல் ஆரம்பமாகிய இனஅழிப்பிலிருந்து இதுவரை 2 லட்சத்துக்கும் அதிகமான தமிழர் கொல்லப்பட்டனர்**

ஹிட்லரின் அரசில் இருந்து, ருவாண்டா அரசு வரை, சூடான் அரசு வரை, இனவழிப்பை அரசுகளே மேற்கொண்டு வருகின்றன. இலங்கை அரசும் தமிழர்களுக்கு எதிராகப் பலவிதமான இனவழிப்புகளை மேற்கொண்டுள்ளது. 1956இல் ஆரம்பித்த இந்த இனவழிப்புச் சரித்திரம் இன்று விசாலமாகியிருக்கின்றது. 1956 முதலான இந்த இனவழிப்பு சரித்திரத்தில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

சுதந்திர தேசம் ஒன்றுக்கான தமிழர்களின் அரசியல் அபிலாஷைக்கு ஆதரவளிக்க சர்வதேச சமூகம் பின்னடித்து வந்தாலும், தமிழ் - சிங்கள பிணக்குக்கு சுதந்திர தேசம் ஒன்று மட்டுமே நிலையான தீர்வாக அமையும் என்ற எமது கருத்தை மீளப் பரிசீலிக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

சிங்கள அரசினாலும், சிங்களப் படைகளினாலும் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் படுகொலைகளினால் தமிழ் மக்கள் விரக்தியுற்று, அதைரியமடைந்துள்ளனர்.

தங்களது பேரிழப்புகள், வெளியே தெரியவராத துன்ப துயரங்கள், வாட்டி வதைக்கும் மோசமான அனுபவங்கள் என்பன தாங்கள் ஒன்றிணைந்து வாழ முடியும் என்ற நம்பிக்கையைத் தமிழர்களுக்குத் தகர்த்துவிட்டன. இது, இலங்கைக்குள் தமிழர்களும்,சிங்களவர்களும் அமைதியாக சமத்துவத்துடன் வாழ்வதற்கு எப்போதும் அனுமதிக்க மாட்டாது என்ற நிலையை ஏற்படுத்திவிட்டது.

இதுதான் இந்தத் தீவின் இனத்துவ - அரசியல் யதார்த்தமாகும். வன்னியில் இப்போது அரங்கேறும் மிருகத்தனமான கொடூரங்கள் இந்த இனத்துவ - அரசியல் யதார்த்தத்தை மேலும் இறுக்கமடையச் செய்கின்றன.

யுத்தத்தில் போராடும் தரப்புகள் தங்களுக்குள் பயன்படுத்தும் பீரங்கிகள், பல்குழல் ஏவுகணைச் செலுத்திகள் போன்ற ஆயுதங்கள், இலங்கை அயுதப் படைகளினால் தமிழ்ப் பொதுமக்கள் மற்றும் இடம்பெயர்ந்த அகதிகளின் முகாம்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் இத்தகைய தாக்குதல்களில் உடல் சிதறிப் பலியாகின்றனர், காயமுறுகின்றனர்.

**வன்னியில் 2,000க்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்**

இலங்கை ஆயுதப் படைகளின் இத்தகைய தாக்குதல்களினால் கடந்த சில வாரங்களாகத் தினசரி ஐம்பது முதல் நூறு தமிழ் சிவிலியன்கள் கொல்லப்படுகின்றார்கள். ஏற்கனவே இரண்டாயிரத்துக்கும் அதிகமான சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர், ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். என்ன நடக்கின்றது என்பது புரியாமல், உலகம் இத்தகைய மிக மோசமான மனிதப் பேரவலத்தைப் பார்த்துக்கொண்டு அமைதி காப்பது வலியைத் தருகின்றது.

இருபத்தியோராம் நூற்றாண்டின் மிக மோசமான இன வழிப்பை தமிழீழத்தின் தமிழர்கள் எதிர்கொண்டு நிற்கின்றார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் -

சர்வதேச சமூகத்தின் யுத்த நிறுத்தக் கோரிக்கையை - மனிதப் பேரவலத்துக்கு முடிவு கட்டும் நன்நோக்கத்துடன் - ஏற்றுக்கொள்ளப் புலிகள் தயார்.

இத்தகைய யுத்த நிறுத்தம், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் அமைதிப் பேச்சாக மலர வேண்டும் என்றும் புலிகள் விரும்புகின்றனர்.

அதேசமயம், புலிகள் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்து சரணடைய வேண்டும் என்ற கோரிக்கை இப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு உதவாது என்பதை உலகம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புலிகளின் ஆயுதங்கள்தான் தமிழ் மக்களின் பாதுகாப்பு அரண் என்பதும், அரசியல் விடுதலைக்கான கருவி என்பதும் அரசியல் யதார்த்தமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பல சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றது. அப்போதெல்லாம் புலிகள் அமைப்பு ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என யாரும் வலியுறுத்தவில்லை.

**தமிழர்களின் பாதுகாப்பு புலிகளின் ஆயுதங்களிலேயே தங்கியுள்ளது**

தமிழர்களின் பாதுகாப்பு புலிகளின் ஆயுதங்களிலேயே தங்கியுள்ளது.

சர்வதேச சமூகத்தின் ஆதரவு மற்றும் உறுதியுடன் நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்று தமிழ் மக்களுக்குக் கிட்டும்போது புலிகளின் ஆயுதங்களுக்குத் தேவையில்லை என்ற ஒரு நிலைமை ஏற்படும்.

மிகப் பயங்கரமான இன அழிப்பை தமிழர்கள் எதிர்கொண்டுள்ள சமயத்தில் - அரசியல் தீர்வுக்கான எந்த முயற்சியும் இல்லாத போது - ஆயுதங்களைப் புலிகள் கீழே வைக்க வேண்டும் என எதிர்பார்ப்பது சுதந்திரத்துக்கான நூற்றாண்டுகால மனிதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாகும். அதேசமயம், அது இலங்கை அரசின் இன அழிப்பு யுத்தத்தைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதுமாகும்.

ஆகையினால், புலிகளின் ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு கோரிக்கை விடு வதை விடுத்து, தமிழ் மக்களுக்கு எதிரான இன வழிப்புத் தாக்குதல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சர்வதேச சமூகத்திடம் புலிகள் அழைப்பு விடுக்கின்றார்கள்.

அதேசமயம், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை விடுத்து அரசியல் தீர்வை நாடுமாறு இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவும் வேண்டும்.

வன்னியில் உள்ள தமிழர்களின் பேரிடர் நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, அவர்கள் பாதுகாக்கப்பட்டு, அவர்களின் உணவு மற்றும் மருத்துவ தேவைகள் நிறைவுசெய்யப்படத்தக்க வகையில் யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்படுவதற்கு சர்வதேச சமூகம் தனது வலிமைக்கு உட்பட்ட அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி, அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படுவதற்கான சர்வதேச சமூகத்தின் அனைத்து முயற்சிகள் தொடர்பாகவும் அச்சமூகத்துடன் கலந்துரையாடி, ஒத்துழைத்து, இணைந்து செயலாற்ற நாம் தயார் என்பதையும் அச்சமூகத்துக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடிப் பொதுநூலக உத்தியோகத்தர் சு.தர்மகுலசிங்கம் அவர்களின் அன்புத் தந்தை

**சி.சுப்பிரமணியம்**

அவர்கள் 21.02.2009 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

## விற்பனைக்கு

J.I - xxxx என்னும் இலக்கமுடைய 250 ELF, 40 - xxxx ISUZU லொறி என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 4166111 (82993)

## மரண அறிவித்தல்கள்

### நீக்கிலாஸ் சூசைப்பிள்ளை



யாழ்ப்பாணம் 16, பேக்கரி லேன், ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட நீக்கிலாஸ் சூசைப்பிள்ளை 22.02.2009 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - லூர்த்தம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ் அலெக்ஸ் (வவி) நோர்வேயில் வசிக்கும் Dr.பேர்ணாட்ஷோ (வரதன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுரோமி, சுமித்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌதம், சிந்தியா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் காலஞ்சென்ற திரேசம்மா, மரியம்மா, அக்னஸ் ஆகியோரின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்ற அடைக்கலம், தேவராஜா (தினக்குரல்), இரட்ணசோதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.02.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து அடைக்கல மாத தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுத்த பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16, பேக்கரி லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
வரதன் மற்றும் குடும்பத்தினர். (சகோதரன்).

### கலிஸ்து இராயப்பு (ஓய்வு பெற்ற ஆசிரியர்)



பலாலியைப் பிறப்பிடமாகவும், போயிட்டி ,சீந்திப்பந்தலை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியருமான கலிஸ்து இராயப்பு 20.02.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கலிஸ்து- ஆனாசி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா-ஞானப்பு தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சந்தலூசியாவின் (செல்வம்) அன்புக் கணவரும் மல்லிகா, இராஜகுமார் (கிறீஸ்), இராஜகுமாரி, சுகுமாரி, விஜயசிறி, (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதன், புஸ்பா, காலஞ்சென்ற ரயிற்ரஸ், துரைரத்தினம், ஜெயசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுஜீவ்(டோகா), றஜீவ் (டோகா), ஜெகஜீவ் (டோகா), வேஜின், அஜீவ், சுஜிவா (கொழும்பு), கபிலஸ், புறூட்டஸ், லக்சிக்கா, வேறட், கீர்த்திக்கா, சுஷத்திக்கா, வியாட், வருணன், (கொழும்பு), விப்லன், ஜபிதா, தட்ஷா (கனடா), கரிஸ் (கனடா), றொக்ஷன்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (24.02.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00மணிக்கு போயிட்டி புனித லூர்து அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் போயிட்டி லூர்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய் யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வ.மல்லிகா (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசின் இராணுவ வெற்றியில் நம்பிக்கை கொண்டுள்ள உலகு

இலங்கையில் கட்டவிழும் மிக மோசமான மனிதப் பேரவல நிலையை ஒட்டி ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் மேரி றொபின்ஸன் கடும் அதிர்ச்சி வெளியிட்டுள்ள அதேசமயம், வேறு சில விடயங்களையும் சுட்டிக்காட்டிருக்கின்றார்.

இலங்கையின் இன்றைய நிலைமை, சூடானின் டார்பூர் மற்றும் கொங்கோ நிலைவரங்களுடன் ஒப்பிடத்தக்கவை என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதேசமயம், இலங்கையில் அளவுக்கு அதிகமாகப் படைப்பலம் யுத்தத்தில் பிரயோகிக்கப்படுகின்றமையை நாம் கேள்விக்கு உட்படுத்தாவிட்டால், வாழ்வின் - உயிரின் - பெறுமதியை நாங்கள் (உலகம்) குறைத்து மதிப்பிட்டதாக அது ஆகிவிடும் என அவர் எச்சரித்துள்ளார்.

அத்துடன், இலங்கை அரசு தான் வெற்றி பெறும் நிலையில் உள்ளதாக உலக நாடுகளை நம்ப வைத்துள்ளதால், இலங்கையில் யுத்தநிறுத்தம் ஏற்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கும் மனோ நிலையில் ஐ.நாவோ அதன் செயலாளர் நாயகமோ இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இது தான் இன்றைய இலங்கை நிலைமை. ஓர் இனத்தின் உரிமைக் கோரிக்கைக்கான ஆயுதப் புரட்சி - அல்லது கிளர்ச்சி - இராணுவ ரீதியிலேயே அடக்கப்படக்கூடிய வாய்ப்பும், சூழ்நிலையும் தென்படும்போது, அடங்கிவிடப்போகும் அத்தரப்புக்கு, நியாயம் பற்றிப் பேசி, உயிர் வாயுவை ஏன் ஊட்டுவான் என்ற சிந்தனையே இப் போது சர்வதேச மட்டத்தில் மேலோங்கி நிற்கின்றது.

1994 - 1995 இலும், பின்னர் 2001 - 2006 இலும் இடம்பெற்ற இலங்கை அமைதிப் பேச்சுகளின் போது விடுதலைப் புலிகள் அமைப்பு, இலங்கை இராணுவத்துக்கு சவால் விடக்கூடிய இராணுவக் கட்டமைப்பைக் கொண்டு விளங்கியது.

அதனால், இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினரையுமே ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுத்து விட்டு, பேச்சு மேசைக்கு வந்து, அமைதித்தீர்வு காணுங்கள் என்று சர்வதேசம் வற்புறுத்தியது.

ஆனால் இப்போதோ இராணுவ வலுச் சமநிலையில் மட்டுமல்லாமல், அதையடுத்து சர்வதேச நிலைப்பாட்டிலும் பெரிய மாற்றம்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான முன்னாள் ஆணையாளர் றொபின்ஸன் குறிப்பிடுகின்றமை போல, விடுதலைப் புலிகளை நிரந்தரமாக அடக்கி இலங்கை அரசு வெற்றி கொண்டுவிடும் - இராணுவ மேலாதிக்கத்தை நிரந்தரமாக நிலைநாட்டிவிடும் - என்ற நம்பிக்கை இலங்கை அரசுத் தரப்பின் செய்தி மட்டங்கள் ஊடாக உலகுக்கு உணர்த்தப்பட்டு நம்பவைக்கப்பட்டுள்ளது.

அதனாலேயே முன்னர் இலங்கை அரசுக்கு சமனான இராணுவ வலுச்சமநிலையில் இருந்த புலிகளை ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுத்து அமைதித் தீர்வுக்கு முயலுமாறு வலியுறுத்திய சர்வதேசம், இப்போது ஆயுதங்களைக் கீழே வைத்துச் சரணடையுங்கள் என்று கோருகின்றது.

அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட சமயம் இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் அனுசரணைத் தரப்பாகச் செயற்பட்ட நோர்வே, இப்போது கடலில் வேகமாக ரோந்து சென்று கண்காணிக்கும் அதிவேகப் படகுகள் தொடர்பான தனது தொழில்நுட்பத் தகைமையை இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்கு உதவியாக வழங்கி, இலங்கை அரசுக்கு இராணுவ ஒத்தாசை செய்கின்றது.

அதேபோல இலங்கை அமைதி முயற்சிகளுக்கு உதவுவதற்காக அப்போது தனது விசேட சமாதானத் தூதுவர் ஒருவரையே இலங்கைக்கென நியமித்து, சமாதான முயற்சிகளில் ஈடுபாடு காட்டிய ஜப்பான், இப்போது ஐ.நா.பாதுகாப்புக் கவுன்ஸிலின் சுழற்சி முறைத் தலைமைத்துவம் தன்னிடம் இருக்கும்போது அதை வைத்துக் கொண்டு புலிகளுக்கு எதிராக நெருப்பெடுக்கின்றது.

இப்படியெல்லாம் முன்னர், அமைதி முயற்சிகளுக்கு ஒத்துழைக்கும் சமாதானப் பிரியர்களாகக் காட்டிக் கொண்ட நோர்வே, ஜப்பான் போன்ற தேசங்களே, புலிகளை ஆயுதங்களைக் கீழே வைத்து, சரணாகதி அடையுங்கள் என்று கூறும் அளவுக்குத் தடம் மாறியுள்ளன என்றால், அதற்குக் காரணம் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான முன்னாள் ஆணையாளர் றொபின்ஸன் குறிப்பிடுகின்றமை போல இந்த யுத்தத்தில் இலங்கை அரசுப் படைகள் இறுதியாக வெற்றியீட்டிவிடும் என்ற நம்பிக்கை சர்வதேச தரப்புக்கு ஊட்டப்பட்டிருப்பதுதான்.

இலங்கையில் அமைதி முயற்சிகள் வெற்றிகரமாகத் தொடர வேண்டும் என்றால், இங்கு இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிலவும் இராணுவ வலுச் சமநிலை தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்று அமைதி முயற்சி சமயத்தில் அனுசரணைத் தரப்பாக இருந்துகொண்டு முன்னர் வற்புறுத்திய நோர்வே, இப்போது ஆயுதங்களைக் கீழே வைத்து இலங்கை அரசுப் படைகளிடம் புலிகள் சரணாகதி அடையவேண்டும் என்று கூறும் அளவுக்கு 'குத்துக் கரணம்' அடித்திருப்பது தமிழர்களைப் பொறுத்தவரை பெரும் துரதிஷ்டமே.

அதற்குக் காரணம், தமிழர் தரப்பின் பேரம் பேசும் வலுவாகக் கருதப்பட்ட புலிகளின் இராணுவ வலிமையை விட இலங்கைப் படைகளின் வலிமை மிகவும் மேலோங்கிவிட்டது என்ற நம்பிக்கைதான்!

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிங்களத் தாதியர்கள் நியமனம்

## கடந்த வாரம் கடமைகளைப் பொறுப்பேற்றனர்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.போதனா வைத்தியசாலையில் 26 வருடங்களுக்குப் பின் தென்னிலங்கையில் இருந்து சிங்கள தாதியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த வாரம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 26 வருடங்களுக்கு முன்னர் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள தாதியர்கள் மற்றும் மருந்துக் கலவையாளர்கள் என பல்துறைசார் உத்தியோகத்தர்கள் கடமையாற்றினார்கள்.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தென்னிலங்கையிலிருந்து தாதிமார்களோ, ஏனைய உத்தியோகத்தர்களோ யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கடமைக்கு வருவதில் பின்னடித்து வந்தனர்.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டமையால் முதற்கட்டமாக 7 சிங்களத் தாதியர்கள் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டு கடந்த வாரம் கடமைக்குச் சமூகமளித்துள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் தென்னிலங்கையிலிருந்து சிங்களத் தாதியர்களும் பரிபாலகர்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரிய நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மருந்துக் கலவையாளர்கள் மற்றும் ஏனைய துறைசார் உத்தியோகத்தர்களும் நியமிக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்கனவே சிங்கள வைத்தியர்கள் கடமையாற்றி வருகின்றனர். அவர்களின் பாதுகாப்புக் கருதி போதனா வைத்தியசாலை வளாகத்தில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (50-9)

# அமெ. செனட் வெளிவிவகாரக் குழு இலங்கை குறித்து இன்று விசாரணை

வாஷிங்ரன்,பெப்.24

இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாக அமெரிக்க செனட்டின் வெளிவிவகாரக் குழு இன்று விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

அமெரிக்க செனட்டின் மிகவும் செல்வாக்கு வாய்ந்த கட்டமைப்பான வெளிவிவகாரக் குழு இலங்கையில் தொடரும் இராணுவ மோதல்கள் மற்றும் மோசமடையும் மனித உரிமை, மனிதாபிமான நிலைவரம் குறித்துத் தனது இந்த விசாரணைகளின் போது அதிக கவனம் செலுத்தவுள்ளது என்று கூறப்படுகின்றது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளரான செனெட்டர் ஜோன் கெரி விசாரணைக்குத் தலைமை வகிப்பார்.

இலங்கைக்கான அமெரிக்க முன்னாள் தூதுவர் ஜெவ் லன்ஸ்டெட், சர்வதேச மனித உரிமைக்கள் காப்பகத்தைச் சேர்ந்த அனா நெய்ஸ்டட் மற்றும் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழுவின் பொப் டயடஸ் ஆகியோர் செனட் குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கவுள்ளனர். (அ-சி)

# தமிழ் மொழிபெயர்ப்பிற்கு ஐ.நா. அதிகாரி அரசில் தங்கியிருந்தமை குறித்து சர்ச்சை

நியூயோர்க், பெப். 24

இலங்கைக்கு கடந்த வாரம் விஜயம் மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் தனது சொந்த மொழி பெயர்ப்பாளர் இன்றியே வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களுக்குச் சென்றார். மொழி பெயர்ப்பிற்கு இலங்கை அரசுத் தரப்பையே அவர் நம்பியிருந்தார் - தங்கியிருந்தார் - என இணையத்தள செய்திச் சேவையொன்று தெரிவித்துள்ளது.

ஜோன் ஹோம்ஸிற்கு பல விடயங்கள் உண்மைக்குப் புறம்பான விதத்தில் மொழிபெயர்க்கப்பட்டன என்றும் ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் இதனை உறுதிப்படுத்தப் பின்னடிக்கின்றனர் என்றும் அந்தச் செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளை மையமாகக் கொண்ட அந்த செய்திச் சேவையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் இலங்கையில் அந்த அரசின் வழிகாட்டுதலின் கீழ்தான், இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்டார்.இவ்விடயம் அவரது பக்கச்சார்பின்மை மற்றும் பொதுமக்களுக்கான அர்ப்பணிப்புக் குறித்து இலங்கையிலும் அதற்கு அப்பாலும் கேள்வியை எழுப்பியுள்ளது.

நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பேச்சாளர்கள் ஜோன் ஹோம்ஸின் விஜயம் குறித்து அவர் இலங்கை விஜயத்தை முடித்து அங்கிருந்து புறப்பட்ட பின்னரும் கூடக் கருத்துத் தெரிவிக்க மறுக்கின்றனர்.

எனினும் ஹோம்ஸ் தனது சொந்த மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்டிராததும் அரசின் மொழிபெயர்ப்பை நம்பியிருந்ததும் உண்மை. இதனை இலங்கை யர்களும் உறுதி செய்கின்றனர்.

எனினும் இது குறித்த கேள்விக்கு ஐக்கிய நாடுகள் பதிலளிக்கத் தயங்குகின்றது.

ஹோம்ஸ் இலங்கை அதிகாரிகளின் மொழிபெயர்ப்பையே நம்பியிருந்தார் எனவும், பெண்மணியொருவர் தனது மகனை இராணுவம் பிடித்துச் சென்றதாகத் தெரிவித்த வேளை விடுதலைப் புலிகள் பிடித்துச் சென்றனர் என ஹோம்ஸிற்கு மொழிபெயர்க்கப்பட்டு தெரிவிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறித்து ஐக்கிய நாடுகள் அதிகாரிகளிடம் கேட்கப்பட்டது. எனினும் அவர்கள் இது குறித்து இன்னமும் உறுதிசெய்யவில்லை.

இதேபோன்று ஹோம்ஸ் அச்சமயம் ஒலிப்பதிவுக் கருவிகளை வைத்திருந்தாரா என்ற கேள்விக்கும் பதில் கிடைக்கவில்லை.- இப்படி அந்தச் செய்தியில் தெரி விக்கப்பட்டது. (அ-சி)

# சட்டத்துறை மாணவர்கள் விடயத்தில் யாழ்.பல்கலை நிர்வாகம் பாராமுகம்

## கல்வியை இடைநிறுத்தும் நிலை என்று கண்டனம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத் துறை மாணவர்கள் தமது கல்வியை சீராக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நிர்வாகம் அவர்கள் விடயத்தில் பாராமுக மாக நடக்கிறது. அவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

- இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சட்டத்துறையின் சட்ட மாணவர் சங்கம் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

மாணவர் சங்கம் இது விடயமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப் பிட்டுள்ளவை வருமாறு:-

யாழ்.பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரையும் மிக மோசமான நெருக்கடிகளை அது சந்தித்து வருகிறது.

யாழ் குடாநாட்டில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது முதல், சட்டப்பிரிவு ஒன்றையாவது ஆரம்பிக்க வேண்டுமென்ற பல குரல் களின் பேரவா கடந்த முப்பது ஆண்டுகளின் பெருமுயற்சியின் பின்னர் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி நிறைவேறியது.

கடந்த 2005 ஆம் ஆண்டு இரண்டு கனிஷ்ட விரிவுரையாளர்களை மட்டுமே நம்பி கற்றற் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

அன்று முதல் இன்றுவரை எமது சட்டத்துறையானது பல இன்னல்களையும், பல நெருக்கடிகளையும் நாட்டில் யுத்த சூழல் காரணமாகவும்,வேறு பல நிர்வாக அசமந்த போக்குகளினாலும் சந்தித்து வருகின்றது.

எமது கற்றற் செயற்பாடுகள் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம், தொடர்ந்து செயற்படுத்த முடியாதவாறு விரிவுரை யாளர்களோ, துறைத்தலைவரோ யாருமற்ற நிலையில் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறாக ஏறத்தாழ 7 மாதங்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின் ஏனைய அனைத் துத் துறைகளும் சுமூகமாக இயங்கிக் கொண்டிருந்த வேளையில், யாழ் பல்கலைக்கழக சட்ட மாணவர்களாகிய நாம் வீடுகளில் உறங்கிக் கொண்டிருக்கவேண் டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டி ருந்தோம்.

இந்நிலையில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் பாராமுகமான அசமந்தப் போக்கினால் எமது கற்றற் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கக்கூடிய எதுவித சாத்தியங்களும் இல்லை என்பதை வலுவாக உணர்ந்த நாம் பல்கலைக் கழகத்தின் மீது உயர்நீதிமன்றில் சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு தள்ளப் பட்டோம்.

### வசதிகள் அற்ற நிலையில் கல்விச் செயற்பாடுகள்

இதன் பயனாக, நீதிமன்ற உத்தரவின் பேரில் மீண்டும் எமது கற்றற் செயற்பாடுகள் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

எதுவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையிலும், மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்ற முடி யாத நிலையிலும், தனியே கல்வி செயற்பாடுகளை மட்டுமே கொழும்பில் தொடர வேண்டிய இக்கட்டான நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

கல்விச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூலக வசதிகளோ, விடுதிகளோ எதுவுமற்ற நிலையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறோம்.

தங்குமிடத்திற்கும், உணவிற்கும் அதிக செலவுகளைச் செய்யவேண்டிய நிலையில் இருக்கின்ற நாம், பல்கலைக் கழகத்தின் அசமந்தப்போக்கின் காரணமாகக் கிடைக்கப்பெற வேண்டிய எந்த உதவித்தொகைகளையும் (மகாபொல,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

| | |
|---|---|
| மாசி 13 | 25.02.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | அமாவாசை |
| | காலை 07.36 வரை |
| நட்சத்திரம்: | சதயம் |
| | மு.இ. 09.29 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | 12.29 - 01.59 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### அகஸ்தின் அல்பிரட்
(இளைப்பாறிய ஆசிரியர்)

நெடுந்தீவு கிழக்கு, 14 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கச்சேரி கிழக்கு வீதியை வதிவிடமாகவும் கொண்ட அகஸ்தின் அல்பிரட் 22.02.09 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து இன்று (24.02.09) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணியளவில் பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் நல்லடக்கத்துக்காக யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 14/1 கச்சேரி கிழக்கு, ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### செல்வதுரை விவேகானந்தன் (ஜே.பி)

ம்ல்லாகம் புகையிரத நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, நாரஹேன்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்வதுரை விவேகானந்தன் அவர்கள் 22.02.2009 அன்று காலமானார். அன்னார் ஓய்வு பெற்ற லிகிதரும் யாழ்.கச்சேரி, முன்னாள் யாழ்.மாவட்ட சபைத் தலைவரின் இணைச் செயலாளரும், முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் பொதுசன தொடர்பு அதிகாரியும், அளவெட்டி- மல்லாகம் ப.நோ. கூ.சங்க முன்னாள் தலைவரும், முன்னாள் யாழ்.செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தரும் ஆவார்.

இவர் காலஞ்சென்ற செல்வதுரை - ராசம்மா தம்பதிகளின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற சேனாதிராஜா - பாக்கியவதி தம்பதிகளின் மருமகனும், சுபத்திராதேவியின் (ஓய்வுபெற்ற பதில் அதிபர், யாழ்.இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்) அன்புக் கணவரும், சுதாகரன், விவேகா ஆகியோரின் அன்புத் தந்தையும் திலக்ராஜ்ஜின் அன்பு மாமனாரும் ஜீவிகாவின் பாசமிகு பேரனும் ஜெகதீஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வேலாயுதம், செல்வநாயகம், நாகேந்திரன், ராஜராஜேஸ்வரி, ரங்கநாயகி, ரமணி, ஜெயந்தி, வசந்தி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24-02-2009) காலை 9 மணி முதல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலை யில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கனத்தை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

BP, 1/8, மனிங்ரவுன் தொடர்மாடி,
மங்களா வீதி,
கொழும்பு-08,
தொ.பே:-2670566,
2684023

தகவல் :
மனைவி,
பிள்ளைகள்

## நினைவலைகள்

ஈராண்டு | ஓராண்டு



அமரர் தம்பிப்பிள்ளை சிவகுரு

மலர்வு 10.01.1925 உதிர்வு 01.01.2007



அமரர் சிவகுரு தங்கம்பிள்ளை

மலர்வு 01.05.1935 உதிர்வு 24.02.2008

ஓராண்டு, ஈராண்டு சென்றாலும் - உங்கள் பாசமுகம் மறப்போமா!

626/7, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## சட்டத்துறை ...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசிறி) காலதாமதமின்றி பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையில் தவித்துக்கொண்டிருக்கிறோம்.

இது தொடர்பாக, எத்தனையோ தடவைகள் பல்கலைக்கழக நிர்வாகத்தினரிடம் முறையீடு செய்தும் எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் எடுக்காதது மாணவர்கள் மத்தியில் பெரும் விரக்தியையும், வெறுப்பையும் தோற்றுவித்துள்ளது.

அது மட்டுமல்லாது 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்று முடிந்த பரீட்சைகளுக்கான பெறுபேறுகளும் அதன் பின்னர் நடைபெற்ற பரீட் சைப் பெறுபெறுகளும் ஒன்றரை வருடங்களாகியும் இதுவரை வெளியிடப் படவில்லை. இவ்வாறு பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாததன் காரணமாக பல்கலைக்கழக விதிகளின் படி அடுத்த ஆண்டுக்கல்வியை தொடரமுடியாத இக்கட்டான நிலையை அடைந்திருக்கின்றோம். இதன் காரணமாக மீண்டும் எமது கல்விச் செயற்பாடுகள் முடங்கிப் போகும் அபாயநிலை தோன்றியிருக்கிறது. மேலும் பல்கலைக்கழக பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் வெளியிடங்களில் இருந்து கிடைக்கும் உதவித் தொகைகளையும் எமது மாணவர்கள் இழந்துள்ளார்கள். இவ்வாறான பல்கலைக்கழக நிர்வாகத்தின் செயற்பாடுகள் எம்மத்தியில் பலத்த சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

அத்துடன் Attorney at low பரீட்சை யில் தோற்றுவதற்கு சட்டக்கல்விப் பேரவையிடம் (Council of legal education) யாழ்.பல்கலைக் கழகம் அனுமதி பெறவேண்டும். ஆனால், இவ் அனுமதி இதுவரை பெறப்படவில்லை. இது நாம் இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் இப் பரீட்சையில் தோற்றுவதை சாத்தியமற்றதாக்கிவிடும்.

மேலும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் ஒரேயொரு மண்டபத்தில் இரண்டு வருடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு விரிவுரைகளை நடத்த வேண்டிய துர்ப் பாக்கிய நிலையிலும், வருகை தரும் விரிவுரையாளர்களின் பலத்த கண்டனங்களுக்கும், விமர்சனங்களுக்கும் மத்தியிலும் எமது கல்வியைத் தொடர்ந்து கொண்டு இருக்கின்றோம்.

**எதிர்காலத்தைக் கேள்விக்குறி ஆக்கியுள்ளது**

இது தொடர்பாக மாற்று ஏற்பாடுக ளைச் செய்து தரும்படி பல தடவைகள் பல்கலைக் கழக நிர்வாகத்திடம் கேட்ட போதும் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இன்றுவரை கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இயங்கும் யாழ். பல்கலைக்கழகச் சட்டத்துறைக்கு யாழ். பல்கலைக்கழக நிரந்தர நிர்வாகி எவரும் நியமிக்கப்படவில்லை.

அத்துடன் இதுவரை யாழ். பல்கலைக் கழகச் சட்டத்துறைக்குப் பல்கலைக்கழக நிர்வாகத்தின் அசமந்தப்போக்குக் காரணமாக, எந்த நிரந்தர விரிவுரையாளர்களும் இணைத்துக் கொள்ளப்படவுமில்லை. இவ்வாறான இக்கட்டான நிலையிலேயே நான்கு ஆண்டுகளைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள்.

இவர்களில் மூன்று ஆண்டுகளைச் சேர்ந்த 31 மாணவர்கள் கொழும்பிலும், முதலாம் ஆண்டைச் சேர்ந்த 23 மாணவர்கள் யாழ்ப்பாணத்திலும் தமது கல்வியைத் தொடர்கின்றனர்.

இலங்கையின் சட்டத்துறை வரலாற்றில் மிகப் பெரும் சட்டவல்லுனர்க ளைத் தன்னகத்தே கொண்டு சட்டத் துறையில் தனக்கெனத் தனியிடத்தை யாழ் குடாநாடு பதித்திருந்தமை யாவ ரும் அறிந்ததே.

இந்த நிலையில் காலவோட்டத்தில் தமிழர்களின் மத்தியில் சட்டத்துறையில் ஏற்பட்ட பாரிய இடைவெளிகளையும், பின்னடைவுகளையும் நிவர்த்தி செய்வதற்காகவே யாழ் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பெரும் முயற்சிகளின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையில், இச்சட்டத்துறை யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினால் மிக இழிவாகவும், தான்தோன்றித்தனமாகவும் நடத்தப்படுகின்றது.

இது ஏற்கனவே சிதைந்து போயுள்ள யாழ்.குடாநாட்டின் சட்டத்துறையை மட்டுமல்லாது, வடக்கு, கிழக்கின் தமிழ் சட்டவியலாளர்களின் இருப்பையும், யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர்களின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இதன் காரணமாக, சட்டம் கற்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு இங்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தி பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றார்கள்.

மேலும், உயர்தரப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் வடக்கு, கிழக்கு மாணவர்கள் சட்டம் கற்கவேண்டும் என்ற தமது இலட்சியங்ளை மாற்றி வேறு பல்கலைக் கழகங்களில் வேறு துறைகளை நாடிச் செல்லும் அவல நிலையும் உருவாகியுள்ளது.

இது எவ்வாறான பின்விளைவுகளை எமது தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்படுத்தும் என்பது எவருக்குமே சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

எனவே, இவ்வாறான பல்கலைக் கழக நிர்வாகத்தினரின் அசமந்தமான, பாராமுகப் போக்கினை சட்டத்துறை மாணவர்களாகிய நாம் மிகவும் வன்மை யாகக் கண்டிக்கிறோம். மீண்டுமொரு சட்ட நடவடிக்கையை யாழ் பல்கலைக் கழக நிர்வாகத்தின் மீது ஏற்படுத்து வதற்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதையும் வருத்தத்துடன் அறியத்தரு கின்றோம்.

[illegible] கழக சட்டத்துறை மாணவர் சங்கம் தெரிவித்திருக்கிறது. (ஆ-சி)

## மரண அறிவித்தல்



### திருமதி.ஏரம்பு ஞானம்பிகை
*(இளைப்பாறிய ஆசிரியை,.மண்டைதீவு)*

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வதிவிடமாகவும், தற்போது தெகிவளை 23, டட்லி சேனநாயக மாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஏரம்பு ஞானம்பிகை (இளைப்பாறிய ஆசிரியை) 22.02.2009 ஞாயிறன்று தனது 100வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை (வைத்தியர் - மண்டைதீவு) விசாலாட்சி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் முருகேசு - தங்கமுத்து தம்பதியினரின் (கரவெட்டி, சீனி உடையார் வீடு) அன்பு மருமகளும் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் முருகேசு ஏரம்பு (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புப் பாரியாருமாவார்.

இவர் யதுகுலசிங் (மணி) இளைப்பாறிய சிரேஷ்டவிரிவுரையாளர் (பலாலி ஆசிரியர் கலாசாலை), காலஞ்சென்றவர்களான நமசிவாயம் சதாசிவம், சாரதாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும்

சற்குணானந்ததேவி சிறிபாலமுருகதாஸ் திருஞானபாலன் (U.K) காலஞ்சென்றவர்களான கேதாரகௌரிதேவி, சிவகுணபாலன் ஆகியோரின் அன்புத்தாயாரும் தங்கராசா யோகம்பிகை யோகராணி ஆகியோரின் அன்பு மாமியாரும்.

மயூரன், ராஜ்குமார், தர்மினி, ஞானதீபன், நர்மதா, ஜெயராம் பாலதாஸ் குகேஸ், காலஞ்சென்ற சசிகரி ஆகியோரின் பேர்த்தியும் மயூரன் மகேஸ்வரி, ஞானதீபன் சுவேதா ஆகியோரின் பேர்த்தியும், மாயாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 25.02.2009 காலை 8.30 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈமக்கிரியைகள் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4.00 மணிக்கு கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் அறியத்தருகின்றோம்.

23,டட்லி சேனநாயக மாவத்தை,
தெகிவளை.
T.P 2721132

தகவல்:
மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்

### கந்தசாமி முகிலன்

**காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும், கவலையும் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

*கவியரசு நகைப்பூங்கா,*
*யாழ்ப்பாணம்.*

(82990)

*உரிமையாளர்களும்,*
*ஊழியர்களும்.*
*(நண்பன் செ.திருமாறன்)*

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகரெத்தினம் சவுந்தரம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும், தற்போது வவுனியாவில் வசித்து வந்தவருமான திருமதி நாகரெத்தினம் சவுந்தரம் 21.02.2009 சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் பொன்னையா நாகரெத்தினத்தின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம், புஷ்பராணி, சாந்தகுமார், நித்தியவதனி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற வடிவேலு மற்றும் அன்னலட்சுமி, பரமானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தருமலெட்சுமியின் அன்புப் பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
ஊர்காவற்றுறை.
தொ.பே. 024 4901155

தகவல்:
செ.தருமலிங்கம் *(மைத்துனர்).*

### அம்பிகைபாகு இராசநாயகம்



பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் கொற்றாவத்தை, சட்டம்பியார் வளவை வதிவிடமாகவும் கொண்ட அம்பிகைபாகு இராசநாயகம் நேற்று (23.02.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயலக்ஷ்மியின் அன்புக் கணவரும் விக்னேஸ்வரன் (அமரர்), மகேஸ்வரன், யோகராணி, யோகலிங்கம் (சுவிஸ்), சண்முகலிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் கௌசல்யா (கனடா), கார்த்திகா (லண்டன்), காஜத்திரி, சர்மிளா (யாழ்.பல்கலைக்கழகம்), ஜெயந்தினி ஆகியோரின் தந்தையும் தயாளன் (கனடா), சுந்தரதாசன் (லண்டன்) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2009) செவ்வாய்க்கிழமை கொற்றாவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். பூதவுடல் மு.ப. 9மணியளவில் பொலிகண்டி ஊறணி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளிற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சட்டம்பியார் வளவு,
கொற்றாவத்தை.

தகவல்:
குடும்பத்தினர்,
திருமதி ஜெயலக்ஷ்மி.
*(மனைவி).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சி; விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை திடீரென வீழ்ச்சியடைந்தமையால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மரக்கறிகளின் விலைகள் பெரும்பாலும் 100 ரூபாவிற்குள்ளேயே காணப்படுகின்றன.

இந்தத் திடீர் விலை குறைவால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கத்தரிக்காய் கிலோ 110 ரூபாவாகவும், பூசணி கிலோ 30 ரூபாவாகவும், பீற்றூட் கிலோ 20 ரூபாவாகவும், போஞ்சி கிலோ 20 ரூபாவாகவும், தக்காளிப்பழம் கிலோ 60 ரூபாவாகவும், கரட் கிலோ 50 ரூபாவாகவும், வெங்காயம் கிலோ 25 ரூபாவாகவும், பாவற்காய் கிலோ 60 ரூபாவாகவும், பச்சைமிளகாய் கிலோ 75 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதை அவதானிக்க முடிகின்றது. (203-204)

# பெரும்போக அறுவடை ஆரம்பமாகியும் நெல்லின் விலை குறைவடையவில்லை

யாழ்ப்பாணம்,பெப்.24

குடாநாட்டில் பெரும்போக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பமாகியும் நெல்லின் விலை குறையவில்லை என்று நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

அறுவடை செய்யப்படும் நெல் மூடை ஒன்று நான்கு ஆயிரம் ரூபா தொடக்கம் 4ஆயிரத்து 500 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த போகத்தில் ஒரு நெல்மூடை 3 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

இந்தப் போகத்தில் நெல்லின் விலை குறைவடைந்தமையால் உள்ளூர் அரிசியின் விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை போகத்தின் போது வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு வயல் நிலங்களில் ஒரு சில அழிவடைந்தமையும் இந்த விலை குறைவடையாமைக்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது. (203-224)

# யாழ்.பிரதேச கலாசார விழா

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாணாப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலாசார விழா எதிர்வரும் மே மாதம் கொண்டாடப்படவுள்ளது.

இந்த விழாவில் 'கலாசார மலர்' ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இந்த விழாவில் தேசியகலை இலக்கியப் பெருவிழாவின் முக்கிய விடயங்கள் உள்ளடக்கியிருக்கும் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (202-204)

# கால்நடைத் தீவனமாகும் வெங்காயப்பூ

யாழ்ப்பாணம்,பெப்.24

மரக்கறிகளின் விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்தமையால் வெங்காயப்பூ விற்பனையின்றித் தேங்கிக் கிடப்பதால் அவை சந்தைப்படுத்த முடியாதநிலையில் கால் நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் பெருமளவில் வெங்காயச் செய்கையில் ஆர்வம் காட்டியமையால் அதிகளவில் வெங்காயப்பூ அறுவடை இடம்பெற்று வருகின்றது.

இந்த வெங்காயப்பூ கிலோ 10 ரூபா தொடக்கம் 20 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதனால் சந்தைகளில் விற்பனை இன்றி வெங்காயப்பூ தேங்குவதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து விவசாயிகள் அறுவடை செய்யும் வெங்காயப் பூக்களை கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதே சமயம் பச்சை போஞ்சியும் சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும் கூறப்படுகிறது. (203-224)

# தொல்புரம் கிழக்கு அம்பாள் ஆலயத்தில் திருப்பணி வேலைகள்

சுழிபுரம், பெப். 24

தொல்புரம் கிழக்கு பூதராசா அம்பாள் ஆலயத்தில் புதிய வசந்தமண்டபம் கட்டுதல், நவக்கிரக பிரதிஷ்டை ஆகிய கருமங்கள் நடைபெறவுள்ளன.

மேமாதம்10 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆலய அலங்கார உற்சவத்திற்கு முன்னதாக மேற்படி திருப்பணிகளை நிறைவாக்க ஆலய நிர்வாகத்தினர் ஈடுபட்டுள்ளனர். (201-28)

# கிராம உத்தியோகத்தருடாக வாக்காளர் இடாப்புப் பிரதி

யாழ்ப்பாணம், பெப். 24

தேர்தல் திணைக்களத்தால் இதுவரை வழங்கப்பட்டு வந்த வாக்காளர் இடாப்பின் பிரதிகளை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் கிராம உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளரின் சுற்று நிருபத்திற்கு அமைய கிராம உத்தியோகத்தர்களிடம் தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து தத்தம் கிராம உத்தியயோகத்தருடாக அவ்வப் பிரதேச செயலர்களினால் உறுதிப்படுத்தி பொதுமக்கள் தங்கள் தேவைகளுக்காக வாக்காளர் இடாப்பு பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-7)




'நிஷா' அனர்த்த நிவாரண உதவியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்ட உதவிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய்ப் பிரிவு தனது பகுதியில் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

கோப்பாய்ப் பிரிவுத் தலைவர் இ.மயில்வாகனம் பயனாளிக்கு உணவில்லாத பொருள்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம். (111)

# மேசன் பயிற்சி நிறைவு வைபவம்

யாழ்ப்பாணம், பெப். 24

வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தினால் உலக வங்கி வீடமைப்புத்திட்ட நிதி அன்பளிப்புடன் கோப்பாய் பிரதேசத்தில் நடத்தப்பட்ட மேசன் பயிற்சி நெறியின் நிறைவு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தொழில்துறைத் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலர் எஸ்.ராகவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (6)

# அரச பணியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இலகு முறையிலான கடன் விற்பனைத் திட்டம்

## யாழ்.ப.நோ.கூ.சங்கம் அறிமுகம் செய்தது

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரச பணியாளர்களின் நலன் கருதி இலகு முறையிலான கடன் விற்பனைத் திட்டம் ஒன்றை அடுத்த மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது என்று சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

இந்த இலகு கடன் விற்பனைத் திட்டமானது அரச திணைக்களங்கள், வங்கிகள் போன்றவற்றில் கடமையாற்றும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் ஆகியோரின் நலனைக் கருத்தில் எடுத்து முன்னெடுக்கப்படும் ஒரு விசேட திட்டமாகும்.

சங்கத்தில் கிளை ஒன்றில் ஒரு வாடிக்கையாளராக இருந்து தங்களுக்குத் தேவையான பொருள்களைக் கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதற்கான கொடுப்பனவுகளை தங்களது சம்பளக் கொடுப்பனவு தினத்தன்று செலுத்தி முடிக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு சங்கக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203-224)

# அனுமதிப் பத்திரம் இன்றி இயங்கிவந்த மதுபான நிலையம் பொலிஸாரிடம் பிடிபட்டது

வலி.வடக்கு,பெப்.24

நீண்டகாலமாக யாழ். நகர்ப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி இயங்கிவந்த மதுபானச்சாலை ஒன்று சுன்னாகம் பொலிஸாரினால் பிடிக்கப்பட் டுள்ளது.

யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் விசேட பணிப்புரையின் பெயரில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.லுடாவைக் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரால் இந்த மது பானசாலை பிடிக்கப்பட்டது. குறிப்பிட்ட மதுபான சாலையை சோதனையிட்டு விற்பனைக்கென வைக்கப்பட்டு இருந்த இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான மதுபான வகைகளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

மதுபானசாலை உரிமையாளர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஏ.இ.ஆனந்தராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேக நபரை தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (203-86)




# ஞானச்சுடர் 134ஆவது இதழ் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மாதந்த இதழின் 134 ஆவது இதழ் வெளியீடு எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வெளியீட்டுரையை திருமதி புனிதவதி சண்முகலிங்கனும் மதிப்பீட்டுரையை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நிகழ்த்துவர். (203-70)

# கப்பூது ஏகாம்பரம் வித்தியாலயத்தில் கொள்ளை சந்தேக நபர்கள் மூவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம்,பெப்.24

வடமராட்சிக் கல்வி வலயத்தில் உள்ள கப்பூது ஏகாம்பரம் வித்தியாலயத்தில் முக்கிய ஆவணங்கள் தீக்கிரையாக்கப்பட்டமை மற்றும் வித்தியாலய அதிபராக உள்ள பெண்ணின் வீட்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் மூவர் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

இம்மாதம் முதலாம் திகதி இரவு 9 மணியளவில் கப்பூது ஏகாம்பரம் வித்தியாலயத் துக்குச் சென்ற கொள்ளைக் கோஷ்டியினர் அங்கிருந்த அலுமாரி ஒன்றை உடைத்து அதனுள் இருந்த முக்கிய ஆவணங்களைத் தீயிட்டு எரித்துள்ளனர்.

பின்னர் வித்தியாலய அதிபரின் வீட்டுக்குச் சென்ற இந்தக் கொள்ளைக் கும்பல் வீட்டின்மின் இணைப்பைத் துண்டித்து விட்டு கதவை உடைத்து உள் நுழைந்து அங்கிருந்த அதிபரைப் பயமுறுத்தி பூட்டி வைத்து அங்கிருந்த தாலிக் கொடி மற்றும் தங்க நகைகள், கையடக்கத் தொலைபேசி உட்பட 4 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றதுடன் 2 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுப் பாவனைப்பொருள்களை அடித்து நொருக்கி விட்டுத் தப்பிச் சென்றதாக நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களைக் கைது செய்தனர்.

இவர்கள் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டார்.

இந்த மூவரும் [illegible] நீதிபதி கே.அ[illegible] முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மூவரையும் விளக்க மறியலில் வைப்பதற்கு உத்தரவிட்ட நீதிபதி இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பூரண விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (50-218)



வங்கியாளர் சங்கத்தின் அனுசரணையுடன் ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் உலகளாவிய நிதி நெருக்கடி, தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது.

நிகழ்வில் பேராசிரியர் நடராஜசுந்தரம் கருத்துரை வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம், ஓய்வுபெற்ற உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிடம், விவசாயம், வர்த்தகம் என்பவற்றில் சிறந்து விளங்கிய கைதடிச் செல்லப்பா ஐயாவின் ஞாபகப் பக்கங்கள்!!!

**தமது சோதிட ஞானத்தால் பல்லாயிரம் பேருக்கு வழிகாட்டியவரும் விவசாய மன்னனாக வட மாகாணத்தின் பல ஊர்களிலும் கடை வைத்திருந்த வணிகராகவும் விளங்கியவர் கைதடியைச் சேர்ந்த செல்லப்பா ஐயர்.**

**91 வயது வந்தும் தளராத தன்மைகொண்டு விளங்கிய அவரைக் கிராமத்து வேர்களில் ஒன்றாக இனங்காட்ட அண்மையில் அவரை நேர் கண்டோம். இவர் கடந்த 21.02.2009 அன்று இறைபதம் அடைந்தமையால் கைதடி மண் தன் கிராமத்து வேரை இழந்து நிற்கிறது.**

செல்லப்பா ஐயா பூமித்தாயின் மண்ணில் வேரடி மண்ணாக, தான் வாழ்ந்த பசுமை நினைவுகளின் ஞாபகப் பக்கங்களை எமக்காகப் புரட்டத் தொடங்கினார். "நான் 1918.10.28ஆம் திகதியன்று கைதடி வடக்கில் பிறந்து வளர்ந்தேன். இப்போது என் கடைசி மகளுடன் வாழ்ந்து வருகிறேன்.

எனது இயற்பெயர் சின்னத்தம்பி செல்லப்பா. என் ஆரம்பக்கல்வியை கைதடி வடக்கு குருசாமி வித்தியாசாலையில் கற்றேன்.

என் தந்தை வழி மூதாதையர்கள் பரம்பரைச் சோதிடர்கள். என் சிறிய தந்தையார் அமரர் ப. ஆறுமுகம் அவர்கள் தான் என்னை வழிப்படுத்திய ஞானகுரு. சோதிடக் கலையில் அவர் எழுவாய் எடுத்துத் தந்தார். நான் பயனிலை சொல்லக் கற்றுக்கொண்டேன். விஞ்ஞானம் வளர்ந்த பின் தான் சூரியகிரகணம், சந்திரகிரகணம் தோன்றப்போகும் திகதிகளை மேற்கு நாட்டவர் கூறுகின்றனர். மெய்ஞானம் கொண்டு நாம் பல்லாயிரம் ஆண்டுகள் முன்பிருந்தே கிரகணங்கள் தோன்றப் போவதைச் சரியாகக் கணித்த முன்னோடிகள்.

பஞ்சாங்கம் பொய் என்று கூறுகின்ற சிலரும் எம் மத்தியில் உள்ளனர். பஞ்சாங்கம் வழியாக நாம் கணிக்கும் சூரிய, சந்திரகிரகணங்கள் மெய் என்பதால் பஞ்சாங்கமும் மெய்யே என்பது என் வாதம். முக்காலமும் சரியாகக் கணித்து இல்வாழ்வைச் சரியாக ஒழுகும் வண்ணம் வழிகாட்டிய மெய்ஞானம்தான் சோதிடக்கலை. எமது நாட்டை எடுத்துக்கொள்வோமாயின் தமிழர்களிடம் மணமுறிவு குறைவாகக் காணப்படுவதற்குப் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்வதும் ஒரு பிரதான காரணம்.

எனது 30ஆவது வயதிலிருந்தே தனித்துச் சோதிடம் பார்த்து வருகின்றேன். திருமணப் பொருத்தம் பார்க்கும்போது மிகவும் நுட்பமாகக் கணிப்புக்களைச் செய்யவேண்டும். சாதக விளக்கம் எனும் விடயத்தை நுட்பமாக நாம் கற்றாலேயே கணிப்புக்களைத் துல்லியமாகச் செய்யமுடியும்.

இத்துறையை நுண்மான் நுழைபுல ஆற்றலுடன் கற்போர் தொகை இன்று மிகவும் குறைந்துவிட்டது என்பது எனது தனிப்பட்ட கருத்து. நான் இதுவரையில் சுமார் 8000 பேருக்கு ஜனன சாதகக் குறிப்புக்களை எழுதியும், 2500 வீடு கட்டுவதற்குரிய நிலையங்களை எடுத்துக் கொடுத்தும், சுமார் 3500 திருமணப் பொருத்தங்களையும் செய்துள்ளேன்.

எனக்கு இன்றுள்ள ஒரேயொரு கவலை எனது பிதா வழிப் பரம்பரைக் கலையை எனது பிள்ளைகள் யாருமே பின்பற்றவில்லை என்பதே.

கைதடியில் சோதிடம் பார்ப்பதுடன் தோட்டம், வயல் என்பவற்றையும் செய்தேன். முல்லைத்தீவில் எனது மகன் முன்பு பெருந்தெருக்கள் திணைக்களம் (PWD) எனப்படும் திணைக்களத்தில் வேலை செய்தபோது நான் நகரத்தில் கடை வைத்திருந்தேன். அங்கு 1985ஆம் ஆண்டு




நடந்த அமைதியின்மை காரணமாகக் கடையைக் கைவிட்டுப் பின்பு முத்தையன் கட்டு, புதுக்குடியிருப்பு, வவுனியா ஆகிய இடங்களிலும் கடை வைத்திருந்ததுடன் சோதிடம் பார்ப்பதிலும் ஈடுபட்டிருந்தேன்.

என் இளமைப் பராயத்தில் 1940களில் கைதடியில் சிகரெட் புகையிலையை உற்பத்தி செய்தேன். இவ் ஊரில் சிகரெட் புகையிலையை உலர்த்தும் 9 தொகுதி போறணைக் கட்டடம் இருந்தது. இங்கு நான் முகாமையாளராக இருந்தேன். கைதடியில் பலரும் சிகரெட் புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டு நிறைய வருவாய் ஈட்டினர்.

சிகரெட் புகையிலையை எம்மக்கள் பச்சை இலையாகக் கொண்டு வந்து இறாத்தல் கணக்கில் எடை போட்டுப் பதிவார்கள். போறணையில் எரிக்க நிறைய விறகு வேண்டும். போறணையின் வெப்பத்தைக் கணிக்க வெள்ளைக்காரர்கள் தந்த வெப்பமானி ஒன்றிருந்தது. பச்சைப் புகையிலையை தகர வெக்கையில் பதப்படுத்துவோம். வெப்பமானியில் 20 புள்ளி காட்டும்போது பச்சைப் புகையிலை பழுக்கத் தொடங்கும். வெப்பத்தை ஐந்து புள்ளிகளாகக் கூட்டி வருவோம். 40 புள்ளி வந்ததும் போறணையின் கதவைத் திறந்து விடுவோம். விவசாயிகள் சந்தைப்படுத்திய புகையிலைக்கும், போறணையில் வேலை செய்வோருக்கும் தீபாவளி தினத்தை அண்மித்து வெள்ளைக்காரர்களால் பணம் தரப்படும். அதனால் கைதடிப் பிரதேசத்தில் தீபாவளியை வெகுகோலாகலமாகக் கொண்டாடுவோம். இலங்கை சுதந்திரமடைந்த பின்பு சிகரெட் புகையிலை, போறணை தென்பகுதியில் உருவாக்கப்பட்டுவிட்டது. இதனால் எமது போறணை செயலிழந்து போனது.

இப்போது கைதடிப் பிரதேச விவசாயிகள் தற்போது சுருட்டுச் சுற்றும் புகையிலை உற்பத்தியில் மட்டுமே ஈடுபட்டுள்ளனர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் விளைந்த புகையிலை கப்பல் மூலம் இந்தியாவின் மலையாளத்திற்கும் [கேரளா] செல்வது வழக்கம். அங்குள்ள கோழிக்கோடு எனும் இடத்திலிருந்து எடுத்துவரப்பட்ட வாழை இனம்தான் கப்பல் வாழை இனம். கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டதால் கப்பல் பழம் எனவும், கோழிக்கோட்டலிருந்து வந்ததால் கோழிக்கோடு எனவும் அழைக்கப்படுவது எம்மவர் பலருக்குத் தெரியாத சுவையான ஒரு விடயம்.

மலையாளமும் எமது யாழ்ப்பாணத்தை ஒத்த சூழலைக் கொண்டுள்ளது. அவர்கள் தமது பிரதேசத்தில் நடுவதற்குப் புகையிலை விதை கேட்டுள்ளார்கள். எம்மவர் தந்திரமாக விதைகளை தாச்சியில் நெருப்பு வெக்கையில் வறுத்த பின்பு கொடுத்தனராம். மலையாளிகள் தமது விளைநிலங்களில் நட்ட விதைகள் முளைக்கவில்லை. அப்போது எம்மவர் எமது யாழ்ப்பாணக் காலநிலைக்கு மட்டும் தான் முளைக்கும் எனக் கூறினராம். தமது புகையிலை வியாபாரம் கெட்டுவிடக் கூடாது என்பதற்காக யாழ்ப்பாணத்தவர் செய்த ஏமாற்று வித்தை அது.

பலாலி விமான நிலையத்தை இன்று யாவரும் அறிவார்கள். ஆனால் அவ் விமான நிலையம் இரண்டாம் உலகப் போர் காலத்தில் கைதடி வடக்கு - நீர்வேலித் தரவையில்தான் அமைக்கப்பட முயற்சிக்கப்பட்டது. விமானம் இறங்கக்கூடிய வகையில் நிலம் கற்கள் கொண்டு செப்பனிடப்பட்டது. அதன் எச்சசொச்சங்களை இன்றும் நாம் காணலாம். இத்தரவை வெளியில் வெள்ளைக்கார அதிகாரி ஒருவரும், அவருக்குக் கீழ் சுமார் 50 காப்பிலிகளும் [நீக்ரோ - ஆபிரிக்கக் கறுப்பர்கள்] கூடாரம் அமைத்து இருந்தனர். விமானம் இங்கு இறங்கி ஏறும். நாமும் வெகு ஆச்சரியமாக ஓடிச் சென்று பார்ப்போம். விமான ஓடு பாதை இதுவென ஜப்பான் காரருக்குத் தெரியக் கூடாது என்பதற்காகப் பனை மரங்களைப் பிடுங்கி வந்து ஓடு பாதைக் கரைகளில், வெளிகளில் அரைப்பனை நிலத்தில் தாழ நட்டனர்.

இளைஞனாகிய நானும் எனது நண்பனும் வீட்டில் நாலைந்து முட்டைகளைக் களவெடுத்துச் சென்று காப்பிலிகளிடம் கொடுப்போம். அவர்கள் எமக்கு நாலைந்து றாத்தல் பாண் தருவார்கள். பாணைச் சாப்பிட எமக்குத் தெரியாது. பாண்களைத் தரவை நிலத்தில் வைத்து அதன் மேல் இருந்து எழும்பி விளையாடி முடியப் பாணை அப்படியே கைவிட்டு வருவோம்.



குரக்கன், சாமை, ஒடியல் பிட்டு சாப்பிட்ட தேகம்தான் இன்றும் உறுதியாக இருக்கிறது. இன்று எம்மவரோ கோதுமை மாவுக்கு அடிமையாகிப் பலவித நோய்களுக்கும் ஆளாகிவிட்டமை கவலை தருகிறது. வெள்ளைக்காரர் வைத்திருந்த விமான ஓடு பாதையால் கைதடி, கோப்பாய், நீர்வேலி ஊர்களுக்கு மேல் ஜப்பானியர்கள் குண்டு போடுவார்கள் என மக்கள் பயந்தார்கள். ஏனெனில் திருகோணமலை சீனக் குடாவில் ஜப்பானிய விமானத்தால் குண்டு போடப்பட்டிருந்தது.

இதனால் கைதடி, நீர்வேலி, கோப்பாய் ஊர்களின் பிரசித்தமான கோயில்களில் எல்லாம் மக்களால் ஒரே நாளில் பெரும் அபிஷேகம் செய்யப்பட்டது. இறைவனின் பெருங்கருணை தான் போலும் அண்மைய நிஷா, மழை போலப் பெருமழை பெய்தது. வெள்ளைக்காரர்களின் பிளேன் ஒன்று தண்ணீரில் இறங்கிச் சேற்றில் மாண்டது. வெள்ளம் வடிய காப்பிலிகளைக் கொண்டு வெட்டிய வெள்ள வாய்க்கால் இன்றும் உள்ளது.

சேற்றில் மாண்ட விமானத்தை வெள்ளைக்காரர் மீட்டெடுத்துப் பகுதியாக்கிச் சென்றனர். விமான நிலையத்தை மேட்டு நிலமான பலாலிக்கு மாற்றினர். இவ் விமான ஓடு பாதைக் கதை எம்மில் பலருக்கும் தெரியாத புதினம் தான்."

தன் ஞாபகத்தில் இருந்த பல விடயங்களை அசைபோட்டுப் பயனுள்ள தகவல்களை சுவைபடத் தந்த ஐயாவுக்கு நன்றி கூறி விடைபெற்றோம். ★

**-மருதன்-**





இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
ஏக விநியோகஸ்தர்கள்:
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி வடக்கு, கலாசாலை வீதியில் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய
தொ.பே. இல.: 071 8561428

## வைத்திய சேவை
## பிலிப்ஸ் நேர்சிங் ஹோம்
## Phillip's Nursing Home

நியாயமான கட்டணத்தில் தரமான சேவை

- வெளிநோயாளர் பிரிவு: காலை 8 மணி - 1.00மணிவரை பி.ப. 3.30 மணி - 7.30மணிவரை
- இரத்தம், சிறுநீர், சளி, மலம் பரிசோதனை (கொம்பியூட்டர் மயமான இயந்திரம் மூலம்)
- யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் பார்வையிடப்படும். சுத்தமான, சுகாதாரமான வார்ட் வசதிகள்
- வைத்தியர் நிபுணர் ஆலோசனை

பொதுவைத்தியம், சத்திர சிகிச்சை, மகப்பேற்று வைத்தியம், என்பு முறிவு நெரிவு சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை குழந்தைகள் வைத்தியம்.

எங்கள் நோக்கம் உங்கள் சுகவாழ்வு

228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு: தூர இடத்து நோயாளர்கள் யாழ்.- கச்சேரி மினிபஸ் சேவை மூலம் ஆஸ்பத்திரி வாசலிலேயே இறங்கமுடியும்.
T.P.: 021 222 4172 (சி/557157)


## முதலாமாண்டு நினைவு அழைப்பு

மலர்வு 22✱04✱1914

உதிர்வு 07✱03✱2008



நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் மாசி மாதம் 12ஆம் நாள் இன்று (24.02.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது தந்தை

பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக்குருக்கள் வைத்தியநாதக் குருக்கள்

அவர்களின் முதல் ஆண்டுத் திவச ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

சிவன்கோவிலடி,
தும்பளை வீதி, பருத்தித்துறை. குடும்பத்தினர். (சி/557247)

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சீவரத்தினம் யோகரத்தினம் (தங்கா)

தோற்றம் 29.11.1938 மறைவு 24.02.1994

திதி: 10.03.2009

எமது குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து வழிகாட்டிய உங்களை நினைவு கூருகின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்
தனையர் (புலோலி தெற்கு).
கரவெட்டி.
(சி/557244)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்லத்துரை தனேந்திரகுமாரன்

பிறப்பு 15✱10✱1948

இறப்பு 10✱03✱2005

திதி: அமாவாசை

நாலாண்டு ஆனால் என்ன!
நாலாயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும் மறையாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

16/2, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (82983)

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டிலிப்பாய்க் கோட்ட கரப்பந்தாட்டப்போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.24


சண்டிலிப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப்போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

15 வயதின் கீழ்ப்பிரிவு: மானிப்பாய் இந்து எதிர் சண்டிலிப்பாய் இந்து.

17 வயதின் கீழ்ப்பிரிவு: மானிப்பாய் இந்து எதிர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி.

19 வயதின் கீழ்ப்பிரிவு: மானிப்பாய் இந்து எதிர் சண்டிலிப்பாய் இந்து. (9)



யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு மாவட்ட மட்டத்தில் கழகங்களுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

இறுதிப் போட்டியில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் விளையாட்டுக் கழகமும் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## வலிகாமம் வலயப் பூப்பந்தாட்டம்; சம்பியனானது மானிப்பாய் இந்து

யாழ்ப்பாணம்,பெப்.24

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனானது.

கடந்த 17 ஆம் திகதி மிகுந்த விறுவிறுப்புடன் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையில் இறுதிப் போட்டி நடைபெற்றது. அடுத்தடுத்து நடந்த நேர் சுற்றுக்களிலும் 2:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வென்று சம்பியனானது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்களான றோமற் ஆன்சிலியும், சிவநேசனும் சிறப்பாக விளையாடி அனைவரினதும் பாராட்டுக்களைப் பெற்றனர்.

இப்போட்டியில் 3 ஆம் இடத்தினை யூனியன் கல்லூரி பெற்றுக்கொண்டது.

பெண்களுக்கான போட்டியில் உடுவில் மான்ஸ் வித்தியாலயம் முதலாம் இடத்தையும், உடுவில் மகளிர் கல்லூரி 2 ஆம் இடத்தையும், இராமநாதன் கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (50)

## ஊர்காவற்றுறைக் கோட்டக் கரப்பந்தாட்டம்: மூன்று பிரிவுகளில் யாழ்ற்ரன் கல்லூரி முதலிடம்

யாழ்ப்பாணம், பெப்.24

ஊர்காவற்றுறை கோட்டமட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் மூன்று பிரிவுகளில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி முதலிடங்களைப் பெற்றுள்ளது.

இப்போட்டிகள் யாவும் கடந்த 19ஆம், 20 ஆம் திகதிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இதில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

*ஆண்கள் - 15 வயதுப்பிரிவு*

1 ஆம் இடம் - புனித அந்தோனியார் கல்லூரி, 2 ஆம் இடம் - காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி.

*ஆண்கள் - 17 வயதுப்பிரிவு*

1 ஆம் இடம் - காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, 2 ஆம் இடம் - புனித அந்தோனியார் கல்லூரி.

*ஆண்கள்- 19 வயதுப்பிரிவு*

1 ஆம் இடம் - காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, 2 ஆம் இடம் - புனித அந்தோனியார் கல்லூரி.

*பெண்கள் - 15 வயதுப்பிரிவு*

1 ஆம் இடம்- கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம், 2 ஆம் இடம் - காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி.

பெண்கள் - 17 வயதுப்பிரிவு

1 ஆம் இடம் - கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம், 2 ஆம் இடம் - ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்.

*பெண்கள் - 19 வயதுப்பிரிவு*

1 ஆம் இடம் - காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, 2 ஆம் இடம்- கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம். (50-9)

## தேசிய ஹொக்கி அணியில் மூன்று யாழ்ப்பாண வீரர்கள்

சுன்னாகம்,பெப்.24

இலங்கையின் தேசிய ஹொக்கி அணியில் யாழ்.மாவட்ட வீரர்கள் மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தேசிய மட்டத்தில் சென்ற ஆண்டு 51 ஆவது தடவையாக நடத்தப்பட்ட ஹொக்கிப் போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் கலந்து கொண்டது.




இந்த அணியிலிருந்தே மூவரும் தேசிய அணிக்குத் தெரிவாகியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி ஆசிரியர் ஏ.சி. அரவிந்தன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் இராஜகோபால் குகன், யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவனும், விளையாட்டுத்துறைத் தலைவருமான இராஜரட்ணம் இராஜேஸ்வரன் ஆகியோரே தெரிவு செய்யப்பட்ட வீரர்களாவர்.

நீண்ட காலத்தின் பின்னர் யாழ்.வீரர்கள் தேசிய ஹொக்கி அணிக்குத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (50-38)

## கண்பார்வையற்றோருக்கான கிரிக்கெட் அணி உருவாக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் பார்வையற்றோருக்கான கிரிக்கெட் விளையாட்டு அணி, ஒன்றை உருவாக்கியுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் ஆ.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கிரிக்கெட் அணியில் 22 பேர் இணைக்கப்பட்டுள்ளனர்.

கண்பார்வை அற்றோரால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ள இந்தக் கிரிக்கெட் அணி விரைவில் ஏனைய கழக அணிகளுடன் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் மோதவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கண்பார்வையற்றோரைக் கொண்ட கிரிக்கெட் அணியினருக்குக் கிரிக்கெட் தொடர்பான பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (04-224)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### மூன்று வீரர்களுக்குத் தடை

வலி.வடக்கு,பெப்.24

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் குழப்பம் ஏற்படுத்திய வீரர்கள் மூவருக்கு ஒரு வருடகாலத்துக்குப் போட்டிகளில் கலந்துகொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம், குளமங்கால், ஆபிரகாம் விளையாட்டுக்கழக வீரர் ஒருவருக்கும், அளவெட்டி கலைவாணி விளையாட்டுக் கழக வீரர்கள் இருவருக்குமே இத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக விளையாட்டு மேன்முறையீட்டுக் குழுவினால் இத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (50-86)

## 'ஹொக்கி' இறுதிப் போட்டியில் விளையாடுவதற்கு யாழ்.பல்கலைக்கழகம், ஓல்ட்கோல்ட் அணிகள் தகுதி!

வலிவடக்கு,பெப்.24

யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு, மாவட்ட மட்டத்தில் கழகங்களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான ஹொக்கிச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் விளையாட வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணியும் தகுதி பெற்றுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் அண்மையில் அரையிறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன.

வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட் விளையாட்டுக் கழகத்திற்கும், யாழ் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக மேலதிகமாக இரு அணிகளுக்கும் தலா ஐந்து நிமிடங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது ஓல்ட்கோல்ட் விளையாட்டுக் கழகம் மேலும் ஒரு கோலைப் பெற்று 02:01 கோல்கள் என்ற கணக்கில் யாழ் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும் மோதிக்கொண்டன.

கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை பல்கலைக்கழக அணி 1:3 கோல்கள் என்ற அடிப்படையில் தோற்கடித்து, இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (86)



யாழ்ப்பாணம் கல்வி வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கச் சுற்றுப்போட்டி 2009 யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்[illegible]வக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர், வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 19 வயது[illegible]க்கு இப்போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகள் நடைபெறும் போது பிடிக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்:லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையில் நடத்தப்பட்ட நிகழ்வில் சைவபரிபாலனசபைத் தலைவர் த.சண்முகலிங்கம், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் உரையாற்றுவதை முதல் இரண்டு படங்களிலும்,

சைவபரிபாலன சபையால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு அஞ்சல் திணைக்கள பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் க.புஷ்பநாதன் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும்

நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.24

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் மாசி மக இலட்சார்ச்சனை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிறைவுபெறும். மறுநாள் திங்கட்கிழமை மாசிமகப் பெருவிழா நடைபெறும். (204)

* * *

நல்லூர்,பெப்.24

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்த சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தமும் இடம்பெறும். (202-111)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.24

வடமராட்சி தான்தோன்றி சக்கர சண்முகர் உபய கதிர்காம ஆலயத்தில் கடந்த 9ஆம் திகதி திங்கள் பூரணை தினத்தன்று நாட்டில் பூரண அமைதியும் நிரந்தர சமாதானமும் நிலவ பிரார்த்தனை நடைபெற்றது. விசேட அபிஷேக ஆராதனை நிகழ்வுடன் திருமுருகாற்றுப்படை பாராயண நிகழ்வு தொடராக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பஜனை சபையினர், அடியார்கள் பலர் பங்குபற்றி மாலை 5.30 மணியளவில் விசேட பூசையுடன் நிறைவு பெற்றது. (202-7-253)

* * *

மண்டுவில்,பெப்.24

சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

மார்ச் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 9ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (202-59)

* * *

கட்டைவேலி,பெப்.24

துன்னாலை கோயிற்கடவைப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் இன்று செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. நாளை புதன் கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

இப்பெருந்திருவிழா கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (203-236)

## சங்கானையில் விழிப்புக்குழு

சங்கானை சந்தையில் அமைந்துள்ள மின்மாற்றி மற்றும் பொதுப் பாதுகாப்புக் கருதி விழிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வோர் இரவும் 5 பேர் கொண்ட விழிப்புக் குழு இவற்றைக் கண்காணிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் விழிப்புக் குழுவில், சங்கானை வர்த்தக நிலையங்களின் உரிமையாளர் மற்றும் தொழிலாளர்கள் ஈடுபடவுள்ளனர். பாதுகாப்புப் படையினரின் அறிவுறுத்தலுக்கேற்பவே இந்த நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது. (202-29)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

| பிறப்பு | | அமரத்துவம் |
|---|---|---|
| 03 |  | 25 |
| * | | * |
| 03 | | 01 |
| * | | * |
| 1931 | | 2009 |

### திருமதி யோகாம்பிகை இராசையா

வாழ்க்கை ஒரு நாடகமென்பர்
அதில் வேடங்களும் பல வகை என்பர்
இல்லற வாழ்வில் இனிய வேடங்களையும் கண்டீர்
பிள்ளைகள், விருதுகள் கொண்டு,
வாழ்வில் நிறைவும் தான் கொண்டீர்

25.01.2009 அன்று அமரத்துவமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (24.02.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (82942) குடும்பத்தினர்.

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

### செல்வி தேன்மொழி தவராசா



அன்புத் தோழி தேன்மொழியே
எம்மோடு வாழும் போது தேன் நிலவாய்
பௌர்ணமியாய் ஒளி வீசினாய்
இடையில் தேய்ந்து இருள் தருவாய்
என நினைக்கவில்லை.
நீண்ட நாள்களாக உன்முகம் காணவில்லை
காணுவோம் என்ற நம்பிக்கையில் நாமிருந்தோம்
எமது நம்பிக்கையை இயற்கை பொய்யாக்கி விட்டதே
பிரிந்த நண்பர்களும் புலம் பெயர்ந்த நண்பர்களுமாய்
உன் பிரிவுச் செய்தியை அறிந்து உடைந்த மனங்களுமாய்
உறைந்த உணர்வுகளுமாகி நிற்கின்றோம்.
உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னை மடியில்
30.06.1982

இறைவன் அழைப்பில்
27.11.2008

உன் பிரிவை மனதில்
ஏற்றுக்கொள்ள முடியாமல்
ஏங்கித் தவிக்கும் நண்பிகள்
பிருந்தா (கொழும்பு), கிரிபரா (லண்டன்), பாமினி (இத்தாலி), பிரதீமா (கனடா), டயானா (பிரான்ஸ்), சர்மினி (அளவெட்டி), அகல்யா (இளவாலை).

(82927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

## கல்பனா செல்வரட்ணம்

பெறுபேறு: 3ஏ (வைத்தீஸ்வராக் கல்லூரி)



நான் தரம் ஒன்றிலிருந்து க.பொ.த சாதாரண தரம் வரை யா/அராலி இந்துக் கல்லூரியிலும், உயர்தரத்தை யா/வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் இணைந்து கற்றுக்கொண்டேன்.

நான் சிறுவயதிலிருந்தே கல்வியில் ஆர்வம் கொண்டிருந்ததனால் எனக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள் அனைவரும் என்மேல் அன்புடன் ஆலோசனைகளையும் நம்பிக்கையையும் வழங்கி உற்சாகப்படுத்தினர். இதனால் நான் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 10 பாடங்களிலும் சிறப்பாகச் சித்தியடைந்து பாடசாலை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டேன். நான் உயர்தரத்திலே கலைத்துறையைத் தெரிவுசெய்து ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலின் மூலம் சிறந்த பெறுபேற்றைப்பெற முடிந்தது.

இரவுவேளைகளில் அதிக நேரமெடுத்துப் படிப்பதில்லை. அதிகாலையில்தான் படிப்பேன். அத்துடன் எந்தவொரு பாடத்தையும் மனனம் செய்து படிப்பது குறைவு குறிப்பு எடுத்து ஆசிரியர்களிடம் சந்தேகங்களைக் கேட்டுமே படித்தேன். மேலும் எனது அக்கா பல்கலைக்கழகத்திலே கல்வி கற்பதும் எனக்கு ஊக்கத்தை அளித்தது.

நான் இப்பரீட்சைப் பெறுபேற்றைப் பெற்றுக்கொள்வதற்கு உறுதுணையாக இருந்தவர்களில் முதலில் எனது பெற்றோரைக் கூறுவேன். மேலும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் என்னை இச்சிறந்த பெறுபேற்றைப் பெற வழிவகுத்தது. இவர்கள் அனைவருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

3ஏ எடுப்பாய் என்று முன்னரே கூறிய அராலி இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் திரு.ம.மகாதேவா அவர்கள் எனது பரீட்சைப் பெறுபேறு வருவதற்கு முன்னமே அமரத்துவம் அடைந்துவிட்டார். அவரையும் இச்சந்தர்ப்பத்திலே நினைவுகூர விரும்புகிறேன்.

## அரியரத்தினம் விஷ்ணுவர்த்தினி

பெறுபேறு: 3ஏ (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)



யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையில் தரம் 5 வரை கற்று, தரம் 6 இல் இருந்து யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கற்றேன். உயர்தரத்தில், கலைப்பிரிவில் தமிழ், அளவையியல், இந்து நாகரிகம் ஆகிய மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்றேன். எனது வீட்டிற்கும் பாடசாலைக்குமிடையில் நீண்டதூரம் என்பதால் மிகுந்த சிரமத்தின் மத்தியில் நான் எனது கல்வியைத் தொடர்ந்தேன்.

நான் இந்தப் பெறுபேற்றை அடைய எனது அப்பா, அம்மா, மாமா, மாமி மற்றும் எனது சகோதரர்கள் கொடுத்த ஊக்கமே காரணம். எனது அப்பாவிற்கு என்னை பல்கலைக்கழகத்தில் படிக்கவைக்க வேண்டுமென்பது நீண்டநாள் ஆசை. அதை நிறைவேற்ற பாடுபட்டு வெற்றி கண்டேன். மற்றும் எனது பாடசாலை அதிபர், எனக்கு கற்பித்த ஆசிரியர்கள் எனக்கு சிறந்த பெறுபேறு கிடைக்க காரணமாக அமைந்தார்கள். நான் பாடசாலையிலும், பிரத்தியேக வகுப்புக்களிலும் ஆசிரியர்கள் கற்பிக்கின்றபோது மிகவும் அவதானமாகக் கிரகிப்பேன். நான் தினமும் இரவு 10 மணி தொடக்கம் 1 மணி வரை படித்தேன்.

எனக்கு சிறுவயது முதலே சிறுகதை, கவிதை, கட்டுரைகள் வாசிக்கும் பழக்கமிருந்தது. இதுவும் எனது பெறுபேற்றுக்குக் காரணமாகும். எதிர்காலத்தில் இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவாகி மக்களுக்குச் சேவை புரியவேண்டும் என்பது சிறுவயது முதல் என்னுள் வளர்த்துக்கொண்ட இலட்சியமாகும்.

## இரட்ணசிறி விஜயதர்சினி

பெறுபேறு: 2ஏபி (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)



நான் தரம் 1 இலிருந்து இந்தப் பாடசாலையில் தான் படித்தேன். சாதாரண தரம் வரை சராசரி மாணவியாகவே கல்வி கற்றேன். உயர்தரத்தில் நண்பர்கள் இடையே போட்டிநிலை காணப்பட்டது. இதனால் நான் அளவையியல், தமிழ், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களைத் தெரிவுசெய்தேன். சிறுவயதிலேயே தந்தையைப் பிரிந்த காரணத்தினால், நான் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற இலட்சியம் என்னைவிட எனது குடும்பத்தினரிடம் அதிகமாகக் காணப்பட்டது. படிக்க வேண்டும் என்று எனக்குள் ஆர்வத்தை ஊட்டிய கிருஷ்ணகுமார், நந்தகுமார், மாமாமார் எனக்கு பலவழிகளிலும் கற்றலுக்கு துணைநின்றனர். பரீட்சை பெறுபேறு வெளியாகிவிட்டது என்றதும் அதனைப் பார்க்க நான் ஆர்வப்பட்டதைவிட எனது அம்மா, சகோதரர், மற்ற மாமாமார் அதனை ஆவலுடன் சென்று பார்த்தனர். நான் இப் பெறுபேற்றை அடைந்ததும் எனது தாயார், சகோதரர் மகிழ்ச்சியில் அழுதனர். இந்தவகையில் நான் சிறப்பான பெறுபேற்றைப் பெற பல வழிகளில் உதவிய அதிபர், கல்வி கற்பித்த ஆசிரியர்கள், எனக்கு உறுதுணையாக இருந்த அம்மா, மாமாமார், சகோதரர் போன்றோர் இச்சாதனையின் பங்காளிகள் என்பதே உண்மையாகும். எமது நிலைமையை உணர்ந்து உதவிய 'சமுர்த்தி' நிறுவனத்துக்கும், நன்றியைக் கூறுகின்றேன்.

சந்திப்பும், படங்களும்:
ஔண்யன், தமிழ்வண்ணன், கணேசமூர்த்தி. 22

## தங்கவேல் சிவஞானம்

பெறுபேறு:2ஏசி (வல்வை சிதம்பரக் கல்லூரி)




நான் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகத்துறையைத் தெரிவு செய்தேன். அதன்படி வர்த்தகப் பிரிவில் 2ஏசி என்ற பெறுபேற்றைப் பெற்றேன். நான் எனது ஆரம்பக்கல்வியை சிவகுரு வித்தியாசாலையில் கற்றேன். பின்னர் தரம் 6 இல் சிதம்பரக் கல்லூரியில் இணைந்து எனது கல்வியைத் தொடர்ந்தேன். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 2ஏ, 5பி, 2சி, எஸ் என்ற பெறுபேறு எனக்குக் கிடைத்தது.

நான் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு கிடைத்ததை நினைத்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த வகையில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோர்கள் மற்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கம், தனியார் கல்வி நிறுவனம் மற்றும் சக நண்பர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது தந்தையார் மீன்பிடித்தொழில் புரிகின்றார். நான் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பிற்காக முகாமைத்துவத் துறையை விரும்புகின்றேன். [illegible] திரன் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## செல்வநாயகம் கரிகாலன்

பெறுபேறு: 3ஏ (யாழ்.இந்துக் கல்லூரி)



எந்தவொரு மாணவரினதும் இலட்சியக் கனவு சிறந்த பெறுபேற்றைப் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்வதுதான். அந்த வகையில் எனக்குப் பொறியியல் துறை கிடைத்திருப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் இந்தப் பெறுபேற்றைப் பெற எனக்குத் துணை செய்தவர்கள் பலர். எனது பெற்றோரும் சகோதரர்களும் எப்போதும் எனக்கு ஊக்கமளித்தனர். இந்தப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களையும் நான் நன்றியுடன் நினைவு கூரவேண்டும். தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பித்த ஆசிரியர்களும் கணிதப் பிரிவு தொடர்பான பலநுட்பங்களை எனக்குச் சொல்லித் தந்தனர். எனது உறவினர்களும் எனக்குப் பலவகையில் உதவிபுரிந்தனர். இவர்கள் எல்லோருக்கும் எனது வெற்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

எனது ஆரம்பக்கல்விக்கான சிறந்த அடித்தளத்தை இட்டது இணுவில் மத்திய கல்லூரி ஆகும். தரம் 6இலிருந்து யாழ் இந்துக் கல்லூரியே என்னை நெறிப்படுத்தியது.

## மரியதாஸ் பிரியதர்சினி

பெறுபேறு: 3ஏ (ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)



நான் எனது ஆரம்பக்கல்வியினை யா/குளமங்கால் [றோ.க.] வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகத்திலும் கற்றேன். எனக்கு உயர்தரப் பரீட்சையில் முதல் தடவையாக ஏ2பி பெறுபேறு கிடைத்தது. 2ஆவது தடவையாக ஏபிசி பெறுபேறு கிடைத்தது. 3ஆவது தடவை எடுக்கும் போது பலர் பாடம் மாற்றி எடுக்கும்படி கூறினார்கள். ஏனெனில் நான் எடுத்த பாடங்கள் அளவையியலும் விஞ்ஞானமுறையும், நாடகமும் அரங்கியலும், கிறிஸ்தவம். ஆனால் நான் மாற்றவில்லை. அதே பாடங்களையே 3 ஆவது தடவையாகவும் எடுத்து 3ஏ பெறுபேறைப் பெற்றேன். "தோல்விதான் வெற்றியின் முதல்படி". என்னோடு படித்த மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும்போது எனக்குள்ளேயே ஒரு ஏக்கம். நாலும் படித்து பல்கலைக்கழகம் செல்லும்போது எனக்குள்ளேயே ஒரு ஏக்கம். நாலும் படித்து பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற ஆர்வம் உண்டாகியது. நான் சோர்ந்து போகும் போது எனது பெற்றோர் என்னை உற்சாகப்படுத்துவார்கள். அவர்கள்தான் எனக்கு நல்ல நண்பர்களாக, வழிகாட்டிகளாக இருந்தனர். எனது பெற்றோரின் உற்சாகமும் எனது சகோதரிகளின் ஊக்குவிப்பும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களின் ஊக்குவிப்பும் சிறப்பாக நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் க.கணேசராஜா அவர்களின் வழிகாட்டலும், ஆலோசனைகளும், உற்சாகமும், பயிற்சியும் நான் சிறந்த பெறுபேறு பெறக் காரணமாக இருந்தன. கிறிஸ்தவ ஆசிரியர் M.மரியபவளம் அவர்கள் எனக்குத் தனியாக தனது வீட்டில் பாடம் சொல்லித் தந்தார். இவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் பரீட்சை எழுதிவிட்டு எல்லோருக்கும் கடினம் என்று கூறினேன். ஏனெனில் யாருமே என்னை எதிர்பார்க்காமல் பெறுபேறு எடுக்கவேண்டும் என்று நினைத்தேன். அவ்வாறே பெறுபேறும் கிடைத்தது. நான் என்னை வருத்தி நீண்டநேரம் படிக்கமாட்டேன். எனது விடாமுயற்சிக்கு கிடைத்த பலனாகவே இப்பெறுபேறை நான் கருதுகின்றேன். இறைவன் என்னைக் கைவிடவில்லை.

எதிர்காலத்தில் ஆசிரியத்தொழிலை மேற்கொண்டு எனது பெற்றோருக்கு நான் சேவை செய்யவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.

## ஸ்ரீகாந்தன் சுலக்சனா

பெறுபேறு: ஏ2பி (வல்வை மகளிர் மகாவித்தியாலயம்)



நான் என்னுடைய கல்வியினை ஆரம்பத்திலிருந்தே யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் - க.பொ.த உயர்தரம் வரையும்- கற்றேன். நான் உயர்தரத்தில் வணிகத் துறையினைத் தெரிவுசெய்தேன். அதற்கு வேண்டிய அனைத்து ஊக்கப்பாடுகளையும் எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் வழங்கினார்கள். நான் மனம் சோர்ந்து வாடி நின்ற வேளைகளில் எனது தாய் எனக்கு ஆலோசனை கூறி எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். அவருடைய கனவு நான் பல்கலைக்கழகம் சென்று எனது சகோதரி போலவே பட்டம் பெறவேண்டும் என்பதாகும். அவருடைய கனவை நனவாக்கப் போவதை எண்ணும்போது எனக்கு சந்தோஷமாக இருக்கின்றது.

எனது பெற்றோர், சகோதரர்களது நம்பிக்கையும், எனது விடாமுயற்சியுமே நான் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடக் காரணமாக அமைந்தது. தனியார் கல்வி நிறுவன பாட ஆசிரியர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

B.S.பசில், S.S.சிறீ, மகேந்திர சர்மா, சரவணபவன், அன்ரனி, S.சிவா ஆகிய ஆசிரியர்கள், எனது கற்றல் செயற்பாட்டிற்கு உறுதுணையாக அமைந்தார்கள். பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள், அதிபர், ஆசிரியர்கள், உறவினர்கள் ஆகியோருக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். எனது கற்றல் செயற்பாட்டுக்கு இறைவன் துணை புரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுபாந்தினி சந்திரலிங்கம்

பெறுபேறு: ஏபிசி (வல்வை சிதம்பரக் கல்லூரி)



நான் எனது ஆரம்பக் கல்வியை யா/கெருடாவில் இ.த.க. பாடசாலையில் கற்றேன். அதனைத் தொடர்ந்து யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் எனது க.பொ.த.சா/த பரீட்சை வரை கல்வி கற்றேன். க.பொ.த. சா/த பரீட்சையில் எனக்கு 7ஏ, பி, 2சி என்ற பெறுபேறு கிடைத்தது. இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் ஆசிரியர்கள் அனைவரும் எனக்கு உறுதுணையாக இருந்தனர்.

எனது உயர்தரக் கல்வியை யா/சிதம்பரக் கல்லூரியில் கற்றேன். அங்கு வர்த்தகப் பிரிவில் பொருளியல், கணக்கீடு, வணிகக்கல்வி ஆகிய பாடத் தெரிவுகளை மேற்கொண்டிருந்தேன். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நான் சித்தியடைவதற்கு சிதம்பரக் கல்லூரியின் ஆசிரியர்கள் அனைவரும் உதவி புரிந்தனர். அவர்களுக்கும் எனது கல்லூரி அதிபர் திரு.மகேந்திரன் அவர்களுக்கும் நன்றிகள். அத்துடன் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்களை கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிதம்பரக் கல்லூரியின் ஆசிரியர்களான திரு.சாந்தகுமார், திருமதி.வைத்தியநாத சர்மா, உதயரூபன், செல்வரட்ணம் ஆகியோருக்கு எனது நன்றிகளை விசேடமாக தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் எல்லா வழிகளிலும் உதவிபுரிந்த எனது பெற்றோருக்கு உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் விமானத்தை புதுக்குடியிருப்பில் படையினர் அவதானித்து அறிவித்தனராம்

கொழும்பு, பெப்.24

கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினரால் சுட்டுவீழ்த்தப்பட்ட புலிகளின் இலகுரக விமானத்தில் இருந்து 14 கிலோ கிராம் எடை கொண்ட சீ4 ரக வெடிப் பொதிகள் பத்து இராணுவத்தினரால் மீட்கப்பட்டிருக்கிறன. புலிகளின் விமானம் பறப்பில் ஈடுபட்டதைப் புதுக்குடியிருப்பில் நிலைகொண்டிருக்கும் படையினர் முதலில் அவதானித்து அறிவித்தனர்.

இவ்வாறு தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் விமானங்கள் பறந்தமையை வவுனியா, பாலாவி, மீரிகம ஆகிய இடங்களில் உள்ள ராடர் நிலையங்கள் பதிவு செய்துள்ளதாகவும் இதுதொடர்பான தகவல் கிடைத்ததும் உடனடியாக எவ்7 விமானம் அனுப்பப்பட்டதாகவும் விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார கூறினார்.

புலிகளின் விமானம் 200 தொடக்கம் 300 வரையான அடி உயரத்தில் பறந்ததால் அவற்றை மேற்குறிப்பிட்ட பிரதேசம் எதிலும் வைத்து அழிக்க முடிய வில்லை. அதனையடுத்து புலிகளின் இரு விமானங்களும் கொழும்பு நகருக்குள் பிரவேசித்தன. விமான எதிர்ப்பு படையினரின் கடுமையான தாக்குதலினால் ஒரு விமானம் உடைந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டடத்தின் மீது வீழ்ந்தது. மற்றைய விமானம் 9.55 மணிக்கு மீண்டும் பிரவேசித்த போது சுட்டு விழ்த்தப்பட்டது- என்றும் விமானப் படைப் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மீது விமானம் உடைந்து வீழ்ந்ததில் காயமுற்றவர்களில் 14 பேர் தொடர்ந்து கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருவதுடன் இரண்டு பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஹெக்கர் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

(அ-6)

## கசிப்பு, கள்வைத்திருந்த 11 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்.பெப்.24

தென்மராட்சிப் பிரதேசத்தில் சட்ட விரோத கசிப்பு வைத்திருந்தமை, அனுமதியின்றி வீட்டில் கள் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக பதினொரு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 2 லட்சத்து 24 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரி திணைக்களத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின் போது சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த ஆறு பேருக்கு எதிராகவும், அனுமதியின்றி வீடுகளில் கள் வைத்திருந்த ஐந்து பேருக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ் வழக்குகளை விசாரித்த நீதிவான் சட்ட விரோத கசிப்பு வைத்திருந்தவர்களுக்கு 2 லட்சத்து 4 ஆயிரம் ரூபாவும் கள் வைத்திருந்தவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார்.

கசிப்பு வைத்திருந்தவர்களில் அபராதத் தொகை செலுத்தத் தவறும் பட்சத்தில் இருவருக்கு தலா 15 மாதமும் இருவருக்கு தலா 5மாதமும் இருவருக்கு தலா 2 மாதமும்-

கள் வைத்திருந்தோர் அபராதத் தொகை செலுத்தத் தவறும் பட்சத்தில் மூவருக்கு தலா ஐந்து மாதமும் இருவருக்கு தலா 2 மாதமும் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (202-207)

# புலிகளின் வான் தாக்குதலையடுத்து கேரளாவில் அதிநவீன ராடர் தளம்

## இந்திய விமானப் படை முடிவு

திருவனந்தபுரம், பெப். 24

விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதல் காரணமாக, கேரளாவில் அதிநவீன 'ராடர்' தளத்தை நிறுவ இந்திய விமானப் படை முடிவு செய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் சிறிய விமானங்களை வைத்துள்ளனர். அவற்றைக் கொண்டு கடந்த வெள்ளியன்று கொழும்பு நகரில் அவர்கள் குண்டுகளை வீசினர். புலிகளின் இந்தத் தாக்குதல் காரணமாக, இந்திய விமானப்படை முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.

அதன்படி, கேரளத் தலைநகர் திருவனந்தபுரத்திலுள்ள தென் பகுதி விமானப் படைப் பிரிவில் 'ஏரோசாட்' என்ற அதி நவீன 'ராடர்' நிறுவப்பட உள்ளது. இத் தகவலை இந்திய விமானப்படை உயர் அதிகாரி எயார் மார்ஷல் எஸ்.ராதாகிருஷ்ணன் தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்தியாவின் தென் பிராந்திய வான் பகுதி, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், திருவனந்தபுரத்தில் ஏரோசாட் ராடர் நிறுவப்படும். இந்த ராடர், இலக் குகளை மிக நெருக்கமாகக் காட்டும் திறன் படைத்தது.

மேலும், கடல்சார் வான் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொறுப்பு, தென் மேற்கு விமானப்படைப் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ளது. இது தென் பகுதி விமானப்படைப் பிரிவுக்கு மாற்றப்படும் - என்றார்.

இதற்கிடையே, கடந்த 2007ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் நடத்திய விமானத் தாக்குதலின்போதே, தென்னிந்தியக் கடலோரப்பகுதி முழுவதும் விமான எதிர்ப்புப் பீரங்கிகளும், நடமாடும் ராடர்களும் நிறுவப்பட்டிருக்கின்றன என டில்லியிலுள்ள விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பீரங்கிகளும், ராடர்களும் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன எனவும், எதிரிகளின் விமானங்கள் ஊடுருவினால் அதனைச் சமாளிக்கத் தயார்நிலையில் இருக்கின்றன எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-சி)

## முன்பள்ளி மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.பெப்.24

சாவகச்சேரி நகரில் உள்ள தென்னிந்திய திருச்சபையின் முன்பள்ளி மீண்டும் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

முன்பள்ளியில் மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை புகையிரத நிலைய வீதியில் உள்ள குருமனையில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டுச் சூழ்நிலை காரணமாக கடந்த நான்கு வருடங்களாக தென்னிந்திய திருச்சபையின் முன்பள்ளி மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(203-207-59)

## மேல்மாகாண சபைத் தேர்தல்:

# தபால் மூல வாக்களிப்புக்கு வியாழன் வரை விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, பெப். 24

மேல்மாகாணசபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப் பங்கள் நாளைமறுதினம் வியாழக்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படாமல் தவிர்ப்பதற்காக அவற்றை இறுதிநேரம் வரை காத்திருக்காது முன்கூட்டியே சமர்ப்பிப்பது நல்லது என்று செயலகம் தெரிவித்துள்ளது.

எக்காரணங்கொண்டும் இந்த விண்ணப்பத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்றும் தேர்தல்கள் ஆணையாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் இப்போதே தமது பணிகளை ஆரம்பித்துவிட்டன என்று தெரிவிக்கப் படுகிறது.

முதலாவது தேர்தல் வன்முறை நிகழ்வாக கம்பஹா மாவட்டத்தின் வத்துபிட்டிவலவில் ஜே.வி.பிக்கு எதிரான தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற் றுள்ளது என்று தேர்தல்கள் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது.

கம்பஹாவில் இன்னும் சில சிறுசிறு சம்பவங்கள் குறித்து முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று அந்த அமைப் பின் ஊடகப் பேச்சாளர் கீர்த்தி தென்னகோன் நேற்று முன்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, நடந்து முடிந்த மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்த லில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டுத் தெரிவான உறுப்பினர்கள் அடுத்த வாரமளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

# வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில்...



செலிங்கோ ஆயுள் பகுதியின் நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த விஜயரத்தினம்-சந்திரகாந்தி அம்மா என்பவருடைய மரணத்திற்குப் பின்னரான பிரதீப இழப்பீட்டுத் தொகையான ஒருலட்சம் பெறுமதியான காசசோலையினை அவரின் பேரனாகிய ஏ.ஜோனத்தானிடம் நெல்லியடிக்கிளை முகாமையாளர் ரி.நிரோஜன் கையளிப்பதையும் அருகில் விற்பனை நிறைவேற்றுனர் ரி.ராஜகோபால், அணித்தலைவர் பி.தனுஜா, இறந்தவரின் மகள் ரி.இராஜஸ்ரீ நிற்பதையும் படத்தில் காணலம்.



தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளையினரால் வழங்கப்பட்ட இழப்பீட்டுக் கொடுப்பனவுக் காசோலையினை இழப்பீட்டு உரித்தாளர் திருமதி மஞ்சுளா கணேசலிங்கத்திற்கு கிளையின் உதவி முகாமையாளர் ரி.கிரிதரன் வழங்குவதையும் அருகில் கிளை முகாமையாளர் என்.பகீரதன் மற்றும் வங்கி உத்தியோகத்தர் ஆகியோரையும் படங்களில் காணலாம்.



அச்சுவேலி மக்கள் வங்கியில் நடைபெற்ற ஜயஸ்ரீ பரிசளிப்பு விழாவில் பரிசில் பெற்ற வாடிக்கையாளர்கள், வங்கி முகாமையாளர் இ.யோகராசா, உதவி முகாமையாளர் திருமதி றொசற் தவநாயகம் மற்றும் வங்கி ஊழியர்களுடன் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: அச்சுவேலி செய்தியாளர்.)

## தென்மராட்சி விவசாயிகள் சிறுதானியச் செய்கையில் ஆர்வம் காட்டவில்லையாம்

யாழ்ப்பாணம், பெப். 24

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில் இம்முறை சிறுதானியப் பயிர்ச் செய்கைமேற்கொள்ள விவசாயிகள் ஆர்வங் காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வருடாவருடம் காலபோக நெற்செய்கை அறுவடை செய்த பின்னர் பயறு, உழுந்து, கௌபி, சணல் போன்ற சிறுதானியப் பயிர்களைப் பயிரிடுவதாகவும் இவ்வருடம் போதிய அளவு மழை பெய்யாமையால் நெற் பயிர்களுக்கு குளங்கள் மற்றும் கிணறுகளிலிருந்து நீர் பாய்ச்சியதாகவும், வயல்கள் காய்ந்து போன நிலையில் காணப்படுவதால் சிறு தானியம் பயிரிடுதலில் நெற்செய்கையாளர்கள் அக்கறை கொள்ளவில்லையென தெரிவிக்கப்பட்டது. (203-207)

## காரைநகர் பிரதேசத்தில் மாணவர்களுக்கு மாலைநேர ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 24

காரைநகர் 'கிட்ஸ்பார்க்' அமைப்பினால் காரைநகர் பிரதேசத்தில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாலை நேர ஆங்கில வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இந்த ஆங்கில வகுப்புகளில் இணைந்து கல்வி பயில விரும்பும் மாணவர்கள் அலுவலகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்த கொள்ளுமாறு அமைப்பின் தலை வர் க.நேத்திரானந்தன் கேட்டுள்ளார்.

தற்போது ஆங்கிலம் மற்றும் நவீன கற்பித்தல் செயற்பாடுகளுடன் முன்பள்ளியினையும் இந்த அமைப்பு நடத்தி வருகின்றது.

(203-205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்குளிப்பு அரசியல்!



'தமிழ் இனஉணர்வு தீயாகப் பற்றி எரிகிறது...' என்று யாராவது சொன்னால், இப்போது அதை மேடையில் பேசப்படும் அலங்காரப் பேச்சாக ஒதுக்கிவிட முடியாது! ஈழத் தமிழர்களுக்காக தமிழ்நாட்டில் தீக்குளிப்பவர்களின் எண்ணிக்கை, நாள்தோறும் அதிகரித்து வருகிறது. சென்னையில் முத்துக்குமார் தீக்குளித்ததில் ஆரம்பித்து... பள்ளப்பட்டி ரவி, சீர்காழி ரவிச்சந்திரன், சென்னை அமரேசன் என அந்தப் பட்டியல் வளர்ந்துகொண்டு போகிறது.

'தீக்குளிக்க வேண்டாம்!' என்று அரசியல் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தும், தமிழர்கள் தங்களை மாய்த்துக் கொள்வது நின்றபாடில்லை. உணர்ச்சிக் கொந்தளிப்பில், ஏதோ ஓர் ஆவேசத்தில் இப்படிச் செய்கிறார்கள். புரிதல் இல்லாதது தான் இதற்கெல்லாம் காரணம் என்று இதைப் பற்றி எண்ணுபவர்களும் உண்டு. இது திராவிட அரசியல் அறிமுகப்படுத்திய ஒரு மோசமான போராட்ட வடிவம் என்று குறை கூறுபவர்களும் இருக்கிறார்கள். ஆனால், அத்தகைய விமர்சனங்கள் தவறானவை. தீக்குளித்து ஒருவர் தன்னை மாய்த்துக்கொள்வதை, எவருமே ஆதரிக்க முடியாது. அதேநேரத்தில் அப்படி செய்கிறவர்களை நாம் கொச்சைப்படுத்திவிடவும் கூடாது.

தீக்குளித்து உயிர் துறப்பது தமிழ்நாட்டுக்கு மட்டுமே உரித்தான போராட்ட வடிவமல்ல... உலகெங்கும் உள்ள நாடுகள் பலவற்றிலும் இது வழக்கத்தில் இருக்கிறது. பிரான்ஸ் நாட்டில் இருந்த இயேசு சபை பாதிரியார்கள் பதினாறாம் நூற்றாண்டில் தங்கள் உறுப்புகளை எரியூட்டிக்கொண்ட சம்பவங்கள் பலவற்றை வரலாற்றில் பார்க்க முடிகிறது. இயேசு அனுபவித்த துன்பத்தை தாமும் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கோடு அவர்கள் அப்படிச் செய்து கொண்டார்கள். வியட்நாம் யுத்தத்தின்போது, அமெரிக்காவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த துறவிகள் பலர் தீக்குளித்து உயிர் நீத்த சம்பவங்கள், உலகையே அதிரச் செய்தன! சீன அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 2001ஆம் ஆண்டில் சீனாவில் உள்ள தியானென்மென் சதுக்கத்தில் பலர் தீக்குளித்துத் தம்முடைய உயிரை மாய்த்துக்கொண்டனர்.

திராவிடக் கட்சிகளால்தான் தீக்குளிப்பு தமிழ்நாட்டுக்கு அறிமுகமானது எனச் சொல்பவர்கள் அறியாமையால் அப்படிச் சொல்கிறார்கள். இந்தியா முழுவதும் அண்மைக் காலம் வரை நடைமுறையில் இருந்த சதி என்ற உடன்கட்டை ஏறும் (ஏற்றும்?) வழக்கம் கூடஒரு வகையான தீக்குளிப்புதான்! கணவனின் சிதையில் மனைவியும் மூழ்கி உயிரைப் போக்கிக் கொள்கிற அந்தக் கொடிய முறை, தமிழகத்தில் அவ்வளவாக இருந்ததில்லை என்பதைக் கூட விமர்சனம் செய்பவர்கள் மறந்து விடுகிறார்கள்.

தீக்குளித்து உயிர்நீப்பதை நாம் ஆதரிக்கவில்லை என்ற போதிலும், அது உணர்த்தும் செய்தியை நாம் புறக்கணித்து விடக்கூடாது. ஒரு மனிதனின் உடல் மற்றும் உயிர் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதுதான் அரசாங்கத்தின் உச்சபட்ச அதிகாரமாக இருக்கிறது. ஒரு குடிமகனை சிறையில் அடைப்பதென்பது அவனுடைய உடலின் மீதான அரசாங்கத்தின் அதிகாரத்தை எடுத்துக்காட்டுகிறது. அது போலவே தன்னுடைய குடிமக்களின் உயிரைப் பறிக்கக்கூடிய அதிகாரத்தையும் அரசாங்கம் தன்னிடம் வைத்திருக்கிறது. மரணதண்டனை வழங்குவதன் மூலம் அந்த அதிகாரத்தை அரசாங்கம் செயற்படுத்துகிறது.

உயிரைப் பறிக்கக்கூடிய அதிகாரத்தைத் தன்னிடம் வைத்துள்ள அரசாங்கம், அதைக் குடிமகன் ஒருவன் மேற்கொள்வதற்கு அனுமதிப்பதில்லை. எந்தக் குடிமகனும் தன் உயிரை மாய்த்துக்கொள்ள அனுமதிகிடையாது. தற்கொலை என்பது சட்டப்படி ஒரு குற்றமாகும். அரசாங்கத்துக்கு, அதன் அதிகாரத்துக்கு குடிமகன் ஒருவன் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்றால், அதற்குப் பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. தன்னையே துன்புறுத்திக் கொள்வது அதில் ஒரு வழிமுறையாகும். உலகெங்கும் பாராட்டப்படுகிற காந்தியடிகளின் உண்ணாவிரதப் போராட்ட வழி முறை அத்தகையதுதான். அதை அகிம்சாமுறை என எல்லோரும் அழைக்கிறார்கள். அதைவிடவும் 'சுய இம்சை' என அதைக் குறிப்பிடுவதுதான் பொருத்தமானதாயிருக்கும்.



வியட்நாமில் தீக்குளித்த புத்தபிக்கு...

ஒரு மனிதன் தன்னுயிரைத் தானே மாய்த்துக் கொள்ளும்போது, அரசாங்கத்துக்கு அது மிகப்பெரும் சவாலாக மாறி விடுகிறது. தன்னுடைய வாழ்வின் மீது மட்டுமல்லாமல்... சாவின் மீதும் அவன் அதிகாரம் கொண்டவனாக மாறும் போது, அதை அரசாங்கத்தால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. தன்னுயிரின் மீது அதிகாரம் கொண்ட ஒரு மனிதன், எந்தவொரு சக்தியாலும் கட்டுப்படுத்தப்பட முடியாதவனாக மாறிவிடுகிறான். அது அரசாங்கத்தின் ஆளுமைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது. இந்த விதத்தில் பார்த்தால், தீக்குளித்து தன்னை மாய்த்துக்கொள்கிறவர்கள்...

**ரவிக்குமார் எம்.எல்.ஏ.**

அறியாமையால் அதைச் செய்கிறார்கள் என்று நாம் நினைப்பது தவறு என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

தீக்குளித்து உயிர் துறப்பவர்கள், தம்முடைய கையறு நிலையின் காரணமாகத்தான் அதைச் செய்கிறார்களா? அப்படியும் கூறிவிடமுடியாது. தினந்தோறும் ஈழத்தில் செத்துமடியும் தமிழ் சொந்தங்களுக்குத் தங்களால் எதுவும் செய்யமுடியவில்லையே என்ற இயலாமை அவர்களுக்கு இருந்திருக்கும் என்பது உண்மைதான். ஆனால், அது மட்டுமே அவர்களை சாகத் தூண்டி விடவில்லை. தங்களுடைய சாவாவது இங்குள்ள அரசாங்கங்களை வேகமாகச் செயற்பட வைக்காதா என்ற எதிர்பார்ப்புத் தான், அவர்கள் இந்த முடிவை மேற்கொள்வதற்கு அடிப்படை. அந்த எதிர்பார்ப்பை ஈடேற்றாமல், இந்த மரணங்களை வெறுமனே சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையாக அரசாங்கங்கள் கருதுமேயானால், அது மிகப்பெரும் தவறாகவே முடியும்!

ஈழத் தமிழர் பிரச்சினை ஒவ்வொரு நாளும் தீவிரமடைந்து வருவதைப் பார்க் கிறோம். அது தமிழ்நாட்டின் அரசியல் கணக்குகளையெல்லாம் அழித்து எழுதிக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்சிக்கு இவ்வளவு சதவிகித வாக்கு வங்கி இருக் கிறது. அந்தக் கட்சிக்கு அவ்வளவு இருக் கிறது. இரண்டும் சேர்ந்தால் இத்தனை சதவிகிதம் வரும். அதில் இவ்வளவு இடங்களை வெல்லலாம் என்று கணக் குப் போட்டுக்கொண்டிருந்தவர்கள், ஒரு தொகுதிக்கு இவ்வளவு பணம் செலவு செய்தால், இவ்வளவு வாக்குகளை வாங்கலாம் என திட்டமிட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லோரையும் ஈழப் பிரச்சினை தடுமாறச் செய்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் அங்கே பறிபோய்க் , கொண்டிருக்கும் அப்பாவி மக்களின் உயிர்கள் தமிழ்நாட்டு அரசியலைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருக்கின்றன. 'தமிழகத்துக்கு நான்தான் ஒரு மாற்றை வழங்கப் போகிறேன்' என்று சொன்னவர்களெல்லாம் இன்று வாய்மூடி மௌனிகளாகி விட்டார்கள். இப்போது தமிழக அரசியலில் அவர்கள் வழக்கொழிந்து போனவர்களாக ஓரங்கட்டப்பட்டு விட்டார்கள். இதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் இருக்கின்றன. அதற்குள் இலங்கையில் நிலைமை சீரடைந்துவிடும். அதன் பிறகு, அது ஒரு தேர்தல் பிரச்சினையாக இருக்காது என ஆட்சியாளர்கள் எண்ணக்கூடும். அப்படி நிலைமை சீரடைந்து, இலங்கையில் அமைதி ஏற்படுமானால்... எல்லோருக்குமே மகிழ்ச்சிதான். ஆனால், எந்த நிமிடமும் இலங்கையில் ஒரு மனிதப் பேரவலம் நிகழலாம். இன்று ஐம்பது, நூறு என கொல்லப்படும் தமிழர்கள் ஆயிரம், பத்தாயிரம் எனப் படுகொலை செய்யப்படலாம். அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கும் ஒரே சர்வதேச அமைப்பான செஞ்சிலுவை சர்வதேசக்குழு இருபத்தைந்தாயிரத்துக்கும் அதிகமான சவப் பைகளுக்கு ஆர்டர் செய் திருப்பதாகச் செய்திகள் வருகின்றன. அவ்வளவு தமிழ் மக்கள் சாவார்கள் என செஞ்சிலுவை சர்வதேசக் குழு எதிர்பார்க்கிறது என்பதைத்தான் இந்தச் செய்தி உணர்த்துகிறது. அப்படி ஒரு நிலை வந்தால் தமிழகத்தில் உணர்வுகள் எந்தளவுக்குக் கொழுந்துவிடும்!

*நன்றி: விகடன்*

## ஒஸ்கார் விருதினை வென்றார் ஏ.ஆர்.ரஹ்மான்! லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தமிழில் நன்றியுரை

உலகின் அதியுயர் சினிமா விருதாகக் கருதப்படும் 'ஒஸ்கார்' விருதினை இசைப் புயல் ஏ.ஆர்.ரஹ்மான் பெற்றுள்ளார்.

2009ஆம் ஆண்டுக்கான 'ஒஸ்கார்' விருது வழங்கும் விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. அதன்போது 'ஸ்லாம் டோக் மில்லியனர்' என்ற படத்தில் சிறந்த பாடல், சிறந்த பின்னணி இசை என்பவற்றுக்காக இரண்டு ஒஸ்கார் விருதுகள் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு வழங்கப்பட்டன.

விருதினைப் பெற்ற பின்பு, அரங்கில் ஏ.ஆர்.ரஹ்மான் உரையாற்றும்போது, தனது தாய்மொழியான தமிழில் சில வார்த்தைகள் பேச விரும்புவதாகக் குறிப்பிட்டார். பின்பு ''எல்லாப் புகழும் இறைவனுக்கே'' என்ற தனக்குப் பிடித்தமான வார்த்தைகளை- லொஸ் ஏஞ்சல்ஸிலில் உள்ள ஒஸ்கார் விருது வழங்கும் அரங்கில் - உச்சரித்தார். இதன்மூலம் தனக்கு மட்டுமல்லாது தமிழ்மொழிக்கும் அவர் பெருமை சேர்த்துள்ளார்.

ஒஸ்கார் விருதினை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையும், முதல் தமிழர் என்ற சிறப்பும் ஏ.ஆர்.ரஹ்மானுக்குக் கிடைத்துள்ளது. அத்தோடு ஒரே தடவையில் இரண்டு ஒஸ்கார் விருதுகளை வென்றும் அவர் சாதனை படைத்துள்ளார்.

'இசைஞானி' இளையராஜா, டி.ராஜேந்தர் ஆகியோரிடம் உதவியாளராகக் கடமையாற்றிய ஏ.ஆர்.ரஹ்மான் 1992ஆம் ஆண்டு மணிரத்னம் இயக்கிய 'ரோஜா' படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமானார். தன்னுடைய முதற்படத்திலேயே - 19 வயதில் - சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதைப் பெற்று எல்லோரது கவனத்தையும் ஈர்த்தார்.

அதன்பின் தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் உள்ளிட்ட பல்வேறு மொழிப் படங்களில் இசையமைப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.

இதுவரை இந்தியர்களின் கனவு விருதாக இருந்த 'ஒஸ்கார்' விருதினை நனவாக்கிய ஏ.ஆர்.ரஹ்மானுக்கு இந்திய ஜனாதிபதி, பிரதமர், தமிழக முதலமைச்சர், இந்தியத் திரையுலகப் பிரமுகர்கள் எனப் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25ஆம் மாத நினைவஞ்சலி



அமரர் யோன் அல்பேட்

அன்னை மடியில்: 19.01.1941

ஆண்டவன் அடியில்: 24.01.2007

'சீவியத்தில் நேசித்தோரே
என்னை மரணத்திலும்
மறவாதீர்கள்'

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி/557248) மருமகன்.

# வேலையாள் தேவை

புடைவை வியாபார நிலையத்திற்கு வேலையாள் தேவை. அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

*21, மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி/557250)

# தவறிவிட்டது

தியாகராஜா பிரசாந்தன் என்பவரது தே.அ.அ (890363393V) ஆனைப்பந்திக்கும் கன்னாதிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: A.S.தியாகராஜா
271/1, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி வேலாயுதம் பஞ்சபாக்கியம்
### *(இளைப்பாறிய குடும்பநல சேவையாளர்)*



நெற்கொழு கிழக்கு, கொம்மந்தறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் பஞ்சபாக்கியம் 20.02.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலாயுதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு இளையமகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா நடராசா மற்றும் நாகலிங்கம் (தபால் அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் முருகதாசன் (பொறியியலாளர் U.K), கிருபதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவாஜினியின் (கணக்காளர் U.K) அன்பு மாமியும் காலஞ்சென்ற குயின்மேரி மற்றும் வசந்தகுமாரி, செல்வகுமாரி, இராசகுமாரி, இராசேந்திரம், இராசவரோதயம், விஜயகுமாரி, சந்திரகுமாரி, ரோகினி ஆகியோரின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2009) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெற்கொழு கிழக்கு,
கொம்மந்தறை (சி/557252)

தகவல்:
வ.வேலாயுதம் *(கணவர்).*

## பேடன்பவல் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்24

சாரண இயக்கத்தின் தந்தை என வர்ணிக்கப்படும் பேடன் பவல் பிரபுவின் நினைவு தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற்றன.

வித்தியாலய அதிபர் பே.அருட்சோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்குமுதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் கலந்து கொண்டார். (203-207)

## நெல் அறுவடை

யாழ்ப்பாணம்,பெப்24


குடத்தனைப் பகுதியில் நெல் அறுவடை மும்முரமாக நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (202-78)

# மெய்வன்மைப் போட்டி

கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை அதிபர் கி.கிருஷ்ணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்துகொள்வார். (201)

# 31ஆம் நினைவு நாள் அழைப்பு



அமரர்
செல்லையா
கந்தசாமி
*(கந்தரத்தினம் மாஸ்ரர்)*
RTD SPORTS OFFICER

பிறப்பு
17.07.1921

இறப்பு
25.01.2009

கடந்த 25.01.2009 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (24.02.2009) செவ்வாய்க்கிழமை மு.ப.11.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் துக்க நிகழ்வில் பங்குகொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய ஆஸ்பத்திரி முன்ஒழுங்கை
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர். (சி/557251)

# 90ஆம் நாள் நினைவஞ்சலி

கண்மகிழ
30
★
06
★
1982



கண்நெகிழ
27
★
11
★
2008

## செல்வி தேன்மொழி தவராஜா

பண்பின் சிகரமே பாசத்தின் உறைவிடமே
பாசவலையில் எம்மைச் சிக்க வைத்தாயே
புதுமனையில் உன் வாழ்வு சிறக்கும் என்றிருந்தோமே
பெருமழை பெரு வெள்ளமாய் மாறியதேனம்மா
பேரிடி வீழ்ந்ததம்மா உன் உறவுகட்கு
தன்னல் மொழி பேசும் கயல் விழியாளே
நிஷா வடிவில் உன்னைக் கவர்ந்த காலனவன் கொடியவனே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'ஞானசேகரம் இல்லம்',
இணுவில் தெற்கு, இணுவில்

*பிரிவால் வாடும்:*
குடும்பத்தினர். (82988)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்

பிறப்பு
04
-
01
-
1925



இறப்பு
25
-
01
-
2009

## திருமதி சின்னத்துரை தங்கம்மா (அம்மாச்சி)

எமது குடும்பத்தின் தலைவியாய் இருந்து எமக்கு நல்வழி காட்டிய எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் அன்பின் அரவணைப்பால் பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் எம்முடன் வாழ்ந்த அன்புத் தெய்வமே- எங்கள் நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவிருக்கும் அம்மா!

வண்ணார்பண்ணை, கலட்டி, இல:17, சீனியர்லேனை வாழ்விடமாகவும், 17/B/3 மயூரா பிளேஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அன்புத் தெய்வம் சின்னத்துரை தங்கம்மா கடந்த 25-01-2009 அன்று எம்மை விட்டுப் பிரிந்தபோது ஓடோடி வந்து உதவி செய்த அயலவர்க்கும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசிமூலமும், மின்அஞ்சல் மூலமும், நேரில் வந்தும் மலர் வளையம் வைத்தும், மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியோருக்கும், துக்கத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்த எல்லோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (24.02.2009) நண்பகல் 12மணிக்கு அன்னாரின் வசிப்பிடமாகிய 17/B/3, மயூரா பிளேஸ், கொழும்பு -6 இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோஷன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மகன்மார்கள், மகள்மார்கள்,
மருமகன்மார்கள், மருமகள்மார்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப்பிள்ளைகள்
சகோதரன்: த.தங்கராசா

தகவல்:
பிறேம்குமார் *(அப்பலோ)*

குறைந்த கட்டணத்தில் UK யில் கல்வி
BA, BBA, MBA, BSc, MSc,
After graduation two years workpermit
We are the OFFICIAL REPRESENTATIVE of
Anglian College London
Grafton College of Management Sciences Ireland London
Apply Now April 2009 Intake
Graduate School
South London College
Admission
Certificate Courses
Diploma Courses
Undergraduate Courses
Postgraduate Courses
and many more courses.....
VISA consultancy to any country any category
Fresh Re Apply Appeal
UK, USA, CANADA, AUSTRALIA, UKRAINE, POLAND, BELARUS FRANCE, GERMANY, ITALY, SWISS, RUSSIA, NEW ZEALAND ஆகிய நாடுகளுக்கான Student, Visit Business, Migration மற்றும் Settlement, Working holiday Maker ஆகியவற்றுக்கான (Visa) ஒழுங்குகள் மற்றும் Documentation வேலை யாவும்
சகல பாடநெறிகளும் குறைந்த கட்டணத்துடன் பயிலும் வசதி அடிப்படை தகைமை O/L. IELTS அவசியமில்லை
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வருவதற்கான ஒழுங்கு செய்துதரப்படும்
PARANAN ASSOCIATES (PTE) LTD
403,1/1 Galle Road, Wellawatte, Colombo- 6. T.P:2551241 Fax:2507932
Mobile:0777-370292 www.paranan.com email: info@paranan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - பலஸ்தீனத்துக்கான ஆயுத விற்பனையை முடக்குக!

## சர்வதேச மன்னிப்புச் சபை ஐ.நாவிடம் கோரிக்கை

காஸா, பெப். 24

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்குமான ஆயுத விற்பனைகளை முடக்குமாறு, சர்வதேச மன்னிப்புச் சபை அறைகூவல் விடுத்துள்ளது.

இஸ்ரேல், ஹமாஸ், இதர பலஸ்தீன ஆயுதக் குழுக்கள் ஆகியவற்றிற்கான ஆயுத விற்பனைகளுக்குத் தடை விதிக்குமாறு ஐ.நா. பாதுகாப்புச் சபையை சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. சமீபத்திய காஸா பகுதி சண்டையையொட்டி, இந்த அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலும், ஹமாஸ் ஆயுதக் குழுவும் தங்களால் வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களை அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக பயன்படுத்தியுள்ளன. இவற்றால் உயிரிழப்புகளும், அனர்த்தங்களும் விளைந்துள்ளன. இவை தொடர்பான தக்க சான்றுகள் உண்டு என்றும் இச்சபை குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவால் விநியோகிக்கப்பட்ட வெள்ளை பொஸ்பரஸ், இதர ஆயுதங்கள் ஆகியவற்றை சட்ட விரோதமாக இஸ்ரேல், காஸா சண்டையில் பெருமளவில் பயன்படுத்தியுள்ளது. அதேவேளை, ஹமாஸ் ஆயுதக் குழு, இஸ்ரேலுக்குள் இலக்கற்ற முறையில் தான்தோன்றித்தனமாக றொக்கெட்டுகளை ஏவியுள்ளது என்றும் மனித உரிமைகளுக்கான இச்சபை இரு சாராரையும் சாடியுள்ளது.

''இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களால் பெருந்தொகையான சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். நூற்றுக்கணக்கான குழந்தைகள் மடிந்துள்ளார்கள். குடியிருப்பு இல்லங்களும், உட்கட்டமைப்புகளும் பெருமளவில் அழித்தொழிக்கப்பட்டுள்ளன'' என்றும் அது விவரித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் உண்மையைக் கண்டறிவதற்கான குழு, தென் இஸ்ரேலிலும், காஸாவிலும் மேற்கொண்ட நேரடி ஆய்வுகளை அடுத்து, மன்னிப்புச் சபை இக்குற்றச்சாட்டுகளை இரு சாராருக்கும் எதிராக சுமத்தியுள்ளது.

''அமெரிக்காவால் விநியோகிக்கப்பட்ட பொஸ்பரஸ், இதர ஆயுதங்கள் ஆகியவற்றை இஸ்ரேலிய படைகள் வகை தொகையின்றி பயன்படுத்தியுள்ளன. இது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மீறிய ஒரு செயலாகும். அத்துடன் யுத்தக் குற்றவிதிகளுக்கு உட்பட்ட ஒரு காரியம்'' என உண்மையைக் கண்டறிவதற்கான குழுவின் தலைவர் டொனா டெல்லா றொவேரா தெரிவித்துள்ளார்.

''அதேவேளை, ஹமாஸ் ஆயுதக் குழுவும், இதர பலஸ்தீன ஆயுதக் குழுக்களும் தனித்தும், கூட்டாகவும் இஸ்ரேலிலுள்ள பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நூற்றுக்கணக்கான றொக்கெட்டுகளை ஏவியுள்ளன'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இந்த றொக்கெட்டுகள் மூன்றாவது சக்தியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. காஸாவுக்குள் கடத்தப்பட்டுமுள்ளன. இஸ்ரேல் மேற்கொண்ட ஆயுதத் தாக்குதல்களைப் போல றொக்கெட் தாக்குதல்களும் பாரதூரமானவை. போர்க் குற்றத்துக்கு உட்பட்டவை. இவற்றாலும் பெருந்தொகையான சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்'' என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இச்சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தமக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை இஸ்ரேலும், ஹமாஸ் இயக்கமும் நிராகரித்துள்ளன.

காஸாவில் கடந்த மாதம் நடைபெற்ற 22 நாள்கள் சண்டையில், ஏறத்தாழ 1,300 காஸா வாசிகளும், 13 இஸ்ரேலியர்களும் பலியாகியுள்ளார்கள்.



பொலிவியா நாட்டின் ஒருரோ நகரில் ஆண்டு தோறும் இயற்கைத் தெய்வங்களை வணங்கும் திருவிழா நடக்கிறது. மிகவும் பிரபலமான இந்த விழாவுக்கு உலக பாரம்பரிய அந்தஸ்து வழங்கி ஐ.நாவின் யுனெஸ்கோ அமைப்பு கௌரவித்துள்ளது. இந்த ஆண்டுக்கான விழா சனிக்கிழமை நடந்தது. அழகிகள் பல்வேறு வேடங்களில் வந்து கலக்கினார்கள். சூரியக் கடவுளின் மகன் வேடத்தில் வந்து பார்வையாளர்களை இந்தப் பெண் பெரிதும் கவர்ந்தார்.

## பாகிஸ்தானில் அதிகாரி தலிபான்களால் கடத்தல்

இஸ்லாமாபாத், பெப். 24

பாகிஸ்தானின் சுவாட் பகுதியின் புதிய மாவட்ட இணைப்பு அதிகாரியான குசால் ஹான், தனது மெய்ப்பாதுகாவலர்கள் 6 பேருடன் தலிபான் தீவிவாதிகளால் ஆயுத முனையில் கடத்தப்பட்டுள்ளார்.

சுவாட்டின் முக்கிய நகரான மிங்கோராவுக்குச் சென்று கொண்டிருந்த வேளையில், இவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட இணைப்பு அதிகாரியை விடுதலை செய்வதற்கான முயற்சிகளில் தாங்கள் ஈடுபட்டுள்ளனர் என பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஸ்பானிய படகில் தீ விபத்து

நடுக்கடலில் தீப்பற்றிக் கொண்ட ஸ்பானிய மீன்பிடிப் படகிலிருந்தவர்கள், தக்க தருணத்தில் கனேடிய கரைப் பிராந்திய காவற்படையினரால் மீட்கப் பட்டார்கள்.

30 மீற்றர் நீளமுள்ள மொன்டி கலினிரோம் என்னும் இப்படகில், நியூ பவுண்ட்லேண்டின், சென் ஜோன்ஸுக்குக் கிழக்கே, 400 கிலோ மீற்றர் (250 மைல்) தொலைவில் தீப்பற்றிக் கொண்டது.

இதை அவதானித்த கனேடிய கரைப் பிராந்திய ரோந்துப் படையினரால், தீப்பற்றிக் கொண்ட படகிலிருந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டனர்.

தீப்பற்றிய படகு பின்னர் கைவிடப் பட்டது. சுவாசக் கோளாறால் அவதிப்பட்ட ஒருவர், ஹெலிக்கொப்டர் மூலமாக, சென். ஜோன்ஸ் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

உலக அரங்கில்

# பாக். உளவுப்படைக்கும் தலிபான்களுக்கும் தொடர்பு

## அமெ. பத்திரிகை திடுக்கிடும் தகவல்

பாகிஸ்தான் உளவுப்படைக்கு தலிபான் தீவிரவாதிகளுடன் நேரடித் தொடர்பு உண்டு. அதனால்தான் பாகிஸ்தானுக்குள் ஏவுகணைத் தாக்குதல் நடத்த முடிவு எடுக்கப் பட்டது என அமெரிக்கா கூறியுள்ளது.

பாகிஸ்தானில் பழங்குடியினப் பகுதியில் அட்டூழியம் செய்துவரும் தலிபான் ஆதரவுத் தீவிரவாதிகளை ஒடுக்குவதில் பாகிஸ்தான் இராணுவம் மெத்தனம் காட்டி வருகிறது. இதனால் அமெரிக்கா, ஆள் இல்லாத விமானங்கள் மூலமாக அப்பகுதியில் தாக்குதல் நடத்தி வருகிறது. இதுபற்றி பாகிஸ்தான் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் அமெரிக்காவின் தாக்குதல் நீடித்து வருகிறது.

''பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஷ்பக் பர்வேஸ் கயானி உட்பட அந்நாட்டின் உயர் இராணுவ அதிகாரிகளின் தொலைபேசி உரையாடலை அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயும், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஏஜென்சியும் ஒட்டுக்கேட்டு வந்தன. அதில் உயர் அதிகாரிகள் மட்டத்தில் நடந்த ஒரு உரையாடலின்போது, தலிபான், பாகிஸ்தானின் இராணுவச் சொத்து என்று இராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

''பாகிஸ்தான் இராணுவ ஜெனரல்கள் 2 பேர் உரையாடும்போது, ''இந்தியாவின் அத்துமீறலைத் தடுக்க தலிபான்களை ஆதரிப்பது அவசியம்'' என்ற கருத்து பரிமாறிக்கொள்ளப்பட்டது.

''மற்றொரு தொலைபேசி உரையாடலின் மூலம், ஆப்கானிஸ்தானில் பெரிய குண்டுத் தாக்குதல் நடத்த தலிபான்களுக்கு பாகிஸ்தான் உளவுப்படையான ஐ.எஸ்.ஐ. உதவி செய்யப்போவது தெரியவந்தது. ஆனால் எந்த இடத்தில் தாக்குதல் நடக்கும் என்று தெரியவில்லை. இந்த உரையாடல் நடந்த சில நாள்களில், ஆப்கானிஸ்தானில் கந்தகார் சிறையை தலிபான்கள் தாக்கி, அங்கிருந்த கைதிகளை விடுவித்தனர்.

''இதன்மூலம் பாகிஸ்தான் உளவுப்படையான ஐ.எஸ்.ஐ., பாகிஸ்தான் இராணுவம் ஆகியவற்றுக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்குமிடையே நேரடித் தொடர்பு இருப்பது அமெரிக்காவுக்குத் தெரியவந்தது. இரு தரப்பினரும் முழு ஒருங்கிணைப்புடன் செயற்படுவது தெரியவந்தது. அதனால் தலிபான்களுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவம் முழு மனதோடு தாக்குதல் நடத்தாது என்று அமெரிக்கா உணர்ந்து கொண்டது. எனவேதான், பாகிஸ்தானில் உள்ள தலிபான்கள் மீது பாகிஸ்தானுக்குள் புகுந்து தாக்குவது என்ற முடிவை அமெரிக்கா எடுத்தது. ''

இந்தத் தகவல்கள் பாகிஸ்தானில் வெளியாகும் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளன.

## எகிப்தில் குண்டுவெடிப்பு; பிரான்ஸ் பயணி பலி

கெய்ரோ, பெப். 24

17 வயதான பிரான்ஸ் யுவதி ஒருவரே குண்டு வெடிப்பில் பலியாகியுள்ளார். காயமடைந்தவர்களில் 10 பிரான்ஸியரும், 4 ஜேர்மனியரும், 3 எகிப்தியரும் அடங்குவர். படுகாயமடைந்த 6 பேர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர் என்றும் அவ்வட்டாரம் விளக்கியது.

''இந்த உணவகம் ஹுஸைன் மசூதிக்கருகில் அமைந்துள்ளது. இது வரலாற்று புகழ் படைத்த சுற்றுலா மையப் பகுதியாகும். உணவகத்தில் சுற்றுலாப் பயணிகள் உட்பட பெருந்தொகையானோர் திரண்டிருந்த சமயத்தில், ஒரு புறத்தில் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது'' என ஓர் அதிகாரி குறிப்பிட்டார்.

## பிந்திய கருத்துக் கணிப்புகளில் ஒபாமாவின் செல்வாக்கு வீழ்ச்சி

வாஷிங்ரன், பெப். 24

அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா பதவியேற்ற ஒரு மாத காலத்தில் அவரது செல்வாக்கில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனை இரு கருத்துக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

ஒபாமா பதவியேற்ற ஒரு மாத கால நிறைவையொட்டி, அவரது செல்வாக்கைப் பரீட்சிக்க, இரு தொலைக்காட்சி நிறுவனங்கள் தனித் தனிக் கருத்துக் கணிப்பீட்டை மேற்கொண்டன.

சி.என்.என்.தொலைக்காட்சி நிறுவனம் மேற்கொண்ட கருத்துக் கணிப்பீட்டில், ஒபாமாவின் பணிகள் செம்மையாகவுள்ளன என 67 சதவீதம் பேர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

11 நாள்களுக்கு முன்னர் இந்நிறுவனம் மேற்கொண்ட கணிப்பீட்டில், ஒபாமாவுக்கான ஆதரவு பலம் 76 சத வீதமாக இருந்தது. தற்போது இது 67 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது.

'பொக்ஸ் நியூஸ்' தொலைக்காட்சி நிறுவனம் நடத்திய கணிப்பீட்டில், ஒபாமாவுக்கான ஆதரவு பலம் 60 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 3 வாரங்களுக்கு முன்னர் இந்நிறுவனம் மேற்கொண்ட கணிப்பீட்டில், இந்த எண்ணிக்கை 65 சதவீதமாக ஏற்றம் பெற்றிருந்தது.

## சோமாலியாவில் கார்க்குண்டுத் தாக்குதல்; அமைதிப்படையில் 13 பேர் உயிரிழப்பு!

சோமாலியாவின் தலைநகரான மொகடிஷுவிலுள்ள ஆபிரிக்க ஒன்றிய இராணுவத்தளம், ஞாயிற்றுக்கிழமை, இஸ்லாமிய தீவிரவாதிகளின் கார்க்குண்டு தாக்குதலுக்கு இலக்கானது. இதில் ஆபிரிக்க ஒன்றிய அமைதிப்படை வீரர்களில் 11 பேர் கொல்லப்பட்டனர். 15 பேர் படுகாயமடைந்தனர்.

இக்கார்க்குண்டுத் தாக்குதலுக்கு, சோமாலிய இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களில் ஒன்றான அல்-ஷபாப் உரிமை கோரியுள்ளது. இக்குழு, அதன் இரு உறுப்பினர்களே, வெற்றிகரமாக இக்கார்க்குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இத்தற்கொலைக் கார்க்குண்டுத் தாக்குதலுக்கு ஆபிரிக்க ஒன்றியம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ''இத்தாக்குதலில் அமைதிப் படையைச் சேர்ந்த 11 வீரர்கள் பலியானார்கள். இவர்கள் புருண்டி வீரர்களாவர். 15 பேர் காயமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் ஆபத்தான கட்டத்திலுள்ளார்கள்'' என்றும் அது அதன் கண்டன அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

''சோமாலியா குண்டுதாரி களுக்கு, நாட்டு மக்களின் அபிலாஷைகள், நாட்டின் நலன்கள் ஆகியவற்றைப் பற்றிய அக்கறை கிஞ்சித்தும் கிடையாது. தாக்குதல்கள் மாத்திரமே இவர்களின் இலட்சிய நோக்கு. அதேவேளை, பெப்ரவரி 17 ஆம் திகதி முதல், அமைதிப் படைத்தளம் மீது, தொடர்ச்சியாக இவர்கள் மோட்டார் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள்'' என ஆபிரிக்க ஒன்றியம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

''மொகடிஷுவிலுள்ள ஆபிரிக்க ஒன்றிய அமைதிப்படைத்தளம் மீது, கடந்த மே மாதத்திலும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 13 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் அதிகமானோர் சிவிலியன்களாவார். இத்தாக்குதலுக்கும் அல்-ஷபாப் தீவிரவாத இயக்கமே உரிமை கோரியிருந்தது'' என ஒன்றியப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## நவாஸ் ஷெரீப்பை தேர்தலில் போட்டியிட விடாது தடுக்கின்றாராம் பாக்.,ஜனாதிபதி

இஸ்லாமாபாத், பெப். 24

''என்னையும், எனது சகோதரரையும் தேர்தலில் போட்டியிட விடாமல் தடுக்க, ஜனாதிபதி சர்தாரி சதி செய்கிறார்'' என் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப் லாகூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குற்றஞ்சாட்டினார்.

''[illegible]க்காக, உச்சநீதிமன்றத்தி[illegible]க்கு எதிரான வழக்குகளைச் சாட்டாக பயன்படுத்த அவர் முனைந்துள்ளார். இது ஒரு சதியாகும்'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''நான் பாகிஸ்தானின் எதிர் காலத்துக்காக, எதையும் தியாகம் செய்ய தயாராகவே இருக்கிறேன். நாட்டின் கட்டுக்கோப்பைக் கட்டியெழுப்பவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவுமே நான் உழைப்பேன். இதுவே எனது இலட்சியமாகும் '' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழரின் பிரச்சினையில் சிலர் கட்சி பாகுபாடு கருதிச் செயற்படுகின்றனர்

## முதல்வர் கருணாநிதி வேதனை



சென்னை, பெப்ரவரி 24

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தொடக்கத்திலேயே கட்சிப் பிரச்சினையாகக் கருதிச் சில நண்பர்கள் செயற்பட்டவர்கள். அவர்களுக்கு இப்போது இலங்கையில் தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது முக்கியமல்ல. தங்களது அரசியலை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே முக்கியம் - என்று கருணாநிதி கவலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ நடத்துகின்ற தமிழினப்படுகொலையைக்கண்டித்து இங்குள்ள தமிழர்களை கட்சி சார்பற்ற முறையில் அனைவரையும் அணிவகுத்து தமிழக அரசின் சார்பிலேயே மத்திய அரசை வலியுறுத்தி, இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டுமென்று கோரி நடத்தத் தொடங்கிய அறவழிக் கிளர்ச்சியில் தாங்களும் ஓரணியில் வந்து நிற்கின்றனர் எனச் சொல்லி விட்டு ஆரம்பத்திலேயே அந்த அணியைச் சிதைக்க இலங்கைத் தமிழர் பிரச்சினையை தங்கள் அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ள இரண்டு மூன்று நண்பர்கள் ஈடுபட்டதை தமிழ்நாடு நன்கறியும்.

ஒன்றுபட்டு எல்லோரும் ஒருமித்துக்குரல் கொடுப்போம் என்று அரசின் சார்பில் வேண்டிய போது, அதற்கு இணங்காமல் அவர்கள் தனித்தே நின்று குரல் கொடுத்தார்கள்.

அனைத்துக்கட்சிகளின் மனிதச்சங்கிலிக்கு வரமறுத்தார்கள். அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு வராமலே ஒதுங்கினார்கள்.

டில்லியில் பிரதமரைச் சந்திக்கச் சென்ற போது வரமறுத்தார்கள். இலங்கைப் பிரச்சினை என்றால் அது தங்களால் மட்டுமே நடைபெற வேண்டும்.

தி.மு.க., காங்கிரஸ் போன்ற கட்சிகளுக்கு அதில் தொடர்பிருக்கக் கூடாது என்று திட்டமிட்டே இன்று நேற்றல்ல, இலங்கையிலே பிரச்சினை தோன்றிய காலத்திலே இருந்து தங்களுக்கு என்று தனிவழி வகுத்துக்கொண்டார்கள். இப்போதும் அதே வழியைப் பின்பற்றுகிறார்கள்.

தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்ச்சியின் காரணமாகத்தான் தம்பி முத்துக்குமார் தீக்குளித்தார். அவர் குடும்பத்திற்கு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட இரண்டு லட்சம் ருபா நிதியை வாங்கக்கூடாது என்று முத்துக்குமார் குடும்பத்தாரைத் தடுத்துவிட்டார்கள்.

இதிலிருந்தே அவர்கள் இலங்கைப் பிரச்சினையைத் தொடக்கத்திலேயே கட்சிப் பிரச்சினையாகக் கருதிச் செயற்பட்டவர்கள் என்பதை புரிந்து கொள்ளலாம்.

அந்த நண்பர்களுக்கு இப்போது இலங்கையில் தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது முக்கியமல்ல. அந்தக் கோஷத்தை வைத்து தமிழ்நாட்டில் தங்களது அரசியலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் முக்கியம்.

அதனால்தான் முழுக்க முழுக்க இங்கேயிருக்கின்ற தி.மு.க., காங்கிரஸ் மற்றும் தோழமைக்கட்சிகளின் கூட்டணியை உடைப்பதற்கு, மக்களிடத்திலே தவறான பிரசாரங்களைச் செய்தும் யார் தமிழ்நாட்டில் எந்தவொரு காரியத்திற்காக அமைதியாக கிளர்ச்சி நடத்தினாலும் அங்கே போய் புகுந்து கொண்டு அவர்களை வன்முறையாளர்களாக மாற்றி, அதன் மூலம் சட்டம், ஒழுங்கு கெடுவதற்கு வழிவகுத்து அதை பூதாகரமாக்கி தி.மு.கவைக் கவிழ்த்து விடலாம் என்று கனவு காணுகிறார்கள்.

தங்களுடைய கனவு வெற்றிபெற இப்போது அவர்களுக்குக் கிடைத்திருக்கும் ஆயுதம் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு அல்ல என்பதற்கு உதாரணம் எதிர்பாராத விதமாக நடந்த சட்டத்தரணிகள் - பொலிஸார் மோதல் ஆயுதமாகக் கிடைத்திருக்கிறது. அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு இன்னும் தையல் கூட பிரிக்காத நிலையில் இருக்கும் என் மனம் நோகும்படி என்னென்ன காரியங்கள் இந்த ஆட்சிக்கு எதிராகத் தூண்டி விடப்படுகின்றன.

சட்டத்தரணிகளும், பொலிஸாரும் இவர்களுக்கு பலிகடா ஆகிவிடக்கூடாது - என்று அதில் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டி வேளாங்கண்ணியில் உண்ணாவிரதம்!

நாகை, பெப். 24

இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டி நாகை மாவட்டம் வேளாங்கண்ணி பேராலயத்தில் நேற்றுமுன்தினம் காலை பேராலய அதிபர் சேவியர் தலைமையில் ஆலய வளாகத்தில் உண்ணாவிரதம் நடந்தது.

பங்குத்தந்தை ஆரோக்கியதாஸ் முன்னிலை வகித்தார். 500 க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர். உண்ணாவிரத முடிவில், இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டி மெழுகுவர்த்தி ஏந்தி கீழ்க்கோயிலில் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

தமிழ் ஆயர் பேரவை சார்பில் இலங்கையில் போர் நிறுத்தம் வலியுறுத்தி புதுக்கோட்டையில் நேற்றுமுன்தினம் கிறிஸ்தவர்கள் மௌன ஊர்வலம் மற்றும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். திருவாரூரிலும் கிறிஸ்தவர்கள் நேற்றுமுன்தினம் அமைதிப் பேரணி நடத்தினர்.

இதேவேளை, போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி நாகர்கோவிலில் புன்னைநகர் பங்கு மக்கள் சார்பில் ஊர்வலமும், கோட்டார் பங்கு மக்கள் சார்பில் உண்ணாவிரதப் போராட்டமும் நடந்தது. கோட்டார் மறைமாவட்ட சிறார் பணிக்குழு சார்பில் பேரணியும் நடந்தது.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் சோனியா மௌனம்: தமிழருவி மணியன் காங்கிரஸிலிருந்து விலகல்!



சென்னை,பெப்.24

ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி மௌனம் சாதித்து வருவதற்கு கண்டனம் தெரிவித்து அக்கட்சியின் தமிழ்நாடு பிரிவின் பொதுச் செயலாளராக பதவி வகித்து வந்த தமிழருவி மணியன் கட்சியின் அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் விலகியுள்ளார்.

காங்கிரஸின் அடிப்படை உறுப்பினர் தொடக்கம் அனைத்துப் பொறுப்புக்களிலும் இருந்து விலகிய தமிழருவி மணியன், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதுரையில் ஊடகவியலாளர்களுக்கு அளித்த நேர்காணலின் போது இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

மஹிந்த ராஜபக்ஷ அரசால் தமிழினம் படுகொலை செய்யப்பட்டு வரும் நிலையிலும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தனது மௌனத்தை கலைக்கவில்லை. எனவே, அவரின் தலைமையிலான கட்சிக்கு தமிழ் மொழியையும் சமுதாயத்தையும் அடகு வைப்பதை எனது இதயம் விரும்பவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து செயற்பட்டால், ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசுக்கு நிர்ப்பந்தம் அளிக்க முடியும். தமிழக முதலமைச்சர் கருணாநிதி, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு பேரவை சார்பில் நடைபெறும் போராட்டத்துக்கு தலைமை வகிக்கவேண்டும் - என்றார்.

# உடனடிப் போர் நிறுத்தம் செய்யும்படி இலங்கையிடம் பிரணாப் வலியுறுத்து

## அமைச்சர் வேலு தகவல்



கொச்சி, பெப். 24

உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யுமாறு இலங்கை அரசிடம் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி வலியுறுத்தியுள்ளார் - என்று ரயில்வே இணை அமைச்சர் ஆர்.வேலு கூறியுள்ளார்.

கேரள மாநிலம் கொச்சியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் அல்லற்படும் தமிழர்களுக்காக இந்திய மக்கள் அனைவருமே அனுதாபப் படுகிறார்கள். அவர்கள் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்படுவதைக் கண்டு வேதனைப்படுகிறார்கள். அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இலங்கையில் நடக்கும் இராணுவத் தாக்குதல் பற்றி பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் கவலை தெரிவித்து உள்ளார். இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட நாங்கள் முயற்சி செய்து வருகிறோம்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இலங்கை அரசை வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி வற்புறுத்தி உள்ளார். இலங்கையில் போர் நிறுத்தம் விரைவில் ஏற்படும் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார்.

# இலங்கை இந்தியாவுக்கு நட்புநாடா? இல்லை என்கின்றார் ஜெகத் கஸ்பார்!

## சகல உதவிகளையும் நிறுத்தவும் கோருகிறார்

சென்னை, பெப். 24

இலங்கை அரசுக்கு, இந்தியா வழங்கும் இராணுவ, பொருளாதார உதவிகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். இலங்கை இந்தியாவுக்கு நட்பு நாடு இல்லை. வரலாற்று ரீதியாக இலங்கை இந்தியாவின் நட்புநாடாக இருந்ததுமில்லை - என்று இன அழிப்புக்கு எதிரான இந்தியர்கள் அமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவரான அருட்திரு.ஜெகத்கஸ்பார் கூறியுள்ளார்.

அனைத்து சமூகத்தவர்களும் இணைந்து இலங்கைப் பிரச்சினைக்குப் போராடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட இன அழித்தலுக்கெதிரான இந்தியர்கள் அமைப்பின் பேரணி நேற்றுமுன்தினம் சென்னையில் நடந்தது.

இப்பேரணியில் சுப.வீரபாண்டியன், அறிவுமதி உட்பட இலக்கியவாதிகளும் மாணவர்கள், மாணவிகள், திருநங்கைகள், ஆன்மீகவாதிகள் என்று பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

இப்பேரணியின் முடிவில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அப்போது மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கை அரசுக்கு இந்தியா உதவுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இலங்கை இந்தியாவுக்கு நட்பு நாடு இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வரலாற்று ரீதியாக இலங்கை இந்தியாவின் நட்புநாடாக இருந்ததில்லை.

இந்திய - பாகிஸ்தான் போரின்போது பாகிஸ்தான் பக்கமாக இலங்கை நின்றது. இந்தியா வல்லரசாக வளர்வதை விரும்பாத நாடுகளுக்கு தன் நிலப்பரப்பினை கொடுத்துள்ளது.

இந்திய மீனவர்கள், நூற்றுக்கணக்கானோரை ஈவு இரக்கமின்றி சுட்டுக்கொன்றுள்ளது. நமது மீனவர்கள் 200க்கும் மேலானோரை படுகொலை செய்த ஒரு நாட்டுக்கு நட்புநாடு என்ற சிறப்பும் இராணுவ, பொருளாதார உதவிகளும் வழங்குவது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.

வெளியுறவு நிர்ப்பந்தங்கள் எதுவாக இருந்தாலும் சொந்த நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதே தேசிய அரசுகளின் முதல் கடமையாகும் - என்றார்.

# உச்ச நீதிமன்ற மோதல் சம்பவத்தைக் கண்டித்து வரும் 27ஆம் திகதி கறுப்பு தினமாக அனுஷ்டிப்பு

## சட்டத்தரணிகள் முடிவு

புதுடில்லி, பெப். 24

சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற பொலிஸ் தடியடியைக் கண்டித்து, நாடு முழுவதும் வரும் 27ஆம் திகதி கறுப்பு தினமாக அனுசரிக்க சட்டத்தரணிகள் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து புதுடில்லியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அகில இந்திய பார் கவுன்ஸில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விவரம் வருமாறு -

சென்னை உயர் நீதிமன்றத்தில் பொலிஸார் நடத்திய தடியடியைக் கண்டிக்கிறோம். இந்தத் தாக்குதலில் உயர் நீதிமன்ற நீதிபதி உட்பட பல சட்டத்தரணிகள் காயமடைந்துள்ளனர்.

இந்தக் கொடூரத் தாக்குதலைக் கண்டிக்கும் விதமாக நாடு முழுவதும் உள்ள சட்டத்தரணிகள் வரும் 27ஆம் திகதியை கறுப்புத் தினமாக அனுசரிக்க வேண்டும்

அதேபோல், உயர்நீதிமன்றத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்த அகில இந்திய பார் கவுன்ஸில் தலைவர் என்.பி. சின்ஹா தலைமையில் 5 பேர் அடங்கிய குழுவை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர், முதல்வர் கருணாநிதியை சந்தித்து தடியடி சம்பவத்தில் தொடர்புள்ள பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துவார்கள்.

தடியடி சம்பவம் குறித்து விசாரிக்க உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதியை நியமிக்குமாறு தாற்காலிகத் தலைமை நீதிபதி எஸ்.ஜே. முகோபாத்யாயவிடம் கோரிக்கை விடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

# ஈழத்தமிழருக்காக வாழ்ந்து போராடுவோம் தீக்குளித்து உயிரை மாய்க்க வேண்டாம்!

## கெஞ்சி மன்றாடுகின்றார் வைகோ



சென்னை, பெப். 24

ஈழத் தமிழருக்காக வாழ்ந்து போராடுவோம். அவர்களுக்காக உங்கள் உயிர்களை அழித்துக் கொள்ளாதீர்கள், தீக்குளிக்காதீர்கள் எனத் தமிழர்களை மன்றாடி வேண்டுகிறேன் - ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தீவில் தமிழினப் படுகொலைகள் நடப்பதால், தாய் தமிழக மக்களின் உள்ளம் ரத்தக் கண்ணீர் வடிக்கிறது. சொந்த சகோதரர்களின் துன்பத்தில் சாவதை எண்ணியும் அதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்காத மத்திய அரசைக் கண்டித்தும் முத்துக்குமார், பள்ளப்பட்டி ரவி, சீர்காழி ரவிச்சந்திரன், சென்னை அமரேசன், கடலூர் தமிழ்வேந்தன் ஆகியோர் தீக்குளித்து மடிந்துள்ளனர். அந்த வரிசையில், சென்னையில் தி.மு.கவை சேர்ந்த சிவப்பிரகாசமும் தீக்குளித்து உயிர் தியாகம் செய்துள்ளார்.

ஈழத்தமிழர்களுக்காக தன் உயிரையும் உடலையும் நெருப்புக்கு தாரைவார்த்த அந்த உத்தமரின் தியாகம் பூசிக்கத்தக்கது. வாழ்ந்து போராடுவோம். உயிர்களை அழித்துக் கொள்ளாதீர், தீக்குளிக்காதீர் என்று தமிழர்களை மன்றாடி வேண்டுகிறேன். சிவப்பிரகாசத்தின் இறுதி சடங்குகளுக்கு சிறு குந்தகமும் ஏற்படக்கூடாது என்றுதான் அஞ்சலி செலுத்த நேரில் வரவில்லை. அவரது குடும்பத்தாருக்கு உற்றார் உறவினர்களுக்கு என் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறேன் - என்றுள்ளது.

# கடலோரப் பகுதிகளைக் கண்காணிப்பதற்கு இந்தியக் கடற்படைக்கு 30 ஹெலிகொப்டர்கள்

புதுடில்லி, பெப். 24

இந்திய கடல் பகுதிகளைக் கண்காணிக்க கடலோர காவல் படைக்கு 30 ஹெலிகொப்டர்கள் வாங்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தீவிரவாதிகள் கடல் வழியே வந்து தாக்குதல் நடத்தும் அபாயம் அதிகரித்துள்ளது. இதனால், கடலோர காவல் படையினர் தங்கள் கண்காணிப்பை அதிகரித்துள்ளனர்.

கடலோரக் காவல் படையினருக்கு குறைவான எண்ணிக்கையில் மட்டுமே ஹெலிகொப்டர்கள் இருப்பதால் கண்காணிப்புப் பணியைச் சீராக செய்ய முடியவில்லை.

இதுகுறித்து பரிசீலித்த மத்திய அரசு கடலோர காவல் படைக்கு 30 ஹெலிகொப்டர்கள் வாங்க அனுமதி அளித்துள்ளது. புதிய ஹெலிகொப்டர்கள் வாங்க அதிக செலவு ஆகும் என்பதால், பழைய ஹெலிகொப்டர்களை வாங்கிக் கொள்ளலாம் என்று அரசு கூறியுள்ளது. தேவைப்பட்டால் ஹெலிகொப்டர்களை வாடகைக்கு எடுக்கலாம் என்றும் அரசு யோசனை கூறியுள்ளது.

இதையடுத்து, உலகம் முழுவதும் உள்ள முன்னணி ஹெலிகொப்டர் தயாரிப்பு நிறுவனங்களிடம் கடலோரக் காவல் படை அதிகாரிகள் பேசி வருகின்றனர். ஐரோப்பாவைச் சேர்ந்த யூரோகாப்டர் நிறுவனம் உடனடியாக 4 ஹெலிகொப்டர்களை விற்க முன்வந்துள்ளது. இதுதொடர்பாக பேச்சு நடந்து வருகிறது. விரைவில் இந்த ஹெலிகொப்டர்கள் கடலோரக் காவல் படையிடம் ஒப்படைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு பாகிஸ்தான் பதிலடி கொடுக்கிறது வெற்றியை நிர்ணயிக்க முடியாது தொடரும் ஆட்டம்

கராச்சி, பெப்.24

கராச்சியில் இலங்கைக்கு எதிராக நடைபெற்று வரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று பாகிஸ்தான், இலங்கைக்குத் தகுந்த பதிலடி தரும் விதத்தில் நின்று, நிதானமாக ஆடியது.

இதனால் முதலாவது டெஸ்ட் ஆட்டம் வெற்றி - தோல்வியின்றி முடிவடையும் நிலையை நோக்கி நடைபோடத் தொடங்கியிருப்பதாக விமர்சகர்கள் கருத்து வெளியிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கராச்சி தேசிய மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த ஆட்டத்தில் முதல் இரண்டு நாள்களும் விளாசித் தள்ளி இலங்கை தனது முதல் இன்னிங்ஸில் நிலைநிறுத்திய 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 654 என்ற விஸ்பரூப ஓட்ட எண்ணிக்கையைச் சமாளிக்கும் விதத்தில் நேற்று பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடியது.

நேற்று முன்தினம் மாலையில் ஒரு விக்கெட் இழப்புக்கு 44 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த பாகிஸ்தான் அணி நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் முழுவதும் பொறுமையுடனும் நிதானத்துடனும் துடுப்பெடுத்தாடி நேற்றைய ஆட்ட முடிவின் போது 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 296 ஓட்டங்கள் என்ற நிலைமையை அடைந்தது.

பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையை 445 என்ற அளவுக்கு உயர்த்துமானால் - அதற்கு இன்னமும் தேவைப்படும் 149 ஓட்டங்களை இன்றைய ஆட்டத்தில் பெறுமானால் - இந்த டெஸ்ட் பெரும்பாலும் வெற்றி - தோல்வியின்றி முடிவடைவது உறுதி என விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.



மேற்படி இலக்கை எட்டி, இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கான இருநூறு ஓட்ட எண்ணிக்கை வித்தியாசத்தை - முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கை வேறுபாட்டில் - பாகிஸ்தான் குறைக்குமானால் follow - on பிரச்சினையிலிருந்து அது தப்பிவிடும்.

அத்தகைய நிலைமையில் இரண்டு அணிகளினதும் முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டம் முடிந்து இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டங்கள் பூர்த்தியாகி வெற்றி - தோல்வி முடிவு எட்டுவதற்கு நேரம் போதாது எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. அத்தகைய சந்தர்ப்பத்தில் ஆட்டம் வெற்றி - தோல்வியின்றி முடிவடைவது தவிர்க்க முடியாதது.

நேற்று பாகிஸ்தான் தரப்பில் ஜூனூஸ் கான் சதம் அடித்தமை குறிப் பிடத் தக்க அம்சமாக இருந்தது. அவர் ஆட்டமிழக்காமல் 149 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். சொயிப் மலிக் 56 ஓட்டங் களைப் பெற்றார். மெண்டிஸ், முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

## ஜப்பான் மாணவி நீச்சலில் சாதனை

டோக்கியோ, பெப். 24

பெண்களுக்கான 100 மீற்றர் நீச்சல் போட்டியில் ஜப்பான் பள்ளி மாணவி ஷிகோ ஷகாய் புதிய உலக சாதனை படைத்தார். ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜப்பான் ஓபன் நீச்சல் சம்பியன்ஷிப் போட்டி நடந்தது. இதில் பெண்களுக்கான 100 மீற்றர் நீச்சல் போட்டியில் ஜப்பான் பள்ளி மாணவி ஷிகோ ஷகாய் 100 மீற்றர் தூரத்தை 56.15 வினாடிகளில் கடந்து உலக சாதனை படைத்தார். முன்னதாக கடந்த 2007ஆம் ஆண்டு அமெரிக்காவின் நாதலே காவ்ஹிலின் 56.51 வினாடிகளில் கடந்து சாதனை படைத்திருந்தார்.

''உலக சாதனை படைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இதேபோல் வரும் ஏப்ரல் மாதம் நடக்கவுள்ள தேசிய சம்பியன்ஷிப் தொடரில் சிறப்பாக விளையாடுவேன்,'' - என்றார் ஷகாய்

# நியூஸிலாந்தின் சூழ்நிலைக்கு ஏற்ப ஆட இந்திய வீரர்கள் தயாராம்

## சிறப்பான ஆட்டத்தை அவர்கள் தருவார்கள் என்கிறார் பயிற்சியாளர்

கிறிஸ்ட்சர்ச், பெப்.24

''நியூஸிலாந்து ஆடுகளங்கள் பற்றி கவலைப்படத் தேவை இல்லை. இங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்பச் சிறப்பாக செயல்பட இந்திய அணியினர் தயாராக இருக்கின்றனர்,'' என பயிற்சியாளர் கிறிஸ்டன் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து சென்றுள்ள இந்திய அணி இரண்டு ருவன்ரி 20, ஐந்து ஒரு நாள் மற்றும் மூன்று டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கிறது. முதல் ருவன்ரி 20 போட்டி நாளை நடக்கிறது.

இத்தொடர் குறித்து இந்திய அணியின் பயிற்சியாளர் கிறிஸ்டன் கூறியவை வருமாறு:-

உலகின் பல இடங்களில் இருக்கும் ஆடுகளங்கள் வெவ்வேறு தன்மை கொண்டவை. எல்லா ஆடுகளங்களும் ஒரே மாதிரி இருக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு. எனவே ஆடுகளம் குறித்துப் பெரிதாகப் பேசுவது தேவையில்லாதது. எந்த முறையில் திட்டமிடவேண்டும் என்பது குறித்து தெளிவாக உள்ளோம்.

இங்கு என்ன தேவையோ அதனைச் செய்வதற்கு முயற்சிப்போம். சூழ்நிலைக்கு தகுந்தவாறு எங்களை மாற்றி அமைத்து முன்னிலை பெற முயற்சிப்போம். இப்போதுள்ள நிலையில் எங்கள் அணி சிறந்து விளங்குகிறது. அணியின் வேகப் பந்து வீச்சாளர்கள் கடந்த ஆண்டு அசத்தலாக செயல் பட்டுள்ளனர்.

என்னுடைய அனுபவத்தில் நியூஸிலாந்து வீரர்கள் சொந்த மண்ணில் சிறப்பாக விளையாடுவார்கள். கடும் போட்டியை கொடுப்பார்கள். அவர்களை நாங்கள் எளிதாக எடுத்துக்கொள்ளப் போவதில்லை. சிறந்த அணிக்கு எதிராக என்ன தேவையோ அதனை திட்டமிட்டு செயல்படுத்துவோம். தினமும் நான்கு மணி நேரம் வீரர்கள் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். அனுபவ வீரர்கள், இளம் வீரர்களுக்குத் தேவையான ஆலோசனை வழங்குகின்றனர்'' - இவ்வாறு கிறிஸ்டன் தெரிவித்தார்.


பயிற்சியின் போது நியூஸிலாந்தின் ஜோன் ரைட் வருகைதந்து ஆச்சரியம் அளித்தார். இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளரான இவரிடம், சச்சின் உள்ளிட்ட வீரர்கள் ஆலோசனை பெற்றனர்.

# வீனஸ் வில்லியம்ஸ்மீள முன்னணியில்

டுபாய், பெப்.24

டுபாய் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற முன்னாள் முதல் தர வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), கடந்த 6 ஆண்டுகளில் முதல் முறையாக முதல் 5 வீரரர்களுக்குள் நுழைந்துள்ளார்.

டுபாய் ஓபன் டென்னிஸ் போட்டியின் அரை இறுதியில் சகோதரியும் முதல் நிலை வீராங்கனையுமான செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி (6:1, 2;6, 7:6) இறுதிப் போட்டிக்கு முன்னேறினர் வீனஸ்.



இறுதிப் போட்டியில் பிரான்ஸின் வர்ஜினி ரஸானோ உடன் மோதிய அவர் 6:4, 6:2 என்ற நேர் செற்களில் மிக எளிதாக வென்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். ஒற்றையர் பிரிவில் இது அவரது 40ஆவது பட்டம். இந்த வெற்றியுடன், மகளிர் ஒற்றையர் பிரிவு தரவரிசையில் 6 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு முதல் 5 வீராங்கனைகளில் இடம் பிடித்துள்ளார். 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 25இல் முதல் இடத்துக்கு முன்னேறினாலும், மணிக்கட்டுக் காயம் காரணமாக இவருக்கு பின்னடைவு ஏற்பட்டது.

கடந்த ஆண்டு நடந்த பெய்ஜிங் ஒலிம்பிக்போட்டியில் 2ஆவது முறையாக அவர் தங்கப்பதக்கம் வென்றமை குறிப் பிடத்தக்கது.

## நூல் அறிமுகவிழா நாளை மானிப்பாயில்

யாழ்ப்பாணம், பெப்.24

மானிப்பாய் இந்துக் கல்லூரி தமிழ்மன்றத்தின் ஏற்பாட்டில் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனின் 'நாற்று மேடை' நூல் அறிமுக விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 12.45 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி க.குணராசா கலந்துகொள்வார்.

நூலாசிரியர் அறிமுகவுரையை எழுத்தாளர் ஐ.சாந்தனும் நூல் அறிமுகவுரையை கவிஞர் சோ.பத்மநாதனும் நூல் விமர்சன உரையை ஆசிரியர் ந.குகபரனும் நிகழ்த்துவர். (1)

# இந்திய அணியின் சுற்றுப் பயணத்தில் நியூஸிலாந்துக்குப் பெரும் வருமானம்

கிறைஸ்ட்சர்ச், பெப்.24

இந்திய அணியின் சுற்றுப்பயணத்தால் நியூஸிலாந்துக் கிரிக்கெட் சபைக்கு தொலைக்காட்சி உரிமத்துக்காக மட்டும் சுமார் இந்தியப் பணத்தில் ரூ.125 கோடி வருமானம் கிடைக்கும் எனத்தெரிகிறது.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் வரலாற்றிலேயே மிகத் பெரிய தொகை இது. உலகக் கோப்பை போட்டியின்போது கூட சுமார் ரூ.100 கோடிதான் வருமானம் கிடைத்தது.

அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து ஆகிய அணிகள் சுற்றுப்பயணம் செய்தபோது கிடைத்ததை விடப் பல மடங்கு வருவாய் இப்போது கிடைத்துள்ளது என அந் நாட்டுக் கிரிக்கெட் சபைத் தலைவர் ஜஸ்டின் வாகன் தெரிவித்தார்.

எனினும், எவ்வளவு தொகை என்பதைத் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

இருப்பினும், எதிர்காலத்தில் அணியின் வீரர்கள் அதிக வருமானம் ஈட்ட வேண்டுமெனில், களத்தில் அவர்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றார் அவர்.

''இந்திய அணி வலுவான அணியாகத் திகழ்கிறது. இந்திய அணியுடன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் அதுவே சர்வதேச அளவில் நியூஸிலாந்து அணிக்கு மதிப்பைப் பெற்றுத்தரும். எதிர்காலம் குறித்து திட்டமிடுவதற்கு வீரர்கள் சிறப்பாக விளையாடுவதுதான் முக்கியமானது'' என்றும் அவர் கூறினார்.

இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவுடன் உள்ள சுமுகமான உறவை மட்டுமே நம்பியிருக்கமுடியாது. களத்தில் சிறப்பாகச் செயல்படுவதும் மிக முக்கியமானது - என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மேல் மாகாணத்தில் 74 வாகனங்கள் போலி இலக்கத் தகடுகளுடன் சிக்கின

## எட்டு மணி நேர விசேட தேடுதலில்

கொழும்பு, பெப். 24

மேல்மாகாணத்தில் போலி இலக்கத் தகடுகளைக் கொண்ட 74 வாகனங்களைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் ஒரேநாளில் கைப்பற்றினர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணி முதல் இரவு எட்டு மணிவரை கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்த வாகனங்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இவற்றுள் 14 வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டவை என்றும் அவர் சொன்னார்.

இது தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இந்த வாகனங்கள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தப் பட்டனவா என்று அறியும் பொருட்டு கைது செய்யப்பட்டவர்கள் குறித்து துருவி விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் கூறினார். (அ - சி)

# ஆபாசப்படம் திரையிட்ட திரையரங்கு 'சீல்' வைப்பு

வலி.வடக்கு,பெப்.24

யாழ்.நகரில் ஆபாசத் திரைப்படம் காண்பித்த திரையரங்கு ஒன்று சுன்னாகம் பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்பட்டு 'சீல்' வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டபொலிஸ் அத்தியட்சகரின் விசேட பணிப்புரைக்கு அமைவாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லுடான தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் சட்ட விரோத மாத ஆபாச திரைப்பட திரையரங்கை கண்டு பிடித்தனர்.

குறிப்பிட்ட திரையங்கில் இருந்து ஒலி, ஒளி பெருக்கி சாதனங்கள், பன்னிரண்டு ஆபாச திரைப்பட இறுவட்டுகள், தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் அம்பிளிவ்யா உட்படப் பல சாதனங்களையும் குழுவினர் கைப்பற்றியதுடன் திரையரங்கை 'சீல்' வைத்தனர்.



(படம்: சுன்னாகம் பொலிஸ்)

திரையரங்கின் உரிமையாளர் யாழ். நீதி மன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய் யப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.சிவன்கோயிலிலும் யாழ்.நாச்சிமார் கோயிலிலும் இடம்பெற்ற சிவராத்திரி நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:நிறோ)

# பொலிஸாருக்கு எதிராக வழக்குத் தொடரக் கோருகிறது சென்னை சட்டத்தரணிகள் சங்கம்: இன்று உண்ணாவிரதம்

சென்னை பெப். 24

இம்மாதம் பத்தொன்பதாம் திகதி சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம் செய்த சட்டத்தரணிகளைத் தாக்கிய பொலிஸாரைக் கைது செய்து அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று சட்டத் தரணிகள் சங்கம் அரசைக் கோரியுள்ளது.

இதேவேளை -

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெறவிருந்த சட்டத்தரணிகள் உண்ணாவிரதப் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் போராட்டம் இன்று நடைபெறும் என்று சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஆர். சி. போல் கனகராஜ் தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற வளாகத்தில் சி.பி.ஐ. அதிகாரிகள் தடயங்களைச் சேகரிக்க உள்ளமையினாலேயே இந்தப் போராட்டம் நேற்று நடைபெறாமல் இன்று நடத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

சென்னை உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கப் பொதுக்குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சென்னை உயர் நீதிமன்றத்துக்குள் அத்துமீறிப் புகுந்த பொலிஸார் கொடுரமான தாக்குதல்களை நடத்தியமையைக் கண்டித்து மறுநாள் திங்கட் கிழமை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இந்நிலைமையில் திங்கட்கிழமை சி.ஐ.பி. அதிகாரிகள் தடயங்கள் சேகரிக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. அதனால் திங்கட்கிழமை நடைபெறவிருந்த உண்ணாவிரதப் போராட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஆர்.பீ.ஸீ. போல் கனகராஜ் தெரிவித்தார்.

முன்னதாக சட்டத்தரணிகள் சங்கப் பொதுக் குழுக் கூட்டத்தில் 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு:

இச்சம்பவம் காரணமாக பொலிஸ் ஆணையாளர் சென்னை மாநகர பொலிஸ் ஆணையாளர் ஆகிய இருவரையும் உடனடியாக பணிநிறுத்தம் செய்ய வேண்டும். தாக்குதலில் ஈடுபட்ட பொலிஸ் இணை ஆணையாளர் இராமசுப்ரமணியம் மற்றும் அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்ய வேண்டும்.

**பொலிஸ் அதிகாரிகளுக்கு இனி ஆஜராவதில்லை**

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு சட்டத்தரணிகளும் பொலிஸாருக்கு எதிராகத் தனிப்பட்ட முறையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கெர்டுப்பது என்றும், 19 ஆம் திகதி தாக்குதல் சம்பவம் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக பல்வேறு சட்டத்தரணிகள் சங்கங்களின் நிர்வாகிகள் 20 பேரைக் கொண்ட மாநில அளவிலான கூட்டு நடவடிக்கைக் குழு ஒன்றை அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசு சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸ்காரர்களுக்காக சட்டத்தரணிகள் இனிமேல் நீதிமன்றில் ஆஜராவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

மத்திய படையைக் கொண்டு நீதிமன்றத்துக்கு பாதுகாப்புக் வழங்க வேண்டும். நீதித்துறை மீது தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து தேசிய அளவிலான போராட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்படும். இந்தச் சம்பவம் குறித்து தற்போது பொறுப்பில் இருக்கும் உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு நீதிவிசாரணை நடத்த வேண்டும்.

எங்களது கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும் வரை அனைத்து நீதிமன்றங்களையும் புறக்கணிப்பது என்று முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன.

அதேவேளை சென்னை உயர் நீதிமன்றத்திற்குள் பொலிஸார் புகுந்து தாக்கிய சம்பவத்தைக் கண்டித்து நாடு முழுவதும் 24 ஆம் திகதி கறுப்புத் தினம் - எதிர்ப்புத் தினம் கடைப்பிடிக்கப்படவுள்ளது எனவும் கூறப்படுகிறது. (அ-சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அனைத்துப் பகுதிகளும் எம்மால் மீட்கப்பட்டு அவர்கள் இப்போது முல்லைத் தீவில் ஒரு சிறு நிலப்பகுதிக்குள் முடக்கப்பட்டுள்ளனர்.

**இராணுவத்தினரின் தியாகத்தைக் கொச்சைப்படுத்த மாட்டோம்**

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் 98 வீத வெற்றியை நாம் அடைந்துள்ளோம். இன்னும் இரண்டு வீத வெற்றி மாத்திரமே எஞ்சியுள்ளது. அந்த வெற்றியை நாம் அடைந்ததும் புலிகள் முற்றாக இல்லாமல் போய்விடுவர்.

98 வீத வெற்றியைப் பெறுவதற்காக எமது படையினர் பல தியாகங்களைச் செய்தனர், உயிர்களை இழந்தனர். அந்தத் தியாகத்தை நாம் கொச்சைப்படுத்த விரும்பவில்லை.

உலகில் உள்ள பல நாடுகள் புலிகளைத் தடைசெய்துள்ளன. இதனால் புலிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் யுத்த சக்தி முற்றாக அழிந்துள்ளது.

அவர்களிடம் இருந்த கடைசி சக்தியான இரண்டு விமானங்களையும் நாம் அழித்துவிட்டோம். இனி அவர்களிடம் எவையுமில்லை. அதனால்தான் அவர்கள் யுத்த நிறுத்தம் ஒன்றுக்குத் தயாராகின்றனர்.

ஆகவே, இவ்வாறானதொரு நிலையில் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் வகையில் நாம் புலிகளுடன் ஒருபோதும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளமாட்டோம். யுத்தமே தொடர்ந்து முன்னெடுக்கப்படும் - என்றார்.

(அ-சி)

# விமான எதிர்ப்பு தாக்குதலில் உயிரிழப்பு நான்காக அதிகரிப்பு

கொழும்பு, பெப்.24

புலிகளின் இரு விமானங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தலைநகருக்குள் ஊடுருவியதையடுத்து விமானப்படையினர் மேற்கொண்ட விமான எதிர்ப்புத் தாக்குதலில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

விமான எதிர்ப்பு நடவடிக்கைகளை வேடிக்கை பார்த்த மாணவியொருவர் உட்பட நான்கு பேரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜகிரியவைச் சேர்ந்த மாணவியான உதேஷனி (வயது 15) மட்டக்குளியைச் சேர்ந்த ராஜமணி பிரபாகரன் , பேலியகொடையைச் சேர்ந்த நிமல் மற்றும் களனியைச் சேர்ந்த சீலவங்ச ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானோர் வவுனியா மனிக் பார்மில் அமைந்துள்ள கதிர்காமர் இடைத்தங்கல் நிவாரணக் கிராமம் என்று பெயரிடப்பட்ட இடத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## உடனடியாக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்கும், அவர்கள் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறுவதை உறுதி செய்வதற்கும் வசதியாக உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக்கொள்கின்றது.

இலங்கையில் உருவாகிவரும் மனிதாபிமான நெருக்கடி மற்றும் பெரும் எண்ணிக்கையான இடம்பெயர்ந்த மக்கள் மோதலில் சிக்கியுள்ளமை ஆகியன குறித்து ஐரோப்பிய ஒன்றியம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

மேலும் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் குறித்தும் அது கடும் கவலையடைந்துள்ளது.

பொதுமக்களுக்கு மேலும் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இருதரப்பும் சர்வதேச மனிதாபிமான மற்றும் யுத்த சட்டங்களைப் பின்பற்ற வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

சகல சமூகங்களினதும் நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றும் - அனைவரையும் உள்ளடக்கிய - அரசியல் நடைமுறையை முன்னெடுக்குமாறு இலங்கை அதிகாரிகளை ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக்கொள்கின்றது.

**இராணுவ வழிமுறை தீர்வல்ல**

இலங்கையின் நீண்டகால மோதலுக்கு இராணுவ வழிமுறைகள் மூலம் தீர்வுகாண முடியாது என்பதில் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் உறுதியாக உள்ளது.

விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கைவிடுமாறும் வன்முறையையும் பயங்கரவாதத்தையும் நிரந்தரமாகக் கைவிடுவதைப் பிரகடனப்படுத்துமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தற்போதைய இராணுவ நடவடிக்கையில் இலங்கை இராணுவம் வெல்வது போலத் தோன்றினாலும், விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்படுவது நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் தீர்வைக் காணவேண்டிய அவசியத்தை மீள வலியுறுத்தும்.

விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையணிகளில் சேர்க்கும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைக்கு முடிவு காண வேண்டும்.

அரசு மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்க்ககரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதுடன் அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களையவும் வேண்டும். - என்றும் குறிப்பிட்டுள்ளது.

(அ-சி)

## கோப்பாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கம் அமைத்துள்ளதாகவும் படைத்தரப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

தற்போது புதுக்குடியிருப்பு நகரிலிருந்து 400 மீற்றர் தொலைவில் படையினர் நிலைகொண்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையகம் கூறியிருக்கின்றது.

இந்தச் சண்டைகளின் பின்னர் நடத்தப்பட்ட தேடுதலில் விடுதலைப்புலிகளின் 5 சடலங்களையும் ஆயுதத் தளபாடங்களையும் இராணுவத்தினர் கைப்பற்றியிருக்கின்றனர் எனவும் இராணுவ தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கும் பின்னர் பிற்பகல் 3.30 மணிக்கும் செறிவான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில் 12 சிறுவர்கள் உட்பட 32 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 49 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 12 சிறுவர்களும் அடங்குவர்.

இறந்தவர்கள் மற்றும் காயமுற்றோரின் விவரங்களை உடனடியாகப் பெறமுடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(அ)

## ஏ.ஆர்.ரஹ்மானு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தொழில்நுட்பக் கலைஞர்கள் பெருமளவில் பங்கேற்ற 'ஸ்லம் டோக் மில்லியனர்' (Slum Dog Millionaire) திரைப்படம் ஒஸ்கார் விருதுக்காக மொத்தம் பத்துப் பிரிவுகளில் போட்டியிட்டது. அவற்றில் எட்டுப் பிரிவுகளில் வெற்றி பெற்று அது ஒஸ்கார் பரிசுகளைத் தட்டிக் கொண்டது. சிறந்த இசையமைப்பாளர், பாடலுக்கான இசையமைப்பாளர் ஆகிய இரண்டு பிரிவுகளிலேயே இசையமைப்பாளர் ரகுமான், ஒஸ்கார் பரிசு பெற்றுள்ளார்.

அதேசமயம் இன்னொரு தமிழரான எம்.ஐ.ஏ. (மாயா அருள் பிரகாசம்) அதே படத்தின் பாடல் இசைக்கான விருதுக்காக முன்மொழியப்பட்டிருந்த ஐவரில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'ஸ்லம்டோக் மில்லியனர்' திரைப்படம் பெற்ற ஏனைய ஆறு விருதுகள் வருமாறு.

1. சிறந்த திரைக்கதை - சிமோன் பியூபோய்.
2. சிறந்த ஒளிப்பதிவாளர் - அன்ரனி டாட்மனலே.
3. சிறந்த ஒலித்தொகுப்பு - ரேசுல் பூக்குட்டி.
4. சிறந்த இயக்குநர் - டோனி பாயல்

இதைத் தவிர சிறந்த படத்தொகுப்புக்கான விருதும், சிறந்த படத்துக்கான விருதும், 'ஸ்லம்டோக் மில்லியனர்' திரைப்படத்துக்கே கிடைத்துள்ளது.

தற்போது நடைபெற்றது 81 ஆவது ஒஸ்கார் விருதுகள் வழங்கும் வைபவம் . ஆகக் கூடிய விருதுகளைப் பெற்ற படம் என்ற பெருமையை 'ஸ்லம்டோக் மில்லியனர்' பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. ஒஸ்கார் விருதைப் பெற்ற பின்னர் இசையமைப்பாளர் ரகுமான் விழா மேடையில் தமிழில் பேசினார்.

''நான் இங்கு வருவதற்கு முன் மிகுந்த அச்சத்தோடும், மகிழ்ச்சியோடும் இருந்தேன். ஏதோ திருமணத்துக்கு வருவது போல் இருந்தது. இந்த விருதுக்குக் காரணம் என் அம்மாவின் ஆசிர்வாதம்,

எனது இசைக் கலைஞர்கள், இந்தப் படத்தில் பணியாற்றியவர்கள் அனைவருக்கும் நன்றி. என் வாழ்நாள் முழுவதும் எனக்கு அன்பு செலுத்தவும், பகைத்து கொள்ளவும் வாய்ப்புகள் கிடைத்தன. நான் அன்பையே தேர்வு செய்தேன்.

கடவுள் நம்மோடு இருக்கையில் எல்லாம் கிடைக்கும். இந்த விருதுகளை நான் என் தாயகமான இந்தியாவுக்கு அர்ப்பணிக்கிறேன்'' - என்றார்.

(மேலும் விவரங்கள் 11 ஆம் பக்கத்தில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

**நற்சிந்தனை**

உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக் காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்துக்கு முற்றிலும் முரண்பட்டது

# க.பொ.த.உயர்தர கல்விச்சுடர்

24.02.2009

**Special Guidance For A/L 2009&2010**

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும் **கல்வி இணைப்பிதழ்**


## அன்புடன், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு!

க.பொ.த சாதாரண தரம் தாண்டி உயர்தர வகுப்புக்கு காலடி வைத்துள்ள நீங்கள் ஒவ்வொருவரும் திறமையானவர்கள். ஆனால், உயர்தர பரீட்சையில் எல்லோராலும் சிறந்த பெறுபேறுகளை அடைய முடிவதில்லை என்பது ஒரு பிரதான குறைபாடு ஆகும். எல்லாப் பாடத்திட்டமும் படித்து முடித்திருந்தும் பரீட்சைப் பெறுபேறு நல்லதாக அமைவதில்லை என்ற பெரும் ஏக்கம் உங்கள் மனதில் இருந்துகொண்டே இருக்கின்றது. இதற்கான காரணங்களாவன

★பல மாணவர்கள் சரியான விடைகளை அறிந்திருந்தும் உரிய நேரத்தில் ஞாபகப்படுத்தி விடைகளை எழுதத் தவறுத

★தெரிந்த விடைகளை தொகுத்து வடிவமைத்து கேள்விக்கு ஏற்றவாறு விடைகளை எழுதத் தவறுதல்.

மேற்படி தவறுகளுக்கான பிரதான காரணம் மாணவர்களுக்கு பயிற்சியின்மையே ஆகும். அதாவது, பரீட்சை மாதிரி வினாத்தாள்களுக்கு அவர்கள் பரீட்சயமாகாது இறுதிப்பரீட்சையை எழுதுவதாகும்.

இந்தப் பிரதான குறைபாட்டைக் களையும் வகையில் இவ்வெளியீடு தனது பணியைத் திறம்பட மேற்கொள்ளவுள்ளது. தற்போது அனைத்துப்பாடங்களுக்குமான வினாத்தாள்-1 இற்கான பாடப்பரப்பு களை முடித்துள்ள உங்களுக்குப் பிரபல ஆசிரியர்களின் வினாத்தாள் -01 இற்கான பல்வேறுகோண மாதிரி வினாத்தாள்களை இவ்வெளியீடு அதிகமாக தாங்கிவரவுள்ளது.

பரீட்சை நெருங்கும் காலங்களில் வினாத்தாள்-02 ஐயும் உள்ளடக்கிய முழுமையான வினாத்தாள் கள் இப் பகுதியில் வெளிவரவுள்ளன. இதைவிடக் குறிப்பிட்ட சில பாடங்களுக்கான கற்றல் குறிப்புகளும் வெளிவரவுள்ளன. இவ் வெளியீட்டின் வினாத்தாள்களைதொடர்ச்சியாக நேரங்கணித்துப் பயிற்சி செய் தால், பரீட்சைகள் உங்களுக்கு பரீட்சயமாகிவிடுவதை நீங்கள் உணர்வீர்கள் என்பது கல்விச்சுடரின் அசையாத நம்பிக்கை ஆகும்.

– ஆசிரியர்: கல்விச்சுடர் –

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்

General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

## பொருளியல் - 1

ஆசிரியர் : V. முரளி (Eco.SPL) M.A( Eco)

### பகுதி -1

**ஒவ்வொரு பல்தேர்வு வினாவிற்கும் ஒரு சரியான விடை மட்டுமே உண்டு. அதனை இனங்கண்டு அதன் கீழ்க் கோடிடுக.**

01.எல்லாப்பொருளாதாரங்களும் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினை,
அ) சூழல் மாசடைதல். ஆ) அதிகரிக்கும் வறுமை.
இ) புவியானது வெப்பமடைதல்.
ஈ) பொருளாதாரத்தில் வளங்கள் மிகையாகப் பயன்படுத்தல்.
உ) எல்லையற்ற விருப்பம், எல்லைக்குட்பட்ட வளங்கள்.


02.மிகச் சரியான கூற்று எது?
அ) பொருளாதாரப் பண்டங்களுக்கு விலையுண்டு.
ஆ) பொருளாதாரப் பண்டங்களே மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது.
இ) பொருளாதாரப் பண்டங்களுக்கு சந்தர்ப்பக் கிரயம் உண்டு.
ஈ) பொருளாதாரப் பண்டங்களுக்கு மாற்றுப்பயன்பாடு பூச்சியம்.

03.எந்தப்பண்டம் பொருளாதாரப் பண்டம்?
அ) காற்று. ஆ) மழை நீர். இ) சூரிய ஒளி.
ஈ) நீர். உ) இயற்கைக் காடு.

04.பொருளியலின் மூன்று நிலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினை தெரிவு செய்க.
அ) விபரணப் பொருளியல், பொருளியலின் கொள்கை/ தத்துவங்கள், பிரயோகப் பொருளியல்.
ஆ) பேரண்டப் பொருளியல், நுண்பாகப் பொருளியல், பிரயோகப் பொருளியல்.
இ) அரசியற் பொருளியல், கைத்தொழிற் பொருளியல், சமூகப் பொருளியல்.
ஈ) அடிப்படைப் பொருளியல், உயர்நிலைப் பொருளியல், முகாமைப் பொருளியல்.

05.பொது வேலைவாய்ப்பின்மைக்கான சந்தர்ப்பக் கிரயம்,
அ) நேர்ப்பெறுமதி. ஆ) மறைப்பெறுமதி.
இ) பூச்சியப் பெறுமதி. ஈ) மேற்கூறிய எவையுமன்று.

06.பூச்சிய நெகிழ்ச்சி (மீள்தகவு) கேள்வி வளையியினைத் தெரிவு செய்க.





07.வழிவருக் கேள்வியினைக் (Derived demand) கொண்ட பொருளை/ சேவையினைத் தேர்வு செய்க.
அ) ஆடவர் மேலாடைகள் (Shirts) ஆ) பாண்.
இ) சீமெந்து. ஈ) பற்பசை.

08.பேரண்டப் பொருளியல் மாறிகளைக் கொண்ட கூட்டத்தினைத் தேர்வு செய்க.
அ) வேலைவாய்பின்மை, பொதுவிலைமட்டம், தேசிய உற்பத்தி.
ஆ) கேள்வி, வழங்கள், மனிதத் தேவைகள்.
இ) மீள்தகவு (), வட்டி விகிதம்,கொடுப்பனவு நிலுவை.
ஈ) வேலைவாய்ப்பு, நாணயமாற்று விகிதங்கள், சந்தர்ப்பக் கிரயம்.

09.அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைத் தீர்வுக்கான அணுகுமுறை,
அ) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அந்நிய நாட்டு உதவி களை ஊக்குவித்தல்.
ஆ) அரசாங்கத்தின் தலையீடு.
இ) சந்தைப் பொருளாதாரம், கட்டளைப் பொருளாதாரம் (திட்டமிடற் கட்டுப்பாடு) மற்றும் கலப்புப் பொருளாதாரம்.
ஈ) தனியார் துறையின் முதலீட்டினை ஊக்குவித்தல்.

10.இன்னொரு பண்டத்தின் கேள்வியின் விளைவாக ஏற்படும் ஒரு பண்டத்தின் அல்லது சேவையின் கேள்வி ஆனது,
அ) சாதாரண கேள்வி (Normal Demand) ஆ) விருப்புக் கேள்வி (Derived demand)
இ) இணைக் கேள்வி (Joint Demand) ஈ) கலப்புக் கேள்வி (Composite demand)

11. கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் நுகர்வோர் மிகையினை (Consumer Surplus) காட்டும் பரப்பினைக் காட்டுக.





1) CBED 2) DEF
3) ABE 4) CBEF

12.கேள்வியில் ஏற்படும் மாற்றம் எவ்வாறு பொருள் வரையரை செய்யப்படலாம்.
அ) அதே பண்டத்தின் விலையிலேற்படும் மாற்றத்தின் காரணமாக கேள்வியின் கணியத்தில் ஏற்படும் மாற்றம்.
ஆ) வரியொன்றினை விதிப்பதன் காரணமாக கேள்வியிலேற்படும் மாற்றம்.
இ) கேள்வியின் பருவகால மாற்றங்கள்.
ஈ) அதே பண்டத்தின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகளிலேற்படும் மாற்றங்களின் காரணமாகப் பண்டத்தின் கேள்வியில் ஏற்படும் தாக்கம்.

13.பொருளாதாரமொன்றின் நிகர தேறிய வருமானம் கீழ் வருமாறு விவரிக்கப்படலாம்.
அ). மொத்த தேசிய வருமானத்திலிருந்து தேய்மானத்தினை கழித்தல்.
ஆ) ஏற்றுமதிகள், இறக்குமதிகள் நீங்கலான மொத்த தேசிய வருமானம்.
இ) முதலீட்டு செலவீனம் நீங்கலான மொத்தத் தேசிய வருமானம்.
ஈ) வரி உள்ளிட்டதும் உதவு தொகை நீங்களானதுமான மொத்தத் தேசிய வருமானம்.

14. சமுதாயமொன்றின் பொருளியற் பிரச்சினைகள் இரு பரந்த வகைகளின் கீழ் வேபடுத் தலாம்,
அ) தனிப்பட்ட மற்றும் பொதுப் பிரச்சினைகள்.
ஆ) உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பிரச்சினைகள்.
இ) முழுச் சமூகத்தினதும் பிரச்சினைகளும், வீட்டுப் பிரச்சினைகளும்.
ஈ) சமுதாய மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள்.

15.வரைபடத்தின்படி உற்பத்தி சாத்திய வளையி குறிப்பது,
அ) குறைந்து செல்லும் சந்தர்ப்பக்கிரயம்.
ஆ) நிலையான சந்தர்ப்பக்கிரயம்.
இ) அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பக்கிரயம்.
ஈ) பூச்சிய சந்தர்ப்பக்கிரயம்.




16. சமுதாயமொன்றின் பொருளாதார செயன்முறை எதைப்பற்றியதாகும்,
அ) பொருட்களினதும் சேவைகளினதும் உற்பத்தி.
ஆ) முழுச் சமூகத்திலுள்ள உண்மையான மாற்றம்.
இ) நாணயப் பாய்வுகள்.
ஈ) தனியார் துறையினதும், அரச துறையினதும் செயற்பாடுகள்.
உ) மத்திய வங்கியின் நாணயக்கட்டுப்பாடுகள்.

17.பொருள் அல்லது சேவை ஒன்றிற்கான சேவை தங்கியிருப்பது,
அ) செல்வத்தில். ஆ) பொருட்கள் சேவைகளின் கொள்வனவு வலுவிலும்.
இ) விளப்பரத்தில். ஈ) கூட்டு நிரம்பல்.

18.கீழ்த் தரப்பட்டுள்ள அரச செலவீனங்களிலிருந்து பொருளியல் ரீதியில் தேவையற்ற வள மாற்றத்தினை தேர்வு செய்க.
அ) யுத்தச்செலவு. ஆ) உரமாணியம்.
இ) கல்விக்கான செலவு. ஈ) அரச ஊழியருக்கான சம்பளம்.

19.பணவீக்கத்தின் சாத்தியமான தாக்கமொன்றினைத் தேர்வு செய்க.
அ) உண்மையான வருமானம் அதிகரிக்கும்.
ஆ) சேமிப்பு, முதலீடுகள் அதிகரிக்கும்.
இ) வாழ்க்கைச் செலவுக்கிரயம் அதிகரிக்கும்.
ஈ) உற்பத்திக்கான உள்ளீடுகளின் பெறுமதி குறைவடையும்.

20.கீழ்வருவனவற்றிலிருந்து சந்தர்ப்பக் கிரயத்தினைக்கொண்ட பொருள் அல்லது சேவையினைத் தேர்வு செய்க.
அ) சுற்றுலாப் பயணிகளைக் கவரும் தியலும நீர்வீழ்ச்சி.
ஆ) மக்கள் தமது தோய்ந்த ஆடைகளை உலரச் செய்ய உதவும் பிரகாசமான சூரிய வெளிச்சம்.
இ) பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாப்பொல புலமைப்பரிசில்.
ஈ) கொழும்பு மக்களுக்கு நீர் வழங்கும் களனி ஆறு.

## பொருளியலின் விடைக்குறிப்புக்கள்

ஆசிரியர் : V. முரளி (Eco.SPL), M.A (Eco)

*கடந்தவாரத் (17.02.2009 ) தொடர்ச்சி......*

08.1) **அரசாங்க சேமிப்பு.**

வரவு-செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு மிகையே அரசாங்கச் சேமிப்பு எனப்படும். இங்கு அரச இறையிலும் பார்க்க நடைமுறைச்செலவானது குறைவாகக் காணப்படும்.

**அரசாங்கச் சேமிப்பு = மொத்த அரசிறை - நடைமுறைச் செலவு.**

1. அரசாங்கச் சேமிப்பினை மூலதனச் செலவிற்கு நிதியீட்டம் செய்யலாம்.
2. வரவு-செலவுத் திட்டத்தின் மொத்தப் பற்றாக்குறையின் அளவு குறைவடையும்.
3. அரசாங்கச் சேமிப்பு அதிகரிப்பதனால் முதலீடு அதிகரிக்கும்.
4. அரசின் கடன் சுமை குறைவடையும்.

2) **பாதீட்டுப் பற்றாக்குறை.**

வரவு-செலவுத் திட்டத்தின் சமூல மீதி எதிர்க்கணியப் பெறுமதியினைக் கொண்டிருப்பதாகும். எனவே, மொத்த அரச இறையிலும் பார்க்க மொத்தச் செலவானது அதிகமாகக் காணப்படுவதே பாதீட்டுப் பற்றாக்குறை எனலாம்.

**நிதியீட்டம் :-**

1. உள்நாட்டுச் சந்தைக் கடன்.
   வங்கித்துறைக் கடன், வங்கி சாராக் கடன்.
2. உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்.
   ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், திறைசேரி வைப்புக்கள்.
3. வெளிநாட்டு நன்கொடைகள், கடன்.
4. பணநிலுவையின் பயன்பாடு.

3) **வெளிநாட்டுக் கடன் - உதவி.**

வெளிநாட்டுக் கடன்கள் பெருமளவில் உதவி என அழைக்கப்படுகின்றது. இதற்குக் காரணம் இக் கடன்களானவை நீண்டகாலம் முதிர்வு காலத்தினைக் கொண்டிருப்பதுடன் நீண்ட கால தயவுக்காலத்தினைக் கொண்டிருக்கிறது. அத்து டன், இக் கடன்களுக்குக் குறைந்த வட்டியுடனோ அல்லது வட்டி அற்றதா கவோ இருப்பதுடன் நாட்டின் அபிவிருத்தி நோக்கி இவை பயன்படுத்தப்படுவதால் வெளி நாட்டுக் கடன் உதவி என அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2 August

# கணக்கீடு - 1

ஆசிரியர் : - R.ஜனதன் (B.BA.Hons)
உதவி - எஸ்.ஜெயானந்தன் (கொழும்பு)

## பகுதி-1

**கடந்தவாரத் (17.02.2009) தொடர்ச்சி.......**

25.பங்குடமையில் பங்காளர்களுக்கு இடையில் இலாபப்பகிர்வு விகிதங்கள் மாற்ற மடையக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
1.......................................................................................
2.......................................................................................

26. கணக்கீட்டு நியமம் - 05(SLAS-05)இன்படி இருப்பு மதிப்பீட்டு முறைகளைக் குறிப்பிடுக.
.......................................................................................
.......................................................................................

27. SLASஇன்படிஇருப்புக்கள்தேறியதேறத்தக்கபெறுமதிகளில்குறைத்தெழுது வதற்கானஅடிப்படைகள் இரண்டைக்குறிப்பிடுக.
1. .......................................................................................
2. .......................................................................................

28. ஈடு செய்யப்பட்ட வழு என்பதை சுருக்கமாகத் தருக.
.......................................................................................
.......................................................................................

**அஜித்,கமல்,ஆகிய இருவரும் இலாபநட்டங்களை3:2எனும் வீகிதத்தில் பகிரும் பங்காளர்கள். இவர்கள் 1/5 பங்கு இலாபத்தைப் பெறும் வகையில் வீஜய் என்பவரை பங்காளராக இணைத்துக் கொள்கின்றனர்.**

29. புதியஇலாபப் பகிர்வு விகிதத்தைக் காண்க.
.......................................................................................
.......................................................................................
.......................................................................................

30. விட்டுக் கொடுத்தல் விகிதத்தைக் காண்க.
.......................................................................................
.......................................................................................

**பின்வரும் இடைவெளியில் பொருத்தமான விடையை எழுதுக.**

31. SLAS-05 இன் படி கிரயமான .................. , ...................., .................... என வகைப்படுத்தலாம்.

32. பங்குடமையிலிருந்து விலகும் பங்காளருக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்கு 5 % வட்டியானது ............................ படி வழங்கப் பட வேண்டும்.

33. கணக்கீட்டு நியமம் -12 இன்படி (SLAS-12) ஐந்தொகை திகதிக்குப் பின்னரான நிகழ்வு ..........................., ............................... என வகைப்படுத்தப்படும்.

34. சில்லறைக் கொடுப்பனவுகளுக்கான மூல ஆவனம் ..................... என அழைக்கப்படும்.

35. ஒரு நிறுவனத்தின் மொத்த ரீதியான பெறுமதிகளைக் காட்டிலும் தனித்தனியான சொத்துக்கள் ஏட்டுப் பெறுமதி குறைவாக காணப்படுமாயி வித்தியாசம் ............................ ஆகும்.

**பின்வரும் கூற்றுக்கள் உண்மையா/பொய்யா எனக் குறிப்பிடுக.**

36.நிகழத்தக்க பொறுப்பு ஐந்தொகையில் காட்டப்படுகின்றன. (   )
37.ஞாபன மீள் மதிப்பீட்டு கணக்கு தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் புதிய ஐந்தொகையில் சொத்துக்கள்,பரிப்புக்கள் புதிய பெறுமதிகாட்டப்படும் (   )
38.வருமானச் செலவுக் கணக்கில் காசாகப் பெற்ற காசாகக் கொடுத்த நிகழ்வுகள் மட்டும் பதியப்படும்.(   )
39. வங்கிக் கூற்றில் பதியப்பட்டு காசேட்டு வங்கிக் கணக்கில் பதியப்படாத விடயங்கள் கால வேறுபாடு ஆகும்.(   )
40. பங்காளர்களுக்குரிய மூலதன வட்டி,சம்பளம் என்பன இலாபக் கணிப்பீட்டு விடயங்களாகும்.(   )

**பொருளியலின் 1 ம் பக்க தொடர்ச்சி.................**

## பகுதி -11

**இப்பகுதியில் "அ" பிரிவிலிருந்து 2 வினாக்களுக்கும் "ஆ" பகுதியிலிருந்து 2 வினாக்களுக்கும் எல்லாமாக 4 வினாக்களுக்கு விடை தருக.**

### பிரிவு "அ"

01.1.உற்பத்திக்குக் குழிவான உற்பத்தி இயல்தகவு வளையி ஒன்று எதனை குறிப்பாக சுட்டிக்காட்டுகின்றது.
2.சாதன ஒதுக்கீடு குறை தொழில் மட்டத்தினை உற்பத்தி இயல்தகவு எல்லை ஒன்றில் விளக்குக.
3.அரசினது பாதுகாப்பு செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியினை,உற்பத்தி இயல்தகவு வளையி ஒன்றின் உதவியுடன் விளக்குக.
4. பயனானது அளக்கபடபடக்கூடியது என்பதிலிருந்து நீர் விளங்கிக்கிக் கொள்வது யாது?இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்வீரா விளக்குக?

02. 1.கேள்விக்கோடானது மேலிருந்து கீழ் நோக்கியதான எதிர்க்கனியச் சரிவுடையதாக காணப்படுவதற்கான காரணங்கள் எவை?
2.யுத்தம் காரணமாக விவசாயிகளது வெங்காயத்தினது நிரம்பல் வீழ்ச்சியடைகிறது. ஆனால்,அவர்களது மொத்தவிற்பனை வருவாய் மிக உயர்வாக இருக்கிறது.இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்வீரா?விளக்குக.
3.பண்டங்களுக்கிடையே நெகிழ்ச்சி வேறுபட்டுக் காணப்படுவதற்கான காரணங்கள் யாது?

03. குறித்த பண்டம் தொடர்பான விலைச் சார்புகள் தரப்படுகின்றது.

$$P = 200 - 4QD, \; P = 20 + 2QS,$$

1.சமனிலை விலைத் தொகையைக் காண்க.
2.அரசு பண்டத்தின் மீது 6 ரூபா மானியமாக வழங்குகின்ற பொழுது அரசின் மொத்த மானியச் செலவு யாது?
3. மானியத்தின் பின்னர் நுகர்வோர் உற்பத்தியாளன் மிகை யாது?

04.1. சந்தையே பொருளுக்கான பெறுமதியைத் தீர்மானிக்கின்றது என்ற கூற்றைத் தெளிவுபடுத்துக.
2."(x)" எனும் ஒரேயொரு பொருள் மட்டும் கொண்டுள்ள சந்தையினை எச்சந்தயமைப்புக்குள் வகைப்படுத்துவீர்?உமது விடைக்கான காரணம் யாது?
3.தனிநபர் கேள்வி, சந்தைக்கேள்வி என்பவற்றை வேறுபடுத்துக.

### பிரிவு "ஆ"

05. 1.பொதுப்பண்டங்கள் அரசு மட்டுமே வழங்க முடியும் இக்கூற்றை விளக்குக.
2.நல்ல வரியிடலில் காணப்படும் பண்புகள் எவை?
3.வரி விதிப்பின் பொருளாதார விளைவுகள் எவை?
4.நிறைபோட்டிச்சந்தையில் ஒரு நிறுவனத்தின் எல்லை வருமானம், சராசரி வருமானம் என்பன ஒன்றுக்கொன்று சமனாகக் காணப்படும். விளக்குக.

06. ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தில் பேரினப்பொருளாதாரத்தின் மாறிகள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| முதலீடு(I) | - 250 B பில்லியன் |
| அரசாங்க செலவீடு(G) | - 300 B பில்லியன் |
| நுகர்வு (செலவிடத்தக்க வருமானத்தில்)($C=0.8Yd$) | - 80%சதவீதம்ஆகவுள்ளது |
| வரிகள வருமானத்தில் ($T=0.1Y$) | - 10% சதவீதம் ஆகவுள்ளது |

1. பொருளாதாரத்தின் சமநிலை தேசிய வருமானம் யாது?
2. இப்பொருளாதாரத்தில் சேமிப்புக்கும் முதலீட்டிற்கும் இடையிலான வேறுபாடு யாது?
சமன்பாடு $S=I$ , சமனிலை தொடர்பாக ஏன் ஒரு நிபந்தனையாக இல்லை.
3. வரவு செலவுத்திட்ட மீதி யாது?

07. 1. சந்தைத் தோல்வி,அரசாங்கத்தோல்வி என்பவற்றை விளக்குக.
2. வரவு- செலவுத்திட்டமானது எவ்வாறு பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்தும்? வளக்குக.
3. எளிய பொருளாதாரத்தில் முதலீட்டுப் பெருக்கினைக் குறிப்பிட்டு விளக்குக.

08. 1. அரசதுறை தொழில் முயற்சிகள் என்றால் என்ன?உதாரணம் 4 தருக.?
2. அரச தொழில் முயற்சிகள் தோல்வியை அடைந்துக்கொள்ளக் காரணங்களாக அமைபவை எவை?
3. அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் பொதுப் படுகடன்போக்குத் தொடர்பாக கருத்துரைக்குக.

# கணக்கீடு -02, கற்றல் குறிப்புக்கள்

**(10.02.2009) இன் தொடர்ச்சி............**

கேசவன் கம்பனி லிமிட்டெட் 10 ரூபா படி 100,000 சாதாரண பங்குகளை வழங்குவதற்கு பின்வருமாறு கட்டணங்கள் அறவிடுவதற்கும் முற்பகர்வை வெளியிட்டது.

| | |
|---|---|
| மனுவில் | 5 ரூபா |
| ஒதுக்கலில் | 3 ரூபா |
| அழைப்பில் | 2 ரூபா |

| | |
|---|---|
| 2008 ஜனவரி 01- | டிசெம்பர் 31 இற்கு இடையில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. |
| ஜனவரி 10 | - பங்குகள் தொடர்பாக 120,000 விண்ணப்பங்கள் கிடைத்தன. ஜனவரி 15-மேலதிகபங்குகள் நிராகரிக்கப்பட்டு ஒதுக்கல் மேற்க்கொள்ளப்பட்டது. |
| பெப்ரவரி 05 | - 7000 பங்குகளைப் பெற்றுக்கொண்ட கமலினது ஒதுக்கல் பணம் தவிர ஏனைய ஒதுக்கல் பணம் பெறப்பட்டது. |
| மார்ச் 05 | - பங்குகள் மீதான அழைப்பு விடுக்கப்பட்டது. |
| மார்ச் 20 | - ஒதுக்கல் பணத்தைச் செலுத்தாத கமல் தனது ஒதுக்கல் பணத்துடன் அழைப்புப் பணத்தையும் செலுத்தினார். ஆனால் 12,000 பங்குகளைப் பெற்ற குபேரன் தொடர்பான அழைப்பு தவிர ஏனையோரது பணம் பெறப்பட்டது. |
| ஏப்ரல் 19 | - குபேரன் தனது அழைப்புத் தொடர்பான பணத்தை வட்டியுடன் செலுத்தினார். அழைப்பு நிலுவை தொடர்பாக ஆண்டு வட்டியாக 10 % அறவிடப்படும். |

வேண்டப்படுவது:தேவையான நாட்குறிப்புப் பதிவு,தேவையான பேரேடுகள்

| திகதி | விவரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| ஜனவரி-10 | வங்கிக்கணக்கு வரவு(5x120000) | 600000 | |
| | மனு ஒதுக்கல் கணக்கு செலவு | | 600000 |
| | ( விண்ணப்பப்பணம் பெறப்பட்டது) | | |
| ஜனவரி-15 | மனு ஒதுக்கல் கணக்கு வரவு (15x20000) | 100000 | |
| | வங்கிக் கணக்கு செலவு | | 100000 |
| | (மேலதிக விண்ணப்பங்கள் திரப்பி அனுப்பப்பட்டது) | | |
| | மனு ஒதுக்கல் கணக்கு வரவு ( 8x100000) | 800000 | |
| | கூ.பட்ட மூலதனக் கணக்கு செலவு | | 800000 |
| பெப்ரவரி-05 | வங்கிக்கணக்கு வரவு (3x 93000) | 279000 | |
| | ஒதுக்க நி.கணக்கு வரவு (3x7000 | 21000 | |
| | மனு ஒதுக்கல் கணக்கு செலவு | | 300000 |
| | (7000 பங்குகளுக்கான ஒதுக்கல் பணம் தவிர ஏனைய ஒதுக்கல் பணம் பெறப்பட்டது.) | | |
| மார்ச்-05 | அழைப்புக் கணக்கு வரவு(2x100000) | 200000 | |
| | கூறப்பட்ட மூலதனக்கணக்கு செலவு | | 200000 |
| | ( அழைப்பு விடப்பட்டது) | | |
| மார்ச்-20 | வங்கிக் கணக்கு வரவு (3x7000) | 210000 | |
| | ஒதுக்க நிலுவைக் கணக்கு செலவு | | 21000 |
| | (ஒதுக்க நிலுவைப்பணம்பெறப்பட்டது) | | |
| | வங்கிக் கணக்கு வரவு(2x88000) | 176000 | |
| | அழைப்பு நிலுவைக் கணக்கு வரவு (2x12000) | 24000 | |
| | அழைப்புக் கணக்கு செலவு | | 200000 |
| | (12000 பங்குகளைத் தவிர அழைப்பு பணம் பெறப்பட்டது. | | |
| ஏப்ரல்-19 | அழைப்பு நிலுவைக் கணக்கு வரவு | 200 | |
| | அழைப்பு நிலுவை வட்டி வருமானக் கணக்கு செலவு | | 200 |
| | ( அழைப்பு நிலுவை வட்டி தாக்கல் செய்யப்பட்டது) | | |
| | வங்கிக் கணக்கு வரவு | 24200 | |
| | அழைப்பு நிலுவைக் கணக்கு செலவு | | 24200 |
| | (வட்டியுட்பட அழைப்பு நிலுவைப் பணம் பெறப்பட்டது.) | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ.த உயர்தர மாணவர்களுக்கான

புள்ளி வழங்கும் திட்டம்- அரச பரீட்சை வினாத்தாள் ஒகஸ்ட்-2008

# அரசியல் மூலத்தத்துவங்கள்-01

## உயர்தர மாணவர்களுக்கு!

அநேகமான மாணவர்கள் பரீட்சை வினாத்தாள்களுக்கு விடையளிக்கும் போது அவ்வினாத்தாள்களைத் திருத்தும் பரீட்சகர்கள் என்ன விடைக் குறிப்புகளை எதிர்பார்க்கின்றார்கள், எத்தனை விடைகளுக்கு புள்ளிகளைப் பிரித்துப் போடுகிறார்கள் என்பது பற்றி சந்தேகம் கொண்டுள்ளனர். இதனைத் தீர்க்கும் பொருட்டு நேரடியாக புள்ளி வழங்கும் திட்டம் (2008) இங்கு வெளியிடப்படுகின்றது.

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:**

* பகுதி-1 நாற்பது வினாக்களைக் கொண்டது.
* எல்லா வினாக்களுக்கும் விடை தருக. ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வழங்கப்படும்.
* பரீட்சார்த்திகள் பகுதி-1 இற்குரிய விடைகளை இத் தாளிலேயே எழுதி, பகுதி-11 இற்கான விடைத்தாளுடன் இணைத்து ஒப்படைக்குக.
* ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியானதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
* பரீட்சார்த்திகள் பென்சிலினால் விடைகளை எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

## பகுதி - 1

* 01-10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் நான்கு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் ஒன்று வினாவின் தலைப்புக்குப் பொருத்தமற்றதாகும். பொருத்தமற்ற கூற்றைத் தெரிக.

01. **அரசியல் விஞ்ஞானம் என்பது,**
1) ஒரு சமூக விஞ்ஞானம் ஆகும்.
2) அறிவாதார முறையியலுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.
3) சமூக விஞ்ஞான பாடங்களுள் மிகப் பழைமையானது எனக் கருதப்படுகிறது.
4) கிரேக்கர் காலத்தில் முறையாகக் கற்பதற்கு ஆரம்பமாகியது.

(.............)

02. அரசியல் விஞ்ஞானத்தின் பிரதான பிரவாகங்களாவன,
1) மனிதனும் அவனது அரசியல் அகிலமும்.
2) அதிகாரமும் அதிகாரத் தொடர்புகளும்.
3) போரும் சமாதானமும்.
4) மனிதப் பிறவிகளின் சமூகத் தொடர்புகள்.

(.............)

03. அரசியலைக் கற்பதற்கான **ஒப்பீட்டு அணுகுமுறை** ஒழுங்கமைந்துள்ளமை,
1) பல்வேறு கலாசாரங்களைக் கற்பதிலாகும்.
2) பல்வேறு அரசுகளையும் அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளையும் கற்பதிலாகும்.
3) பல்வேறு அரசாங்க மாதிரிகளைக் கற்பதிலாகும்.
4) சிறந்த அரசு மற்றும் அரசாங்க முறைமை யாது என்பதைக் கற்பதிலாகும்.

(.............)

04. அரசியலைக் கற்பதற்கான **நடத்தைவாத அணுகுமுறை** தங்கியிருப்பது,
1) யதார்த்தத்தைப் பற்றிய தேடலிலாகும்.
2) சரியானதைப் பற்றிய தேடலிலாகும்.
3) அதிகம் பரிபூரணமான பாடப்பரப்பினைப் பற்றிய தேடலிலாகும்.
4) ஒழுக்க ரீதியிலான இறுதி முடிவைப்பற்றிய தேடலிலாகும்.

(.............)

05. **அரசு என்பது,**
1) நிலையான ஆள்புலத்தில் வாழும் மக்களின் ஒரு கூட்டாகும்.
2) ஒழுங்கமைந்த அரசாங்கத்தினூடாகத் தனது அதிகாரங்களைப் பிரயோகிக்கின்றது.
3) தேசம், சமூகம், அரசாங்கம் என்பவற்றுடன் ஒத்ததாகிறது.
4) வெளிவாரியான கட்டுப்பாடுகளுக்கு உட்படுவதில்லை.

(.............)

06. மனிதர் **அரசைத்** தாபித்தமை,
1) பொது நன்மையை மேம்படுத்துவதற்காகும்.
2) சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்காகும்.
3) ஓர் அனைத்துலகச் சமூகத்தை உருவாக்குவதற்காகும்.
4) தேசிய நலன்களை மேம்படுத்திப் பாதுகாப்பதற்காகும்.

(.............)

07. **இறைமை என்பது,**
1) தனி முதன்மையானதும், பிரிக்கக்கூடியதும், ஒருமையானதும், பாராதீனப்படுத்த முடியாததும் ஆகும்.
2) அரசத்துவத்தை அடையாளப்படுத்தும் மூலகமாகும்.
3) ஏனைய சமூகத் தாபனங்களைவிட அரசுக்கு உயர் தன்மையை வழங்கும் மூலகமாகும்.
4) அரசின் ஆக்கக்கூறுகளுள் முக்கிய மூலகமாகும்.

(.............)

08. **அரசாங்கம் என்பது,**
1) அரசு என்னும் கப்பலின் மாலுமி ஆகும்.
2) இறைமை அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு அதிகாரம்பெற்ற அரசின் முகவராகும்.
3) அரசின் விருப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனம் ஆகும்.
4) அரசின் உத்தியோகபூர்வமற்ற எஜமானனாகும்.

(.............)

09. அரசாங்கம் மக்கள் மீது தனது **அதிகாரத்தைப் பிரயோகிக்கும் வழிமுறை,**
1) சம்மதம்.  2) பலவந்தம்.
3) தண்டனை.  4) இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள்.

(.............)

10. **சமூகம்** என்பது,
1) ஒன்றுகூடுவதற்கு மனிதனிடமுள்ள இயல்பான விருப்பின் விளைவினதாகும்.
2) ஆள்புல எல்லைகளை உடையதாகும்.
3) ஒழுங்கமைந்ததும் ஒழுங்கமையாததுமான சகல தாபனங்களையும் உள்ளடக்கியதாகும்.
4) அரசுக்கு முந்தியதாகும்.

(.............)

* 11-20 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய கூற்றுகளுள் மூன்று தலைப்புக்குப் பொருத்தமானதாகும். பொருத்தமான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவுசெய்க.

11. அரசு பற்றிய **தெய்வீக உரிமைக் கோட்பாட்டின்படி,**
A - அரசு கடவுளின் நிர்மாணமாகும்.
B - ஆட்சியாளன் கடவுளால் நியமிக்கப்படுபவனாவான்.
C - ஆட்சியாளன் கடவுளுக்குப் பொறுப்புக்கூறத் தேவையில்லை.
D - ஆட்சியாளன் கடவுளின் பிரதிநிதியாவான்
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

12. அரசின் தோற்றம் பற்றிய **பலவந்தக் கோட்பாடு** வலியுறுத்துவது,
A - அரசின் தளம் அதிகாரம் ஆகும் என்று.
B - மெலியவன் வலியவனுக்குக் கீழ்ப்படிந்தமையால் அரசு உருவாகியது என்று.
C - மெலியவர்களையும் வலியவர்களையும் பாதுகாப்பதற்கு அரசு கடமைப்பட்டுள்ளது என்று.
D - வலிமையே சரியானது என்று.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

13. **சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின்படி,**
A - இயற்கை நிலையே மனிதனின் ஆரம்பச் சந்தர்ப்பம் ஆகும்.
B - இயற்கைநிலை முறையாகத் தாபிக்கப்பட்ட சட்டமுறையால் ஆளப்பட்டது.
C - மனிதர்களின் சமூக ஒப்பந்தத்தின் ஊடாக சிவில் சமூகத்தில் நுழைந்து அரசைத் தாபித்தனர்.
D - மக்களின் சம்மதமே அரசின் அடித்தளமாகும்.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

14. அரசு பற்றிய **படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டின்படி,**
A - அரசு மனிதனின் படிமுறை வளர்ச்சியின் விளைவினதாகும்.
B - மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கே அரசு உருவாக்கப்பட்டது.
C - மனிதனின் சமூக முன்னேற்றத்துக்கு அரசு அத்தியாவசியமானதாகும்.
D - மனித அபிவிருத்தியின் ஒரு கட்டத்தில் அரசு இல்லாது ஒழியும்.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

15. அரசு பற்றிய **கம்யூனிஸக் கோட்பாட்டின்படி,**
A - அரசு ஓர் உயர் அமைப்பாகும்.
B - அரசின் இயல்பை வர்க்க அமைப்பே நிர்ணயிக்கிறது.
C - சமூகச் சீர்திருத்தங்களின் மூலம் வர்க்க அமைப்பை மாற்ற முடியும்.
D - அரசு என்பது சுரண்டல் மற்றும் அடக்குமுறைக் கருவியாகும்.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

16. அரசு பற்றிய **பாசிசக் கோட்பாடு,**
A - அரசின் அடித்தளம் பொதுவிருப்பமாகும் என்று ஏற்றுக்கொள்கிறது.
B - சமூகப் பன்மைத் தன்மையை நிராகரிக்கின்றது.
C - போட்டிக் கட்சி முறைமையை அனுமதிப்பதில்லை.
D - அரசு மனிதனுக்கும் சமூகத்துக்கும் மேம்பட்டது என்று வலியுறுத்துகின்றது.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

17. **நவீன தேசிய அரசின் தோற்றத்துக்குப்** பங்களிப்புச்செய்த காரணிகள்,
A - மத்தியகாலப் பாப்பரசர் பேரரசின் வீழ்ச்சி.
B - முதலாளித்துவத்தின் எழுச்சி.
C - கிறிஸ்தவச் சீர்திருத்த இயக்கம்.
D - பாசிசத்தின் எழுச்சி.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

18. **முதலாளித்துவ அரசின்** பிரதான பண்புகளாவன,
A - சுதந்திரமான தனியார் சொத்துரிமை.
B - தனியார் முயற்சி.
C - திறந்த சந்தைப் பொருளாதாரம்.
D - பொருளாதாரத்தில் அரசின் மிதமிஞ்சிய தலையீடு.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

19. **சோசலிஸ அரசின்** பிரதான பண்புகளாவன,
A - மத்தியமயப்படுத்தப்பட்ட திட்டமிடல்.
B - அரசத் தனியுரிமை.
C - கேள்வியும் நிரம்பலும் சந்தைச் சக்திகளால் நிர்ணயிக்கப்படுதல்.
D - தனியார் சொத்துரிமையைத் தடைசெய்தல்.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

20. **சமூக ஜனநாயக அரசின்** பிரதான பண்புகளாவன,
A - தனியார் துறையின் மேனிலை.
B - பொருளாதார முகாமைத்துவத்தில் அரசும் தனியார் துறையும் பங்குபற்றுதல்.
C - அரசு பொருளாதார விடயங்களில் அதிக பொறுப்பினை வகித்தல்.
D - வரையறுக்கப்பட்ட பொருளாதாரச் சுதந்திரம்.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

* 21-30 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய கூற்றுக்களுள் மூன்று பிழையானவை **ஆகும். பிழையான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவுசெய்க.**

21. **பிரித்தானிய மகாராணி,**
A - பிரபுக்கள் சபையால் நியமிக்கப்படுகிறார்.
B - கோமறைக் கழகத்தின் தலைவராவார்.
C - தமது நிறைவேற்றுப் பணிகள் தொடர்பாகப் பொறுப்புக்கூறமாட்டார்.
D - அரசாங்கத்தின் தலைவராவார்.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

22. **பிரித்தானிய அரசியல் யாப்பு,**
A - முழுமையாக எழுதப்பட்ட ஒரு சட்ட ஆவணம் ஆகும்.
B - இரு மன்றுகளினதும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் திருத்தப்படமுடியும்.
C - நீதிமன்றுகளுக்கு நீதிப்புனராய்வு அதிகாரத்தை வழங்கியுள்ளது.
D - நாட்டின் அடிப்படைச் சட்டமாகக் கருதப்படுகிறது.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

23. ஐக்கிய அமெரிக்க **ஜனாதிபதி,**
A - ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுகிறார்.
B - காங்கிரஸின் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் பதவிநீக்கம் செய்யப்படுவார்.
C - உயர் நீதிமன்றின் தீர்ப்புகளை இரத்துச்செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்.
D - காங்கிரஸுக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்படுவதில்லை.
1) ABC  2) ABD  3) ACD  4) BCD

(.............)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. ஐக்கிய அமெரிக்க செனெற்,
A - சில நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதியோடு இணைந்து நிறைவேற்றுகிறது.
B - உப ஜனாதிபதியால் தலைமை தாங்கப்படுகின்றது.
C - நிதி மசோதாக்களை ஆரம்பிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.
D - ஜனாதிபதியால் கலைக்கப்படும்.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(............)

25. 1950 அரசியல் யாப்பின்மூலம் தாபிக்கப்பட்ட இந்திய அரசு,
A - ஒரு சமஷ்டி அரசாகும்.
B - ஓர் ஒற்றையாட்சி அரசாகும்.
C - ஓர் அரைகுறைச் சமஷ்டி அரசாகும்.
D - ஒரு கூட்டாண்மை அரசாகும்.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(............)

26. இந்திய அரசியற்கட்சி முறைமையின் பிரதான பண்பு,
A - தனிக்கட்சி ஆதிக்கமுறை.
B - பலகட்சி முறை.
C - இருகட்சி முறை.
D - இருகட்சி ஆதிக்க முறை.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(............)

27. பிரான்ஸியக் குடியரசின் ஜனாதிபதி,
A - தேர்வாளர் கழகத்தின் மூலம் தெரிவுசெய்யப்படுகிறார்.
B - பதவிக்காலம் ஏழு வருடங்கள்.
C - வாக்காளர்களுக்கு நேரடியாகப் பொறுப்புக் கூறுவார்.
D - பாராளுமன்றம் நிறைவேற்றும் மசோதாக்கள் மீது அதிகாரம் பெறவில்லை.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(............)

28. பிரான்ஸியக் குடியரசின் பிரதம மந்திரி,
A - பொதுத் தேர்தலில் மக்களால் தெரிவுசெய்யப்படுகிறார்.
B - ஜனாதிபதிக்குப் பொறுப்புக்கூறுவார்.
C - நிறைவேற்றுத்துறையின் தலைவராவார்.
D - அரசாங்க வேலைகளுக்கு வழிகாட்டும் பொறுப்பை உடையவராவார்.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(............)

29. முந்நாள் சோவியத் ரஷ்யாவின் கம்யூனிஸக் கட்சி,
A - மத்தியமயப்படுத்தப்பட்ட ஜனநாயக மூலக்கொள்கைகளின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.
B - சுப்ரீம் சோவியத்தின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்தது.
C - சோவியத் ஒன்றியத்தில் செயற்பட்ட கட்சிகளுள் ஒன்றாகும்.
D - தனது செயற்பாடுகள் தொடர்பாக பிரிசீடியத்துக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறியது.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(............)

30. சோவியத் அரசாங்கத்தின் பிரிசீடியம்,
A - சோவியத் குடியரசுகளால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
B - அமைச்சரவையின் ஆலோசனை மன்றமாகச் செயற்பட்டது.
C - எவ்வித சட்டவாக்க அல்லது நிறைவேற்று அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை.
D - அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கும் ஓர் உயர் நிறுவனமாக இருந்தது.
1) ABC 2) ABD 3) ACD 4) BCD
(............)

* ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற அரசாங்க முறைகள் பற்றிய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி 31 ஆம், 32 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.
A - பிரஜைகள் நிறைவேற்றுத்துறையை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு நேரடியாகத் தெரிவுசெய்கின்றனர்.
B - நேரடியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒரு சட்டத்துறையிலிருந்து நிறைவேற்றுத்துறை உருவாகுகின்றது.
C - மந்திரிசபை நிறைவேற்று அதிகாரத்தைப் பங்கீடுசெய்துகொள்வதோடு ஐக்கியத்தைப் பேணுவதற்கு உடன்படுகின்றது.
D - பிரதமமந்திரிப் பதவி பொதுவாக அரசுத் தலைவர் பதவியிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றது.
E - கலப்பு ஜனாதிபதி முறை நீங்கலாக ஜனாதிபதியே நிறைவேற்று அதிகாரத்தைத் தனியாகப் பிரயோகிப்பார்.
F - தெரிவுசெய்யப்படும் முறையின் காரணமாக நிறைவேற்றுத்துறை நேரடியாகவே மக்களுக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளது.

31. ஜனாதிபதி அரசாங்க முறையோடு தொடர்பான சரியான கூற்றுத்தொகுதியைத் தெரிவுசெய்க.
1) ABC 2) BDF 3) CDE 4) AEF
(............)

32. பாராளுமன்ற அரசாங்க முறையோடு தொடர்பான சரியான கூற்றுத் தொகுதியைத் தெரிவுசெய்க.
1) ACF 2) BDE 3) BCD 4) BCF
(............)

* ஒருமன்ற முறை மற்றும் இருமன்ற முறை தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி 33 ஆம், 34 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.
A - ஒரு தனிமன்றில் அதிகாரம் தரித்திருக்கும்.
B - பணிகள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பாகத் தெளிவின்மை காணப்படுவதில்லை.
C - பிறிதொரு வகையான தடைகள் சமன்பாடுகள் முறையினை வழங்குகின்றது.
D - வேலைப்பளுவைக் குறைக்கலாம்.
E - "இரண்டாம் மன்றம் முதல் மன்றுடன் உடன்படின் பயனற்றுவிடும், உடன்படாவிடின் அது பயங்கரமானதாக அமையும்."
F - பிரசித்தி பெற்றவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

33. ஒருமன்ற முறைக்குப் பொருத்தமான கூற்றுத்தொகுதியைத் தெரிவுசெய்க.
1) ABE 2) BDF 3) BCD 4) CEF
(............)

34. இருமன்ற முறைக்குப் பொருத்தமான கூற்றுத்தொகுதியைத் தெரிவுசெய்க.
1) ABF 2) CDF 3) BCF 4) CEF

* 35-40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக்கூற்றுக்குப் பின்வரும் வழிகாட்டியில் உள்ள 1,2,3,4 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகின்றது என்பதைத் தெரிவுசெய்து அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| இலக்கம் | கூற்று - 1 | கூற்று - 11 |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |

35. கூற்று - 1 மக்களின் அரசியல் விழுமியங்கள், நம்பிக்கைகள், மனப்பாங்குகள் என்பவற்றை உருவாக்கும் செயன்முறையே அரசியல் சமுதாயப்படுத்தல் ஆகும்.
கூற்று - 11 குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள், ஒத்த வயதினர், அரசியல் கட்சிகள், ஊடகம் ஆகியன அரசியல் சமுதாயப்படுத்தல் செயன்முறையின் முகவர்கள்.

36. கூற்று - 1 மனிதர் முறைசார் மற்றும் முறைசாரா வழிமுறைகளில் அரசியலைப் படிக்கின்றனர்.
கூற்று - 11 குடும்பம், வேலைக்குழுக்கள், ஊடகம், அபிப்பிராயத் தலைவர்கள் என்பன முறைசார் வழிமுறைகளாகும்.

37. கூற்று - 1 ஒருகட்சி, இருகட்சி, பலகட்சி, குடும்பக் கட்சி என்று கட்சிகள் வகைப் படுத்தப்படுகின்றன.
கூற்று - 11 ஜனநாயக அரசியல் முறைகளில் அரசியற் கட்சிகள் சிதறியுள்ள பொது ஜன அபிப்பிராயத்தை ஒழுங்குபடுத்தும் முகவர்களாகக் கருதப்படுகின்றன.

38. கூற்று - 1 ஒரு சமூகத்தில் சட்டம் நிலவுகின்றது என்பதன் பொருள் அச்சமூகம் சட்டத்தால் ஆளப்படுகிறது என்பதாகும்.
கூற்று - 11 அவ்வாறான சமூகத்தில் சட்டத்தின் ஆட்சி நிலவுவதோடு சட்டத்தின் முன்னால் சமத்துவமும் சட்டத்தின் சமமான பாதுகாப்பும் சகலருக்கும் சமமான முறையில் உறுதிப்படுத்தப்படும்.

39. கூற்று - 1 ஒப்பங்கோடல் என்பது மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் பிறிதொரு முறையாகும்.
கூற்று - 11 ஒப்பங்கோடல் சட்டவாக்கத்தில் சட்டத்துறையின் முக்கியத்துவத்தை மேம்படுத்துகிறது.

40. கூற்று - 1 சகல அரசியல் சமூகங்களிலும் பிரத்தியேகமாகவும் தெளிவாகவும் இனங்காணக்கூடிய மனிதர் குழுவினைக் காணமுடிவதோடு அவர்களே அரசியல் உயர் குழாமினர் என்று கருதப்படுகின்றனர்.
கூற்று - 11 இந்த அரசியல் உயர் குழாமினரே சகல அரசியல் சமூகங்களிலும் அரசியல் விளையாட்டின் முக்கிய வீரர்களாவர்.

தொடர்ச்சி அடுத்த வாரம் வெளிவரும்..............

## கணக்கீடு-1,பகுதி-11.இன் விடைக்குறிப்புக்கள்

கடந்தவாரத் (17.02.2009)தொடர்ச்சி............

02.அ. நடைமுறையல்லாச் + நடைமுறைச் சொத்துக்கள் = மூலதனம் + பொறுப்புக்கள்
சொத்துக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| | | +18,000 | | +18,000 |
| 01) | | | +200,000 | |
| 02) | 200,000 | | -2,500 | |
| | - 2,500 | 9,000 | | |
| 03) | | +12,000 | +3,000 | +30,000 |
| | | +30,000 | | |
| 04) | | -20,30 | -300 | -20,000 |
| | | -4,000 | -4,000 | |
| 05) | | -6,000 | | -6,000 |
| 06) | | | | |

ஆ. சீராக்கிய காசேடு

| | | | |
|---|---|---|---|
| நேரடிவைப்பு | 350 | மி/வ | 1,800 |
| பங்குலாபம் | 150 | வங்கி கட்டணம் | 200 |
| மி/செ | 19200 | மே.பற்று.வட்டி | 1,300 |
| | 19,700 | | 19,700 |

வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

| | கூட்டு | கழி | மீதி |
|---|---|---|---|
| | | | (19,200) |
| காசேட்டின்படி வங்கி மீதி | 12,800 | | |
| தேறாத காசோலைகள் | | 4,000 | |
| சமர்ப்பிக்கப்படாத காசோலை | | 500 | |
| வங்கித்தவறு | | | |
| | 12,800 | (4,500) | 8,300 |
| | | | 10,900 |
| வங்கிக் கூற்றின் படியான வங்கி மீதி | | | |

03.

திருத்த முன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 84,000 | மீ/வ | 1,800 |
| விற்பனை | 130,000 | காசு | 47,000 |
| வட்டி | 500 | காசோலை | 30,000 |
| மறுத்த காசோலை | 7,000 | எதிரீடு | 37,000 |
| மீ/செ | 2,900 | உட்திரும்பல் | 9,500 |
| | 224,400 | | 224,400 |
| மீ/வ | 129,400 | மீ/வ | 2,900 |

திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 129,400 | மீ/வ | 2,900 |
| விற்பனை | 7,400 | உட்திரும்பல் | 3,750 |
| மீ/செ | 2,900 | (விற்பனை)காசு | 4,700 |
| | | கொடுத்த கடன் | 3,400 |
| | | மீ/செ | 124,950 |
| | 139,700 | | 139,70 |
| மீ/வ | 124,950 | மீ/வ | 2,900 |

கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிணக்கக் கூற்று

| | கூட்டு | கழி | மீதி |
|---|---|---|---|
| | | | 124,950 |
| திருத்திய க.பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 15,200 | | |
| பக்கம் மாறிப்பதிந்த பெற்ற காசோலை | | 4,700 | |
| கடன் விற்பனையாகப் பதிந்த காசு விற்பனை | 15,200 | 4,700 | 10,500 |
| | | | 135,450 |

தொடர்ச்சி அடுத்த வாரம் வெளிவரும்..............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயனவியல்

## பகுதி - II , A - அமைப்புக்கட்டுரை

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01.(a) Na, Al, Cl ,Sc,Zn,Cr,Sஆகிய மூலகங்களின் பட்டியலிலிருந்து பின்வரும் இயல்புகட்கு பொருத்தமான மூலகங்களை இணங் காண்க.

1.+3 ஒட்சியேற்ற நிலையை மட்டும் (உறுதியான) காட்டும் மூலகம் / மூலகங்கள்.

..........................................

2.+6 ஒட்சியேற்ற நிலையில் ஒட்சைட்டுக்களை உருவாக்க கூடிய மூலகம் / மூலகங்கள்.

..........................................

3.மூலமொன்றில் அதியுயர் ஒட்சியேற்ற நிலையிலுள்ள அதன் அயன் கரைசலுக்குள் அம்மூலகத்தைச் சேர்க்கும்போது குறிப்பிடத்தகு அவதானமொன்றை தருவதான மூலகம்.

..........................................

4. NaoH(aq) உடன் தாக்கமுற்று வாயு வெளியேற்றத்தை தருவதுடன் அவ்விளையுக் கரைசலில் + 2 நிலையில் அம்மூலகத்தை உடைய சேர்வையைத்தரும் மூலகம்.

..........................................

5. +1 நிலையில் ஒட்சைட்டுக்களை தரக்கூடிய மூலகம் / மூலகங்கள்.

(b) அணுவென் 20 இலும் குறைந்த இரு மூலகங்கள் W,X இரண்டும் NaOH(aq) உடன் தனித்தனி தாக்கமுற்று முறையே வாயுக்கள் Y,Z இனைக் கொடுக்கும். வாயு Y ஆனது X உடன் வெடித்தலுடன் தாக்கமுற்று சேர்வை $C_1$ஐக் கொடுக்கும். வாயு Z இனை நீரில் சேர்க்கும் போது கரைந்து ஒரு அமிலக் கரைசல் $S_1$இனையும் வாயு A கொடுக்கும். கரைசல் $S_1$ உடன் W ஆனது தாக்கமுற்று ஒரு அயன் சேர்வை $C_2$ இனைக் கொடுத்தது. மூலகம் X ஆனது NaOH(aq) உடன் தாக்கமுற்று கொடுத்த கரைசல் $S_2$ ஆனது $cacl_2(aq)$ உடன் வெண்ணிற வீழ்படிவு $C_3$ ஐ தரும். எனில் இங்கு குறிப்பிட்டவற்றை உண்மையான இரசாயனக் குறியீடுகளால் இனங்காட்டுக.

(1.)

W X Y Z

$S_1$ $S_2$ $C_1$ $C_2$

$C_3$ A

2. NaOH உடன் மூலகம் X இன் தாக்கத்தின் ஈடுசெய்த சமன்பாட்டை மட்டும் தருக.

..........................................

3. மூலகம் W இன் குளோரைட்டின் புள்ளி - புள்ளடி இலத்திரன் கட்டமைப்பு யாது?

(C). மூலகம் N இன் ஒட்சைட்டுக்களைப் பற்றியது இவ்வினாவாகும்.

1. +4, +2 ஆகிய இரு நிலைகளிலும் ஒவ்வோர் நைதரசன் அணுவை உடைய அதன் ஒட்சைட்டு ஒன்றின் உலூயியின் கட்டமைப்பைத் தருக.

$O = N - N^{+2} = O$

2. சராசரியாக +1 நிலையில் ஒட்சைட்டை உடைய நைதரசனின் ஒட்சைட்டு ஒன்றில் ஏற்றுக் கொள்ளத்தக்க இரு உலூயியின் கட்டமைப்புக்கள்.

02. (a) நீறிய சுண்ணாம்புடன் முரண் தொடுகை முறையில் $cl_2(g)$ தாக்கமுறச் செய்தபோது பெறப்பட்ட விளைவில் ca = 34.68%, cl = 41.04%, O = 23.52%, H =1.16(%) காணப்பட்டன. விளைவுப் பதார்த்தத்தின் மூலர்திணிவு 346 $gmol^{-1}$

1. விளைவின் அனுபவ சூத்திரத்திரத்தைக் காண்க.

..........................................

..........................................

2. விளைவுப் பதார்த்தத்தை அமிலமாக்கியபோது $Cl_2$ வாயு வாளிப்பட்டது. ஒரு மூல் பதார்த்தம் 2mol $cl_2$ வாயுவைத் தந்தது. மேலும் விளைவானது ($ocl^-$, $cl^-$, $oh^-$ அயன்களையும் பளிங்கு நீரையும் கொண்டமை அறியப்பட்டது. எனின் விளைவுக்கு ஒரு சூத்திரத்தைத் தருக. (இது தூய சேர்வை அல்ல)

..........................................

..........................................

b) $I_2$ஆனது $Cl_2$ உடன் தாக்கத்தில் ஈடுபடும்போது HIO, உம் HCl உம் விளைபொருட்களாகும். இங்கு $H_2O$உம் ஒரு தாக்கு பொருளாகும். எனில் பின்வருவனவற்றினைத் தருக.

1. ஒட்சியேற்றத்தைக் குறிக்கும் அரை அயன் சமன்பாடு.

..........................................

2. தாழ்த்தலைக் குறிக்கும் அரை அயன் சமன்பாடு.

..........................................

3. தாக்கத்தின் பிரமானம்.

$cl_2 : I_2 : H_2O$ = .......... .......... ..........

c) $E^{\ominus}$ Ni/Ni=0.25v, $E^{\ominus}$ cd2+/cd=-0.40v என்க.

எனில் இவற்றினால் ஆக்கப்படும் நியம மின்னிரசாயன மின்கலமொன்றைக் கருதுக.

1.)கலத்தின் அனோட்டு யாது? ..............................

2. கலத்தின் கதோட்டு யாது? ..............................

3.அனோட்டுத் தாக்கம் யாது? ..............................

4. கதோட்டுத் தாக்கம் யாது? ..............................

5.கலத்தின் IUPAC குறிப்பீடு யாது? ..............................

6. கலத்தின் நியம மின்னியக்க விசை யாது? ..............................

7. $Ni^{2+}$அயன் செறிவு 2mஆக பயன்படுத்தப்படின் கலத்தின் மின்னியக்கவிசைக்கு யாது நிகழும் என பண்பறி ரீதியில் விளக்குக.

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................

மேலதிக தொடர்புகளுக்கு:-
'உதயன்' கல்விச்சுடர்,
263 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-071-4273035, 071-688005,

3.a) பின்வரும் சேதனப்பதார்த்தங்களை கருதுக.

1. சக்கர எடசீன் 2. CHO 3. KCN 4. $H_2SO_4$(dil)

5. $C_6H_5CH^2Br$ 6. $CH_3CHBr.CH_3$ 7. KOH 8. நீர்

9.) $C_2H5OH$ 10. $Br_2$ 11. உலர் $AlCl_3$


இவற்றிலிருந்து பின்வரும்வகை தாக்கவகைக்குரிய தாக்கிகள், சோதனைப் பொருட்களையும் தாக்கத்தில் தாக்கமடையும் முதலாவது தாக்க இனத்தையும் தருக. இங்கு உமக்கு ஓர் உதாரணம் தரப்பட்டுள்ளது. ஒரு வகைக்கு ஓர் உதாரணம் போதுமானது.

| தாக்கவகை | தாக்கி | சோதனைப் பொருள் | தாக்கும் முதலாவது இனம் |
|---|---|---|---|
| இலத்திரன் நாட்டப்பிரதியீடு | | | |
| கருநாட்டப் பிரதியீடு | | | |
| இலத்திரன் நாட்டக் கூட்டல் | | | |
| கருநாட்டக் கூட்டல் | | | |
| சயாதீன மூலிக பிரதியீடு | | | |
| நீக்கல் தாக்கம் | | | |

03. b)சேதனச்சேர்வை X ஆனது $C_3H_4O_2$ எனும்அனுபவசூத்திரமுடையது.மேலும் X ஆனது,

1. Cis-trans சமபகுதிய தன்மை உடையது.
11. $sp^2$ கலப்புக்காபன் அணுக்கள் 4 உம் $sp^3$ கலப்பு காபன் அணுக்கள் 2 உம் மட்டும் உடையது.
111. 1Mol1X ஆனது 1Mol $Na_2co_3$ உடன் முற்றாக தாக்கமுற 1Mol $CO_2$ ஐத் தரும் எனில்

1) X இற்கு ஏற்கத்தகு கட்டமைப்பு ஒன்றை கீழே தருக.
11. மேற்படி கட்டமைப்பு அடிப்படையில் X இன் IUPAC பெயர் யாது?
111.பின்வரும் X இன் தயாரிப்புக்குரிய ஒரு தாக்கத்திட்டத்தில் உரிய இடைநிலைகள் சோதனைப்பொருட்களை உரிய பெட்டிகளில் எழுதுக.




c)1) ஐதரோகாபன் A யானது பின்வரும் அயலடபுகளை உடையது.

அ) $cucl/nh_3$ உடன் சிவப்பு வீழ்படிவு
ஆ) ஒளியியல் தொழிற்பாடுடையது
இ) cis-jrans சமபகுதிய இயல்புடையது எனின்

1) A யின் கீத்திரம் CxHy இல் x,y க்கு சாத்தியமான இழிவு எண் பெறுமானங்களைத் தருக.

x ☐ y ☐


11) A யின் IUPAC பெயர் தருக.

2) $C_8H_{10}O_3N_2$ எனும் மூலக்கூற்றுச் சூத்திரமுடைய சேர்வை B

அ. மிகை NaOH உடன் சூடாக்க $NH_3$ வெளியேறியது.
ஆ.பகுதி அ இன் விளைவை அமிலப்படுத்த பெற்ற விளைவு Terylenc தயாரிப்பில்

பயன்படுவது ஆயின் b யின் கடட்டமைப்பைத் தருக.

04. பின்வரும் மாற்றீடுகளை மேற்கொள்ளும்போது () போன்றவற்றைப் பயன்படுத்தக்கூடாது.செவ்வகக்கூடுகளில்தாக்கஇடைநிலைகளையும், வட்டங்களில் சோதனைப் பொருட்களையும் எழுதுக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிகக்கல்வி -

ஆசிரியர் :-
ஆர்.ஜனா ஜெஸ்மின்
உதவி:-எம்.அமலா

**அலகு:- வணிகச்சூழல்,சமூகப்பொறுப்பு,அரசும் வணிகமும்**

**தயார்படுத்தல் பரீட்சை தொடர் - 02**

### பகுதி-1

★ஒருசொல்லில் அல்லது ஒரு வசனத்தில் விடை தருக.

01.நிறுவன நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்துகின்ற நிறுவனங்களால் கட்டுப்படுத்தக் கூடிய அல்லது கட்டுப்படுத்தமுடியாத காரணிகள் எவ்வாறு அழைக்கப்படும்?

..........................................................................

02. வணிகநடவடிக்கைகளின் போது மேற்கொள்ளவேண்டிய சரியான செயற்பாடுகள் என்ற கூற்று மூலம் வெளடிப்படுத்தப்படுதவது யாது?

..........................................................................

03. உலகமயமாக்கலுக்கான அடிப்படை எண்ணக்கரு அல்லது காரணம் எது?

..........................................................................

04. மிகத்துரிதமாக மாற்றமடைந்து வரும் ஒரு புறச்சுழல் எது?

..........................................................................

05. பொருளியற்சூழல் எவ்வமைப்புக்கு அகச்சூழலாக அமைகின்றது?

..........................................................................

06. அரசு வணிக நிறுவனங்களுக்காக ஆற்றும் இரு பெரும் பிரிவுப்பணிகள் எவை?

..........................................................................

07. வரிப்பளு இடம் நகர்த்தக் கூடிய வரி எவ்வகையான வரியாகும்?

..........................................................................

08. மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதம் எவ்வாறு அழைக்கப்படும்?

..........................................................................

09. இலங்கை அரசுக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தரும் தற்போதய நுண்பாக வரி எது?

..........................................................................

10. அரசின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படும்செலவினம் எவ்வாறு அழைக்கப்படும்?

★சரி-பிழை கூறுக.

11.வியாபார விழுமியம் நன்மதிப்புக்கான ஒரு திறவுகோல் ஆகும். ( )
12.ஓர் அரசியற் கட்சி அமுக்கக் குழு ஆகும். ( )
13. தனியார் துறையினரைக் கட்டுப்படுத்துவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டே அரசு வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது ( )
14.மத்திய வங்கி வணிக நிறுவனங்களுக்கு நேரடியாக நிதி வசதிகளை வழங்குகின்றது. ( )
15. விவசாய வணிகனின் நடவடிக்கையில் மிகக்கூடியளவு தாக்கத்தை ஏற்படுத்தும் புறச்சூழல் அரசியல் சூழல் ஆகும். ( )

★இடைவெளி நிரப்புக.

16.வணிகச்செயற்பாடுகள் காரணமாக நிறுவனத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்படும் சாதக,பாதக விளைவுகள் ...................... எனப்படும்.
17.உலகமயமாக்கலுக்கு உதவும் பிரதான புறச்சூழற்காரணி ...................... ஆகும்.
18.காசு ஒதுக்கு வீதத்திற்கும் வணிக வங்கிகளின் கடன் வழங்கல் வீதத்திற்கும் இடையில் ...................... தொடர்பு காணப்படுகிறது.
19.வணிகர் ஒருவர் பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல் ...................... சார் பொறுப்பு ஆகும்.
20.ஓர் அரசின் மொத்த வருமானத்திற்கும் மொத்தச் செலவுக்கும் இடையிலான வித்தியாசம் ...................... மீதி எனப்படும்.

### பகுதி - 11

01.வியாபார ஒழுக்கத்திற்கு 5 உதாரணங்கள் தருக.
02. உலகமயமாக்கலின் இருபக்க வாதங்கள் இவ்விரண்டு தருக.
03. SWOT சிறுகுறிப்பு வரைக.
04. புறச்சூழல் காரணிகள் நான்கைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்கள் தருக.
05. வியாபாரங்களுக்கு உள்ள சமூகப்பொறுப்புக்கள் ஐந்து தருக.
06. அரசு வணிகங்களை கட்டுப்படுத்துவதற்கான காரணிகள் இரண்டு தருக.
07. ஆக்கப்பணிகள், ஊக்கப்பணிகள் வழங்கும் நிறுவனங்கள் இவ்விரண்டு தருக.
08. வரி விடுதலை, வரிச்சலுகை, வரிவிலக்கு ஆகிய சொற்பதங்களை விளக்குக.
09. உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் தனியாரையும் ஈடுபடுத்தியமைக்கான காரணங்கள் நான்கு தருக.
10. கைத்தொழில் அபிவிருத்திச் (IDB) சபையின் பணிகள் நான்கு தருக.

**கடந்த 17.02.2009 இல் வெளிவந்த வணிகக்கல்வி தயார்படுத்தல் பரீட்சைத் -01இற்கான விடைக்குறிப்புக்கள்**

01. 4 02. 3 03. 5 04. 3 05. 1 06. 1 07. 4 08. 3 09. 4 10. 2
11. கைத்தொழில் அபிவிருத்திச் சபை 12. தனிநபர் சிறப்புத்தேர்ச்சி
13. சமூக முதல் 14. மரபுரீதியானது,நவீனமானது
15.1 ஆம் நிலை,2 ஆம் நிலை, 2 நேரடியாக பிரித்தெடுத்து பயன்படுத்தல் , மாற்றத்திற்கு உட்படுத்தி பயன்படுத்தல்.
16. இலக்கு 17. சிதாவக்கை,பாதுக்கை 18. உற்பத்தி செயற்பாடு
19. வியாபாரம் 20. வணிகத்தின்

*மாணவர்களே பகுதி-11 க்கு சுயமாகவே விடையளிக்க கற்றுக்கொள்ளுங்கள்

**கடந்த 27.01.2009,03.02.2009 இல்களில் வெளிவந்த அரசியலுக்கான விடைக்குறிப்புக்கள்.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. 2 | 02. 3 | 03. 2 | 04. 3 | 05. 4 | 06. 3 | 07. 4 | 08. 2 | 09. 4 | 10. 2 |
| 11. 1 | 12. 1 | 13. 2 | 14. 3 | 15. 4 | 16. 3 | 17. 1 | 18. 3 | 19. 4 | 20. 3 |
| 21. 3 | 22. 4 | 23. 1 | 24. 1 | 25. 3 | 26. 3 | 27. 1 | 28. 3 | 29. 2 | 30. 3 |
| 31. 3 | 32. 3 | 33. 3 | 34. 4 | 35. 1 | 36. 1 | 37. 1 | 38. 1 | 39. 2 | 40.1 |

**இவ் இதழில், மாவட்ட ரீதியாக முன்னிலையில் திகழும் ஆசரியர்களினதும், மூத்த அனுபவமிக்க ஆசிரியர்களினதும் மாதிரி வினாத்தாள்கள் தொடர்ச்சியாக வெளிவரவுள்ளன.**

கல்விப் பொதுத் தராதரப் ப.திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

## அரசியல் - 1

ஆசிரியர் :
எம்.அப்துல் றஷீம் B.A,Dip in Edu
அல்-மர்ஜான் மகளிர் கல்லூரி,சம்மாந்துறை

**அரசியல் மூலத்தத்துவங்கள்**

**கடந்தவாரத் (17.02.2009) இன் தொடர்ச்சி**

இல.30 முதல் 34 வரையான வினாக்கள் விதிக்கப்பட்ட நாடுகளின் அரசாங்க முறைபற்றியதாகும். அவ் வினாக்களுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

30. பிரித்தானியப் பாரளுமன்றம்,
A- இரு மன்றங்களையும் முடியையும் கொண்டது.
B - நாடு முழுவதற்கும் கட்டமியற்றும் அதிகாரத்தை அது பெற்றுள்ளது.
C- அதன் சட்டவாக்க அதிகாரம் தற்போது சவால்களுக்குட்பட்டுள்ளது.
D - அது நாம நிருவாகியினால் மட்டுமே கலைக்கப்படுகிறது.
1. ABC 2. BCD 3. ACD 4. ABD ( )

31. ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி,
A வாக்காளர்களின் அறுதிப்பெரும்பாண்மை வாக்குகளால்தெரிவு செய்யப்படுகிறார்.
B தேர்வாளர் கல்லூரியினால் தெரிவு செய்யப்படுகிறார்.
C காங்கிரஸினால் இயற்றப்படும் சட்டங்களுக்கு ஒப்பமிடும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்
D அரசினதும், அரசாங்கத்தினதும், அமைச்சரவையினதும் தலைவராவர்.
1.ABC 2.BCD 3.ACD 4.ABD ( )

32. இந்திய தலைமை அமைச்சர்,
A நாம நிருவாகியினால் நியமிக்கப்படுகிறார்.
B ஜனாதிபதிக்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டியவராவர்.
C பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு சிபார்சு செய்பவர்.
D நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பதவி நீக்கப்படுவார்.
1.ABC 2. BCD 3.ACD 4. ABD ( )

33.முன்னாள் சோவியத் குடியரசின் சுப்றிம் சோவியத் மன்றம்,
A- இரு மன்றங்களைக் கொண்டிருந்ததது.
B -நியமன உறுப்பினர்களையும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டிருந்தது.
C -இரு மன்றங்களும் சமமான அதிகாரத்தைக் கொண்டிருந்தது.
D -சோவியத் யூனியனுக்கான பிரிசீடியத்தை ( தலைமைக்குழு) தெரிவு செய்தது.
1. ABC 2.BCD 3. ACD 4. ABD ( )

34. பிரான்சிய ஜனாதிபதி,
A -தனது சுயவிருப்பின் பேரில் அமைச்சர்களை நியமிக்கின்றார்.
B- நீதித்துறைச் சுதந்திர தினத்தின் பாதுகாவலராவார்
C- ஐந்து வருட காலத்திற்கு மக்களால் தெரிவு செய்யப்படுகிறார்.
D அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு ஒப்புதலளிக்கிறார்
1. ABC 2. BCD 3.ACD 4.ABD ( )

இல. 35 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றினதும் இரு கூற்றுக்கள்இடம்பெறுகின்றன.ஒவ்வொருவினாவிலும்இடம்பெறுசோடிக்கூற்றுக்குப் பொருத்தமான விவரிப்புக்களைப் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தெரிவு செய்து ஒவ்வொரு வினாவுக்கும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் 1,2,3,4 என அடையாளமிடுக.

| கூற்று-1 | கூற்று-2 | இலக்கம் |
|---|---|---|
| உண்மை | உண்மை | 1 |
| பொய் | உண்மை | 2 |
| உண்மை | பொய் | 3 |
| பொய் | பொய் | 4 |

35.கூற்று-1
ஓர் அரசியல் அலகாக ஒன்று பட்டுச் செயற்படும் குடிமக்களை உள்ளடக்கிய ஒழுங்கு படுத்தப்பட்ட குழுக்களே அரசியல் கட்சி ஆகும்.
கூற்று-2
அரசியல் கட்சிகள் ஒரு நாட்டின் அரசியலில் நேரடியாக ஈடுபடுவதில்லை( )

36. கூற்று-1
ஆட்சியில் செல்வாக்குச் செலுத்தித் தமது நலன்களை அடைந்து கொள்ளும் அமைப்புகளே அமுக்கக் குழுக்களாகும்.
கூற்று-2
அமுக்கக்குழுக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்காகக் கொண்டவை ஆகும்.

37. கூற்று-1
மந்திரிசபை அரசாங்க முறையில் சகல நிருவாகக் கடமைகளும் உண்மை நிருவாகியின் பெயராலேயே மேற்கொள்ளப்படும்.
கூற்று-2
ஜனாதிபதி அரசாங்க முறையில் சட்டத்துறைக்கும் நிருவாகத்துறைக்கும் இடையிலான தொடர்பு மிக நெருக்கமானதாகும்
கூற்று -2 ஒப்பங்கோடல் சில நாடுகளில் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பதிலாக நடாத்தப்படுவதுண்டு.

39. கூற்று-2
சட்டத்துறையினால் ஆக்கப்படும் சட்டங்களின் யாப்புறு தன்மையை பரிசீலிப்பதே நீதிப்புனராய்வு அதிகாரம் ஆகும்.
கூற்று-2
நீதிப்புனராய்வு அதிகாரம் மக்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாக்கிறது

40. கூற்று-1
கூட்டாகமுடிவெடுத்தலும் விளைவுகளுக்குக் கூட்டாகப்பொறுப்புக்கூறுதலுமே கூட்டுப்பொறுப்பாகும்.
கூற்று-2
கூட்டுப்பொறுப்பு அரசாங்கத்தின் ஒற்றுமையையும் பலத்தையும்அதிகரிக்கிறது

தொடர்ச்சி அடுத்த வாரம் வெளிவரும்.............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org